# உதயன்

30°c – 25°c
மழைக்கான சாத்தியம் உண்டு

சுடர் 30 கதிர் 341 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 16, திங்கட்கிழமை 02.11.2015




## 6 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது; அவர்களில் ஒருவர் 15 வயதுச் சிறுவன்

மன்னார், நவ.2

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்துக் கைதான 6 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ் பெல்டானோ நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

படகு ஒன்றில் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறி 6 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்தனர். அவர்களில் ஜீவன் பிரைசர் (வயது-15) என்ற சிறுவனும் அடங்குகின்றான்.


குறித்த 6 இந்திய மீனவர்களும் மன்னார் மாவட்டக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதன்போது குறித்த மீனவர்களை இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜா நேரில் சென்று பார்வையிட்டார்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அவர்களை விசாரணைகளின் பின் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். விசா ரணைகளை மேற் கொண்ட மன்னார் பதில் நீதிவான்

பக்.24

# சர்வதேச ஆலோசகர்கள் வடக்கே பயணிப்பதை தடுத்து வருகிறது அரசு

## முதலமைச்சர் விக்கி சாடல்



முல்லைத்தீவு, நவம்பர் 2

வடக்கு மாகாணத்தில் போதுமானளவு உளவள ஆலோசகர்கள் இல்லை. அதனால் இந்தியா போன்ற பிற நாடுகளிலிருந்து ஆலோசகர்களைப் பெறுவதற்கு முயற்சி செய்தபோதும் மத்திய அரசு அதற்கு உடன்படவில்லை. மாறாகத் தெற்கிலிருந்து ஆலோசகர்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்திருந்தது. ஆனால் தெற்கிலிருந்து வருகின்ற ஆலோசகர்கள் தமிழ்மொழியைத் தெரிந்திருக்காமையால் அவர்களின் உதவிகள் எமக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை என்று வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வேள்ட் கென்சேன் நிறுவன ஆதரவுடன் குழந்தைகளைக் கொண்டாடுவோம் எனும் நிகழ்வு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று சிறுவர்கள் பாதுகாப்பு

பக்.24

## புலம்பெயர் அமைப்புகளின் தடை குறித்து அரசு மீளாய்வு

கொழும்பு, நவ. 2

மகிந்த அரசு தடை செய்த புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் மீதான தடை குறித்து மீளாய்வுகளை மைத்திரி அரசு மேற்கொண்டு வருவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள் என்று, 16 புலம்பெயர் அமைப்புக்களையும். தீவிரவாதத்துக்கு ஆதரவளித்தனர் என்ற 400 தனி நபர்களையும், மகிந்த ராஜபக்ச அரசு தடை செய்தது.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் 1373 தீர்மானத்துக்கு அமைய, இந்த அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவிப்பு, கடந்த 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.

தடைசெய்யப்பட்ட இந்த அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் பட்டியல் பாதுகாப்பு அமைச்சினால் மீளாய்வு செய்யப்பட்டு வருவதாகவும், இந்த மீளாய்வு அறிக்கை இந்தமாதம் வெளிவிவகார அமைச்சிடம் கையளிக்கப்படும் என்றும் பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பக்.24

## வடபகுதியைப் பிரபாகரனிடம் கையளிக்க இணங்கினார் மகிந்த

### சொல்ஹெய்ம் வெளியிடும் தகவல் இது

லண்டன், நவ.2

வடக்கைப் பிரபாகரனிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தம்மிடம் கூறினார் என்று இலங்கைக்கான நோர்வே யின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமையை வழங்க மகிந்த தயாராக இருந்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

லண்டனில் கடந்த 28ஆம் நாள் நடந்த, ஒரு உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, இலங்கையில் நோர்வேயின் அமைதி முயற்சிகள் என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய போதே எரிக் சொல்ஹெய்ம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரபாகரனுடன், ராஜபக்ச பின்கதவுப் பேரங்களைச் செய்ய வேண்டிய தேவை இருந்தது. சிங்களவர்களின் மீட்பராக அவர் தன்னைக் காட்டிக் கொண்டார்.

ஆனால், தனது அரசியல் எதிர்காலத்துக்கு உதவும் என்றால், சொந்த நலனுக்காக எத்தகைய அழுக்குப் பேரங்களை பேசவும் மகிந்த ராஜபக்ச தயாராக இருந்தார்.

அத்துடன் வடக்கைப் பிரபாகரனிடம் ஒப்படைக்கத் தயாராக

பக்.24

## பிரபாகரன் நல்ல மனிதர்

### கருணாவுக்குப் பிறந்த ஞானம்



கொழும்பு, நவ.2

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நல்ல மனிதர் என்ற போதிலும், உலகமயமாதல் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இந்திய ஆங்கில ஊடகமான நியூ இந்தியன் எக்ஸ்பிரசுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் கருணா மேலும் கூறியுள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகுவதற்குத் தலைவர் பிரபாகரனே காரணம். சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்ட எம்மைத் தலைவர் பிரபாகரன் நம்பவில்லை. 1990 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் துரோகம் இழைத்ததாக மகேந்திராஜா என்ற மாத்தையாவுக்கு நேர்ந்த கதியே எனக்கும் நேரும் என அச்சுறுத்தினார்.

2002 ஆம் ஆண்டு டிசெம்பர் 5 ஆம் திகதி ஒஸ்லோ பேச்சின் போது, புலிகளின் பேச்சுக் குழுவின்

பக்.24

## பொருத்தமான நேரம் இலங்கைக்கு வருவேன்

### அருட்தந்தை இம்மானுவேல் அரசுக்கு பதில்



லண்டன், நவ.2

உண்மையான நல்லிணக்கத்தை அடைவதற்காக மக்களுக்கும் அவர்களது தலைவர்களுக்கும் உதவக்கூடிய பொருத்தமான நேரம் எனக்கு அமையும்போது இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வேன்.

இவ்வாறு உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவேல் நேற்று உதயனுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகைதர முன்பாக என்னைப் பற்றியும் எமது செயற்பாடுகள் பற்றியும் முன்னைய மகிந்த அரசால் புனையப்பட்ட கட்டுக்கதைகளும், அவதூறுச் செய்திப் பரப்புரைகளும் எப்படியாகக் களையப்படப் போகின்றன என்பதை அவதானித்துக் கொண்டிருக்கின்றேன் என்றும் அவர் கூறினார்.

பக்.24

## பயங்கரவாதச் சட்டம் நீங்கினாலும் கைதிகள் விடுதலை உறுதியில்லை

### அமைச்சர் மாரப்பன கருத்து



கொழும்பு, நவ.2

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதன் மூலம் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் விடுதலை செய்யப்படுவதை உறுதி செய்ய முடியாது எனச் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு அவர் கருத்து வெளியிடுகையில்,

ஏற்கனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை, தற்போது சட்டத்தை நீக்குவதன் மூலம் விடுதலை செய்ய முடியாது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டாலும் கடந்த கால

பக்.24

## பொலிஸார் இருவர் லஞ்சம் பெற்றனரா?

### கடையில் பொருத்தப்பட்ட கமராவில் பதிவாகியதால் மாட்டினர் என தகவல்

யாழ்ப்பாணம், நவ. 2

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடைகளில் லஞ்சமாகப் பணம் பெற்று வருகின்றனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. ஒரு கடையில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் அவர்கள் பணம் பெறுவது பதிவாகியுள்ளதால் அவர்கள் மாட்டிக் கொண்டனர் என்று கடையில் நின்ற பொதுமக்கள் கூறினர்.

அந்தச் சம்பவம் பற்றி அறிந்துள்ளதாக பொலிஸ் தகவல்களும் தெரிவிக்கின்றன.

எனினும் அந்த விடயம் இன்னும் உயரதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லையா அல்லது தெரிந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையா என்பது தெரியவில்லை.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தொலைபேசி மூலமாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும், எனினும் முறைப்பாடு பதிவு

பக்.24

## பெரிய போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை படையினர்

### சொல்கிறார் டெஸ்மன் டி சில்வா



கொழும்பு, நவ. 2

இறுதிப்போரின் மனித அவலங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே பொறுப்பு என்று குற்றம் சுமத்தியுள்ள டெஸ்மன் டி சில்வர், இராணுவத்தினர் பெரிய போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சட்ட ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நிபுணர்களுள் ஒருவராக டெஸ்மன்ட் டி சில்வா செயற்பட்டிருந்தார். அவர் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்டப் போரின் போது விடுதலைப் புலிகளே போர்க் குற் றங்களைப் புரிந் துள்ளனர். போர் தவிர்ப்பு வலயத்தினுள் விடுதலைப் புலிகள் பொதுமக்களுடன் சேர்ந்து தமது ஆயுத தளபாடங்களை நகர்த்திச் சென்றது முத லாவது போர்க் குற்ற நடவடிக்கை. அதனால் அங்குஏற்பட்ட மனித அவலங்களுக்கு அவர்களே பொறுப்பு. அத்துடன் இறுதித் தருணத்தில் விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர். எனினும் இராணுவத்தினர் அவ்வளவாக போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை சிறுதவறுகளே செய்திருக்கலாம்- என்றார் டெஸ்மன்ட் டி சில்வா. (த-5)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சேதமான பொலிஸ் நிலையங்கள் சகல வசதிகளுடன் நிறுவப்படும்

## பொலிஸ்மா அதிபர் பருத்தித்துறையில் தெரிவிப்பு

வடமராட்சி, நவ.2

போர்க் காலத்தில் வடக்கு- கிழக்கில் சேதமாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்கள் மீண்டும் சகல வசதிகளுடன் நிறுவப்படும். தமிழ் இளைஞர் யுவதிகளை மேலும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் பருத்தித்துறையில் தெரிவித்தார்.

பருத்தித்துறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலைய கட்டடத்தைச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் இணைந்து சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டி திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி சிறந்த முறையில் நடைபெறுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். எந்த ஒரு அபிவிருத்தியிலும் மக்களின் பங்களிப்பு மிகமிக அவசியம்.அந்த வகையிலே பொலிஸ் தேவையின் அவசியம் மக்கள் மத்தியில் நன்கு உணரப்படுகிறது. அந்த வகையிலே இற்றைக்கு 68 ஆண்டுகளுக்கு முன்னர் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் முதன் முதலில் திறந்து வைக்கப்பட்டது. அந்த பொலிஸ் நிலையம் 1983 வரை சிறப்பாக இயங்கி வந்தது. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள், பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாக 1996 வரை இந்தப் பொலிஸ் நிலையத்தை இயக்க முடியாத சூழல் ஏற்பட்டது. அதன் பின் இன்று வரை பொலிஸ் நிலையம் தற்காலிக கட்டடத்திலேயே இயங்கி வந்தது. இதனால் நிரந்தரக் கட்டடம் ஒன்று கட்டவேண்டிய அவசியம் உணரப்பட்டது. அதன் காரணமாக 100 மில்லியன் ரூபா செலவில் பொலிஸ் திணைக்களத்திற்குச் சொந்தமான இந்தக் காணியில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளோடு நவீன முறையில் பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் பிரதான நோக்கங்கள் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுதல் ஆகும். அத்துடன் மக்களின் உயிரைக் காத்தல், சொத்துக்களுக்குப் பாதுகாப்பளித்தல், வீதிப் போக்குவரத்தைச் சீர் செய்தல் ஆகும். பொலிஸ் திணைக்களம் இப்போது மகத்தான சேவையை ஆற்றி வருகிறது. குற்றங்களை அடையாளம் காணுதல், கண்டு பிடித்தல், விசாரணை செய்தல், போதை வஸ்துப்பாவனையை ஒழத்தல், சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பனவும் பணிகளில் அடங்கும். இதற்கான மனித வளங்களும் ஏனைய வள்ங்களும் எம்மிடம் காணப்படுகின்றன

பொலிஸ் நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்படும்போது வடக்கு-கிழக்குக்குக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களைப் போன்று உட்கட்டமைப்பு வசதிகள், ஏனைய நவீன வசதிகளை கொண்ட பொலிஸ் நிலையங்களை நிறுவுவதில் பொலிஸ் திணைக்களம் கூடிய கவனம் செலுத்துகின்றது. இதற்கு முக்கிய காரணம் கடந்த காலப் போர்ச் சூழலில் பல பொலிஸ் நிலையங்கள் சேதமாக்கப்பட்டமையே ஆகும். இதனால் சேதமாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்கள் புதிதாகச் சகல வசதிகளுடன் நிறுவப்பட்டுச் சட்டம் ஒழுங்கை பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த மக்களுக்கு எந்த வித அச்சமும் இன்றி சமாதானமாக வாழும் சூழலை பொலிஸார் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். அத்துடன் வடக்கு கிழக்கிலிருந்தே இளைஞர் யுவதிகளை பொலிஸ் துறையில் இணைத்து அந்த இளைஞர் யுவதிகளையே வடக்கு-கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பணிபுரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக கடந்த மாதங்களில் சுமார் 914 பேர் இந்த பிரதேசத்தில் இருந்து பொலிஸ் திணைக்களத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். அவர்கள் இப்போது வடக்கு-கிழக்கில் சேவையாற்றி வருகின்றனர். மேலும் 200 இளைஞர் யுவதிகளை வடக்கு-கிழக்கில் இருந்து பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்ள நாம் திட்டமிட்டுள்ளோம்-என்றார். (த-109)

# அடையாளம் காணப்பட்டனர் பெண்ணைக் கடத்திய 11 பேர்

கரணவாய், நவ.2

வடமராட்சி கம்பர்மலைப் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

கடந்த 16 ஆம் திகதி கம்பர்மலைப் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் நீதிமன்றில் இருந்து வந்து கொண்டிருந்த போது, வாகனத்தில் மர்ம நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பெண்ணின் கணவர் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களை அடையாளம் காண்பதற்கான அடையாள அணிவகுப்பு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் இடம்பெற்றது. குறித்த பெண் சந்தேக நபர்கள் 11 பேரையும் அடையாளம் காட்டியதை அடுத்து அவர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-108)

# மாகாணங்களின் கல்வி அதிகாரிகள் மத்திய அரசின் பின்னே செல்கின்றனர்

## சாடுகின்றது தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், நவ. 2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாகாண அமைச்சு சார்ந்த திணைக்களங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரிகள் மத்திய அமைச்சின் நிகழ்ச்சி நிரல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு தமது கடமைப்பொறுப்புக்களையும் உதாசீனம் செய்கின்றனர். அதனால் கல்விப் பணிகளில் இடையூறு ஏற்படக் காரணமாக அமைந்துவிடுகிறது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறிப்பாக மாகாண கல்வி அமைச்சுச்சார்ந்த திணைக்களங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரிகள் தமது கடமைப் பொறுப்புக்களை விட்டுவிட்டு மத்திய கல்வி அமைச்சால் அனுப்பப்படுகின்ற அழைப்புக் கடிதங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கொழும்புக்குப் பறந்தோடித் திரிகின்றனர். இதனால் மாகாணம் சார்ந்த பல பணிகள் தாமதமாவதாகவும் அறிகின்றோம்.

குறிப்பாக அதிபர்கள், ஆசிரியர்களின் பதவியுயர்வுகள், படிநிலைமாற்றங்கள் வடகிழக்கு மாகாணங்களில் இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை. இந்த விடயம் தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு பலமுறை கோரிக்கை விடுத்தும் அவை நடைபெறவில்லை. இதனால் பதவியுயர்வு பெறவேண்டிய பெருமளவான ஆசிரியர்களும், அதிபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு மூல காரணம் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தமது கடமை நாள்களில் பெரும் பகுதியை மத்திய கல்வி அமைச்சின் நிகழ்ச்சி நிரலுக்குச் செலவிடுவதே. மாகாண அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் இவர்கள் தமது கடமைப்பொறுப்புக்களை எவ்வளவுதூரம் நிறைவேற்றியிருக்கின்றார்கள் என்பதை எவரும் கண்டுகொள்வதுமில்லை.

இதைவிட மாகாண அமைச்சில் உள்ள குறைகளை அங்கு எடுத்துக்கூறி, மாகாணத்தில் நடைமுறைப்படுத்தும் புதிய விடயங்களை மத்திய கல்வி அமைச்சுக்கு எடுத்துச் சென்று அவற்றை நடைமுறைப்படுத்தாமல் தடுப்பதற்கும் இவர்கள் காரணமா? என்ற கேள்வியும் எழுந்து நிற்கின்றது. இவர்கள் மத்திய கல்வி அமைச்சுக்கோ அல்லது மத்திய கல்வி அமைச்சின் செயற்றிட்டங்களுக்கோ செல்வதற்கு உரிய நடைமுறைகளைப் பின்பற்றுகின்றார்களா? திணைக்கள கடமையில் உள்ளவர்கள் மாகாண திணைக்களம் சார்ந்த பணிகளைப் புறந்தள்ளிச் செல்வதால் பலருக்கு பல்வேறுவிதமான அசௌகரியங்கள் உருவாகியமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அதனாலேயே பல்வேறு பணிகளிலும் தாமதங்கள் ஏற்படுகின்றன.

இப்போது வடக்கு மாகாணத்தில் ஏழு நாள்களும் பாடசாலை என்ற நடைமுறை படிப்படியாக மாறி வருகின்றது. சனிக்கிழமை பதில் பாடசாலை, ஞாயிற்றுக் கிழமை பரீட்சைகளும், கருத்தரங்குகளும் நடைபெறுவதனை காணமுடிகின்றது. அத்தோடு ஆசிரியர்களுக்கு மீதமாக உள்ள சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் செயலமர்வுகள் நடைபெறுகின்றன.

இவை எல்லாம் வடகிழக்கு மாகாண கல்வியைச் சீராக்க நினைக்கும் மாகாண கல்வி அமைச்சின் நல்நோக்கங்களுக்கு உரித்தானவை அல்ல. மத்திய கல்வி அமைச்சின் வருடாந்த நாள்காட்டியில் உள்ள தேசிய பரீட்சைகளை மட்டுமே மாகாண அமைச்சுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து மத்திய கல்வி அமைச்சு மதம்சார்ந்த நிகழ்வுகளைப் புறந்தள்ளி நடைமுறைப்படுத்தும் நாள்காட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய தேவை இல்லை என்பதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டி நிற்கின்றது.

விசேடமாக வடக்கு மாகாணத்தில் மட்டுமே காலை 8 மணிக்கு பாடசாலை தொடங்கி பிற்பகல் 2 மணிக்கு முடிவடைகின்றது. ஏனைய மகாணங்களில் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிக்கு நிறைவடைகின்றது. இதனையும் ஏனைய மாகாணங்களில் உள்ளது போன்று உருவாக்க வேண்டும் என்பதனை பலரும் பலகாலமாக வலியுறுத்தி நிற்கின்றனர். இதனால் பாடசாலை செல்லும் நேரத்தில் உள்ள போக்குவரத்து நெருக்கடி குறைவடையும் என்பதனையும் சுட்டிக்காட்டியுள்ளனர். விசேடமாக வடமாகாணத்தில் தற்போது வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து விபத்துக்கள் அதிகரித்துள்ளமையை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.- என்றுள்ளது. (ற-4)

# அம்பாறையில் யானைகள் அட்டகாசம்

அம்பாறை, நவ.2

அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் அஷ்ரப் நகர் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு காட்டு யானை ஒன்று புகுந்து சேதம் ஏற்படுத்தியுள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அண்மைக்காலமாக அஷ்ரப் நகர் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் இந்தப் பிரதேச மக்களின் உடமைகள் சேதமாக் கப்படுவதுடன் உயிர்களும் காவு கொள்ளப்பட்டு வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

இதேவேளை, கடந்த வாரம் இதே கிராமத்தைச் சேந்த பெண்ணொருவர் யானையின் தாக்குதலுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றார். நேற்றுமுன்தினமும் அலியார் கமறுதீன் (வயது -53) எனும் குடும்பஸ் தரும் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவ்வாறான நிலை மேலும் தொடரா வண்ணம் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு சென்று இப்பிரதேச மக்களின் பாது காப்புக்கு நடவடிக்கை முன்னெ டுக்கப்படும்.- என்றார். (ற)

# யானைகளைக் கட்டுப்படுத்த மக்களுக்கு யானைவெடிகள்



யானையால் பிடுங்கி எறியப்பட்ட தென்னை

கிளிநொச்சி, நவ.2

ஒட்டுசுட்டான் பகுதியில் இரவு வேளையில் குடிமனைக்குள் நுழையும் காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்கு மக்களிடம் யானை வெடிகள் கையளிக்கப்பட்டுள்ளன என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் காட்டுயானைகளின் பெரும் அட்டகாசத்தால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அவலத்தை எதிர்நோக்கினர். முத்துஐயன்கட்டுகுளம், கனகரத்தினபுரம், முத்துவிநாயகபுரம் கற்சிலைமடு, மன்னாங்கண்டல், ஜீவநகர், பேராறு போன்ற கிராமங்களுக்குள் இரவு வேளையில் உள்நுழையும் யானைகள் மக்களின் பயிர்களை அழித்து தோட்டங்களுக்கும் பெரும் சேதத்தை விளைவித்துள்ளன. காலபோக பயிர்ச்செய்கையில் தற்போது விவசாயிகள் ஈடுபட்டுள்ள நிலையில் யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது- யானைகளின் அட்டகாசம் ஒட்டுசுட்டான் பகுதியில் அதிகமாகவே காணப்படுகின்றது. யானைகளால் அழிக்கப்பட்ட பயிர்களுக்கான நட்ட ஈடுகள், நிவாரணங்கள் என்பன வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினூடாகப் பெற்றுக் கொடுக்கப்படும். அத்துடன் யானைகளின் பிரவேசத்தைக் கட்டுப்படுத்த மக்களுக்கு தேவையான யானை வெடிகள் வழங்கப்பட்டுள்ளன.- என்றார்.

(ற-21,ரி7,500)

# அரசியல் செல்வாக்குடனான காடழிப்பு யாரை குடியேற்ற என்பது கேள்வியே

## மர நடுகை விழாவில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.2
மன்னார் நானாட்டானிலிருந்து முல்லைத்தீவு வரையில் உள்ள காடுகளின் நடுவில் மரங்கள் வெட்டியழிக்கப்பட்டு நிலமானது வெளியாக்கப்பட்டுள்ளதை கூகுள் படம் பளிச்சென்று காட்டியது. அரசியல் செல்வாக்குடன் காட்டை அழிக்கும் கைங்கரியம் கைகூடி வருகின்றது என்பது கண்கூடு. இந்த இங்களில் யாரைக் குடியமர்த்தப் போகின்றார்கள் என்பது கேள்விக்குறியே என்று வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதத் தொடக்க நிகழ்ச்சி யாழ்ப்பாணம் செம்மணி உப்பாற்றங்கரையில் நேற்று இடம்பெற்றது. அதில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு. சம்பிரதாயபூர்வமாக மரக்கன்றுகளை நட்டதுடன், மர நடுகைப் பாடல் இறுவட்டையும் வெளியிட்டு வைத்தார்.

அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் அங்கு தெரிவித்ததாவது:-

வடபகுதியில் காணப்பட்ட பல காட்டு மரங்கள் - பனை மரங்கள் - தென்னை மரங்கள் எனப் பெருவாரியான மரங்கள் வெட்டப்பட்டு பங்கர்களும் - எல்லை வேலிகளும் அமைக்கப்பட்டன. மேலும் காட்டு மரங்கள் விறகுத் தேவைகளுக்காக அனுமதியுடனும் - களவாகவும் வெட்டப்பட்டன.

இதனால் நாட்டில் மழையில்லாமல் போனது. போரால், சுவாசிப்பதற்குக் கூட சுத்தமான காற்று இல்லாமல் போனது. இதனால் இயற்கைச் சமனிலை குழம்பியுள்ளது. போர் முடிவுக்கு வந்த போதும் இயல்பு நிலை இன்னும் திரும்பவில்லை. கடந்த காலத் தவறுகளைச் சீர்செய்ய வேண்டியதாகவுள்ளது.

அளவுக்கு அதிகமான இரசாய உரப் பாவனையால் நிலத்தடி நீரில் நைத்திரேற்றின் அளவு அதிகமாகி, நிலத்தடி நீர் குடிப்பதற்கு ஒவ்வாததாகி விட்டது. இதைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இரசாயன உரப் பாவனையைக் கட்டுப்படுத்தி இயற்கைப் பசளைகளை உருவாக்கு வதற்கும், விறகுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மரங்களை உருவாக்க வேண்டியது எமது பொறுப்பாகியுள்ளது. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் வீட்டுக்கு வீடு மரம் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இங்கு சிலர் மரங்களை அழிப் போம், மனைகளைக் கட்டுவோம் என்று இயற்கையைப் பாழாக்கி வருகின்றார்கள்.





மன்னார் நானாட்டானிலிருந்து முல்லைத்தீவு வரையில் ஒரு கோடு கீறினால் அந்தக் கோட்டின் நடுவில் பல இடங்களில் காட்டினுள் களவாக மரங்கள் வெட்டப்பட்டு நிலமானது வெளியாக்கப்பட்டுள்ளதை கூகுள் படம் பளிச்சென்று காட்டியது.

யார் இதைச் செய்கின்றார்கள். விலையுயர்ந்த காட்டு மரங்கள் எவ்வாறு களவாகக் கடத்திச் செல்லப்படுகின்றன. வன இலாகா அதிகாரிகளும் வனவிலங்குகள் திணைக்கள அதிகாரிகளும் என்ன செய்கின்றார்கள் ஏது செய்கின்றார்கள் என்பதை நாம் அறிய முடியாமல் இருக்கின்றது. இவை மத்திய அரசின் கீழ் வரும் திணைக்களங்கள். அரசியல் செல்வாக்குடன் தான் இந்தக் காட்டை அழிக்கும் கைங்கரியம் கைகூடி வருகின்றது என்பது கண்கூடு. இந்த இடங்களில் எல்லாம் யாரைக் குடியமர்த்தப் போகின்றார்கள் என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது.

காட்டின் நடுவே மொட்டையாக் கப்படும் இடங்கள் மீளவும் மரங்கள் வளர்த்துப் பாதுகாக்கப்பட வேண்டும். எமது வன இலாகா அலுவலர்கள் இனியாவது விழித்துக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன். அந்தத் திணைக்களத்தின் பணியாளர் வெற்றிடங்களுக்குப் பெருவாரியாக வடமாகாணத்துக்கு · வெளியில் இருந்து ஊழியர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அறிகின்றேன். வெளியில் இருந்து வருபவனுக்கு எமது இயற்கை நிலையைப் பேணிக் காக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்காது. இவர்களால் எமது மக்களின் வேலை வாய்ப்புக்கள் தடைப்படுகின்றன. இவ்வாறான சிக்கல்கள் மத்தியில்தான் நாங்கள் மரம் நடும் இந்த கைங்கரியத்தை ஆரம்பித்துள்ளோம் - என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன், த.சித்தார்த்தன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் ஒரு சில மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்கள அதி காரிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ம-5,101)

# வனப் பகுதிகள் விரைவாக அழிக்கப்பட்டு வருகின்றன

## வடமாகாண பிரதம செயலாளர் கவலை

யாழ்ப்பாணம், நவ.2
இலங்கையில் இடம்பெற்ற 81 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் போது நாட்டின் 84 வீத நிலப் பரப்பு வனப்பகுதி. ஆனால் 2013ஆம் ஆண்டு கணக்கெடுப் பின்படி நாட்டின் 24 வீதமே வனப் பகுதியாக உள்ளது என்று வட மாகாண பிரதம செயலாளர் பத்தி நாதன் தெரிவித்தார்.

நேற்று யாழ். செம்மணிப் பகுதியில் வடக்கு மாகாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெற்ற மர நடுகை மாதத்தின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் இயற்கை வளங்களில் ஒன்றான வனப் பகுதியானது விரைவாக அழிக்கப்படுகின்றது. இலங்கை நாட்டில் இயற்கை வளமான வனப் பகுதியானது 1981ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் பிரகாரம் 84 வீதம் வனப்பகுதியாக இருந்த்து. ஆனால் இதனுடன் தொடர்புடைய அமைச்சின் 2013ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம் 24 வீதமாக வேகமாகக் குறைவடைந்துள்ளது .

இந்த சோக விவரத்திலும் மன நிறைவான விவரமாக உள்ள தகவல் குறித்த 24 வீதத்தில் பெரும் பகுதி வடக்கு மாகாண வனப் பகுதிதான். இருப்பினும் பல சம்பவங்களின்போதும் அழிக்கப்பட்ட வனப்பகுதிக்காக வும் சம ஈட்டு முயற்சிற்காகவும் இன்று இலங்கை மட்டுமன்றி பல நாடுகளும் முயற்சித்து வருகின்றன. அதனை இங்கும் மேற்கொள்ள எடுத்த முயற்சியை வரவேற்கின்றேன்.- என்றார்.

> “ அழிக்கப்பட்ட வனப்பகுதிக்காகவும் சம ஈட்டு முயற்சிற்காகவும் இன்று இலங்கை மட்டுமன்றி பல நாடுகளும் முயற்சித்து வருகின்றன. அதனை இங்கும் மேற்கொள்ள எடுத்த முயற்சியை வரவேற்கத்தக்கது.

(ம-101)

# மாணவர் மீதான தாக்குதலை கண்டித்து நேற்று யாழில் வகுப்புப் புறக்கணிப்பு

## உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்கள் முன்னெடுப்பு

கொழும்பு, நவ.2
கொழும்பு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித் தும், கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குருநகரில் அமைந்துள்ள யாழ். தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் மு.ப. 10 மணி முதல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதில் குறித்த நிறுவனத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் அனைத்துப் பிரிவு மாணவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மாணவர்கள்:-

எச்.என்.டி.ஏ. பட்டப்படிப்பை பி.கொம். கற்கை நெறிக்கு நிகரான தாக மாற்றம் செய்யப்பட வேண் டும் என்ற கோரிக்கையை முன் வைத்து எமது சகோதர இன மாணவர்கள் போராட்டம் ஒன்றை முன்னேடுத்திருந்தனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி கொழும்புப் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு முன்பாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பொலிஸார் கடுமையாக நடந்து கொண்டதுடன், தடியடி மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் மேற்கொண்டிருந்தனர். அதில் 5 மாணவர்கள் உட்பட இரண்டு தேரர்கள் காயமடைந்தனர். பின்னர் போராட்டத்தில் கடுமையாக நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு 39 பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.



இவர்கள் விடுதலை செய்யப்படுவதுடன் இவர்களின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களின் பாதுகாப்புக்களும் உறுதி செய்யப்படல் வேண்டும். இதற்காக இன்று (நேற்று) முழுவதும் விரிவுரைகளை புறக் கணிக்கவுள்ளோம். இந்த நிலைமையே நீடித்தால் எமது போரட்டத்தை எதிர்வரும் நாள்களில் கல்வி நிலையச் சுற்றாடல் தாண்டிய பகுதிகளிலும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.- என்று தெரிவித்தனர்.

(ம-ரி5)

# ஊடகவியலாளர்களின் உரிமை பாதுகாக்கப்படுவது அவசியம்

## ஐ.நா. செயலர் வலியுறுத்தல்

நியூயோர்க், நவ.2

மக்களிடம் உண்மைகள் சென்றடைவதற்காக, ஊடகவியலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ - மூன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட, ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை முடிவுக்குக் கொண்டுவரும் தினம், இன்று நவம்பர் 2 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது கடமையின்போது உயிரிழந்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களை இன்று நினைவு கூரும் நாள் .

மக்களுக்குச் செய்திகள் மற்றும் தகவல்களைக் கொண்டு சென்ற 700 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கடந்த பத்தாண்டுகளில் கொல்லப்பட்டுள்ளனர். பலர் மோதல்களின்போது துணிச்சலுடன் செயலாற்றியமையால் கொல்லப்பட்டுள்ளனர்.



அனைத்துச் சம்பவங்களும் உண்மையான செய்தி வெளிக்கொண்டு வரும் முயற்சியைத் தடுத்து அவற்றை மூடிமறைப்பதற்காக வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் 7 வீதமான சம்பவங்களுக்கே விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்பட்டுள்ளன. இதன்படி 10 குற்றங்களில் ஒன்று என்ற அடிப்படையில் முழுமையாக விசாரணை செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி, செய்திகளைத் தணிக்கை செய்வதற்காக, இவ்வாறான சம்பவங்களை அரசுகளே மேற்கொள்கின்றன.

எனவே நாம் இவற்றுக்கு எதிராகச் செயற்பட்டு, ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியும் என்பதை உறுதி செய்யவேண்டும். ஊடகவியலாளர்கள் உயிருக்கு அச்சம் கொண்டு சுய தணிக்கையில் ஈடுபடக் கூடாது.

பிரெஞ்சு ஊடகவியலாளர்கள் படுகொலை நினைவாக 2013 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி ஐ.நா பொதுச் சபையில், ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கான தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அத்துடன் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிந்தோரை தண்டிக்கும் வகையில் ஐ.நா திட்டத்தில் யுனஸ்கோவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை நாம் பாராட்டுகின்றோம். இதில், ஐ.நா நிறுவனங்கள், அரசுகள், ஆய்வாளர்கள், சிவில் சமூகம் மற்றும் ஊடகங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரு வலுவான பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மக்களிடம் உண்மைகள் சென்றடைவதற்காக, ஊடகவியலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ-மூன் குறிப்பிட்டுள்ளார். (து-வ, ரி6)

# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி களுவாஞ்சிக்குடியில் ஊர்வலம்



மட்டக்களப்பு, நவ.2

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு களுவாஞ்சிகுடி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நூலகத்தின் வளர்ச்சியை நோக்காகவும் நூலகத்துக்கும் வாசகர்களுக்கும் இடையில் தொடர்புகளை அதிகரிக்கும் முகமாகவும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் களுவாஞ்சிகுடி பொது நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் ந.புருஷோத் தமன் தலைமையில் நூல்கள் சேகரிக்கும் மாபெரும் ஊர்வலம் களுவாஞ்சிக்குடி நகரில் இடம்பெற்றது.

களுவாஞ்சிகுடி பல்கழைக்கழக சமூக கல்வி ஒன்றியத்தின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்த நிழ்வில் களுவாஞ்சிகுடி பொது நூலக வாசகர் வட்ட ஆலோசகரும் பிரித்தானிய நலன்புரிச் சங்க தலைவருமான மு.யோகநாதன், முகாமை ஆலய பரி[illegible]லன சபையின் உறுப்பினருமான நா.நாகேந்திரன், நூலகத்தின் நூலகர் யு.எல். நஸீரா மற்றும் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது, களுவாஞ்சிகுடி மக்களி னால் நூலகத்தின் வளர்ச்சிக்காக ஒரு தொகைப் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன் நிதி உதவிகளும் வழங்கப்பட்டன. (ற)

# கடை உடைத்து திருடிய சந்தேகநபர் மறியலில்

கரணவாய், நவ.2

நெல்லியடி நகரப் பகுதியிலுள்ள நகைக் கடையை உடைத்து நகைகளைத் திருடிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

நெல்லியடி வதிரி வீதியில் அமைந்திருந்த நகைக்கடை ஒன்று உடைக்கப்பட்டு 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டன. இது தொடர்பாக கடை உரிமையாளரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நீர்கொழும்பு கந்தானைப் பகுதியில் திருடிய நகைகளை விற்க முற்பட்ட ஒருவரை கந்தானைப் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவரிடமிருந்த நகைகளைக் கைப்பற்றினர்.

அதையடுத்து நெல்லியடி நகைக் கடை உரிமையாளரை கந்தானைப் பொலிஸ் நிலையத்துக்கு நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த தலைமையிலான குழுவினர் அழைத்துச் சென்றனர். அங்கு வைத்து நகைக்கடை உரிமையாளர் தமது நகைகளை அடையாளம் காட்டியதை அடுத்து குறித்த சந்தேகநபரை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவந்து மேலதிக விசாரணைகள் மேற்கொண்டனர்.

குறித்த சந்தேகநபர் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். கைது செய்யப்பட்டவர் நுவரெலியாவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-108)

# பாடசாலைகளுக்குள் வேண்டாம் அரசியல்

## கிழக்கு முதலமைச்சர் கோரிக்கை

மட்டக்களப்பு, நவ.2

பாடசாலைகளுக்குள் அரசியல் செய்யும் கலாசாரம் முறியடிக்கப்பட வேண்டும் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹபீஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி அந்நாசர் வித்தியாலயத்தின் விஞ்ஞான தொழில்நுட்பட ஆய்வு கூடக் கட்டடத்தைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் ஏ.எம்.அல்லாபிச்சை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தொடர்ந்துரையாற்றிய முதலமைச்சர்,



மாகாண அதிகாரத்தை விட்டுக் கொடுக்கின்ற முதலமைச்சராக ஒரு போதும் நான் இருக்க முடியாது. அது எந்தவொரு அதிகாரமாக இருந்தாலும் அதை விட்டுக் கொடுக்க முடியாது. அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. எந்தவொரு அதிகார துஷ்பிரயோகமும் அரசியலுக்காக எனது காலத்தில் நடைபெறாது என்ற உத்தரவாதத்தை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றிலிருந்து கூறி வருகின்றேன். நியாயமான காரணமில்லாமல் எந்தவொரு ஆசிரியரையும் இலகுவாக யாரும் இடமாற்ற முடியாது. இதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு அரசியல்வாதியாக இருந்தாலும் பாடசாலைக்குள் அரசியலைக் கொண்டு வரக் கூடாது. அதற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இடம் கொடுக்கக்கூடாது. இதற்கு எதிராக மாணவர்கள் கிளர்ந்தெழ வேண்டும். பாடசாலைக்குள் அரசியல் செய்யும் கலாசாரம் முறியடிக்கப்படவேண்டும். அரசியல்வாதிகள் ஒரு காடைத்தனமான குழுவை வைத்துக் கொண்டு அரசியல் செய்வது இல்லாதொழிக்கப்படவேண்டும்.

காடையர்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்யக் கூடாது. அரசியல்வாதிகள் மக்களுக்குச் சேவை செய்தால் எந்தவொரு அடிதடிக் குழுவும் அரசியல்வாதிகளுக்கு தேவையில்லை. மக்களையும் நாட்டையும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் அரசியல் தலைமைகள் மாற்றப்படவேண்டும்.

முழு அதிகாரமும் மாகாண சபைக்கு இருக்கின்றது. எந்தவொரு அரசியல்வாதிக்கும் வழங்கப்படும் நிதி அவர்களுடைய சொந்த நிதியல்ல. மக்களுடைய நிதி என்பதை புரிந்து கொள்ளும் அரசியல் தலைமைகளாக மாற வேண்டும். நிதி வழங்கியவர்கள் தான் கட்டடத்தைத் திறக்க வேண்டுமென்றிருந்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தான் இந்தக் கட்டடத்தை திறக்க வேண்டும். நாகரீகமான அரசியல் கலாசாரத்தை செய்யவேண்டும். யாருக்கும் ஆசிரியர்கள் மாணவர்கள் பயப்பட வேண்டி யதேவையில்லை-என்றார். (த-10)

# இனவாதிகளை பொருட்படுத்தாது கைதிகளை உடனே விடுவியுங்கள்

## சிறைச்சாலைத் திறப்பு விழாவில் அமைச்சர் விஜயகலா கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.2

முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேரைக் கடந்த அரசு புனர்வாழ்வளித்து விடுவித்தபோது ஈழப்போர் உருவாகவில்லை. ஆனால் தற்போது 217 தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தால் ஈழப்போர் உருவாகப் போகிறதாம் என்ற இன்வாதிகளின் கருத்துக்குச் செவிசாய்க்க வேண்டியதில்லை. எனவே அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.சிறைச்சாலைக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறைச்சாலைக் கட்டடத் தொகுதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் 5 ஆயிரம் சிறைக்கைதிகளையே தடுத்து வைக்கக்கூடிய இடவசதி உள்ளபோதும் பல்லாயிரக்கணக்கான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறுகுற்றம் புரிந்தவர்களும் அபராதம் செலுத்த முடியாதுள்ளவர்களும் அதில் உள்ளடங்குவர். அதனால் நாள்தோறும் அரசுக்குப் பெரும் செலவு ஏற்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் போதை வஸ்து பாவனையும் அதிகரித்துள்ளது. அதனால் வேறு குற்றங்களுக்காகச் சிறைகளில் அடைக்கபடுபவர்களும் போதை வஸ்து பாவிக்கப் பழக்கப்பட்ட நிலையில் வெளியேற வேண்டிய நிலைமை காணப்படுகிறது. அரசியல் கைதிகளும் கடும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளனர். போதைப் பொருள் குற்றவாளிகளுடனேயே தமிழ் அரசியல் கைதிகளும் தடுத்து வைக்கப்படுகின்றனர். அதனால் தமிழ் அரசியல் கைதிகளும் பாதிக்கப்படுகின்றனர். குற்றமிழைப்பவர்கள் திருந்துவதற்காகவே சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆனால் சிறையில் போதைவஸ்துப் பாவனை காரணமாக அவர்கள் போதை வஸ்து பாவனையாளர்களாக வெளியேறும் நிலைமை இனியும் தொடரக்கூடாது.

வடக்கு-கிழக்கில் சிறுவர் குற்றங்கள் உள்ளிட்ட பெரிய குற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவர்கள் இனியும் தடுத்து வைத்திருப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த காலத்தில் புலிகளின் தலைமைகள் உட்பட 12 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். புலிகளின் முக்கியஸ்தர்களும் கடந்த அரசின் அமைச்சர்களாகவும் முதலமைச்சர்களாகவும் இருந்துள்ளனர். அவர்கள் இப்போது வெளியே நடமாடும் நிலையில் அவர்களுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டிலும் சந்தேகத்தின் பேரிலும் கைது செய்ய[illegible]பட்டு அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்ந்தும் சிறைச்சாலைகளில் வாடுவது எவ்வகையிலும் நியாயமல்ல.

அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்க வேண்டும். அல்லது அவர்களைக் குறுகிய கால புனர்வாழ்வின் பின்னர் விடுதலை வேண்டும்.

அரசியல் கைதிகளை விடுவித்தால் அடுத்த கட்ட ஈழப்போர் ஆரம்பமாகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகிறது. ஜெனிவாத் தீர்மானத்துக்கு அமைய சர்வதேச விசாரணைக்குச் சாட்சியமளிக்கவே அரசு அரசியல் கைதிகளை [illegible]தலை செய்கின்றது என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார். இவ்வாறான இனவாதக் கருத்துக்களுக்குச் செவிசாய்க்காது அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும். அரசியல் கைதிகள் பலர் சிறையில் கொல்லப்பட்டுள்ளனர். அத்தகைய சம்பவங்கள் இனிமேல் இடம்பெறக் கூடாது -என்றார். (த-4,21)

# அரசு வருமானம் ஈட்ட மக்கள் மீது வரிச்சுமை

## சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, நவ.2

கடந்த வரவு-செலவுத் திட்டங்களைப் போலவே இந்த முறையும் அரசு வருமானத்தை ஈட்ட பொதுமக்கள் மீது வரிச்சுமை திணிக்கப்படவுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

தற்போதைய அரசு தங்களது தரப்பினரைப் பாதுகாத்துக் கொண்டு சாதாரண பொதுமக்கள் மீது வரிச்சுமையைத் திணிக்கும் வரவு-செலவுத் திட்டமொன்றையே சமர்ப்பிக்கவுள்ளது என்றும் அந்தக் கட்சி சாடியுள்ளது.

அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றுக்கு ஏற்கனவே விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ள அந்தக் கட்சி இவ்வாறான விடயங்களை தவிர்த்து மக்களால் செலவு செய்யக் கூடிய வகையிலேயே வரவு- செலவுத் திட்ட யோசனை முன்வைக்கப்பட வேண்டும்என்றும்வலியுறுத்தியுள்ளது.

வரவு-செலவுத்திட்டம்சமர்ப்பிக்கும் போது சாதாரண மக்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள அந்தக் கட்சி உத்தேச கசினோ வரி மற்றும் மாளிகை வரி என்பன பெயரளவிலேயே காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது. (ற)

# நல்லாட்சியில் அனைவரும் பேதங்களின்றி செயற்படுக

## அமைச்சர் நிமல் கோரிக்கை



கொழும்பு, நவ.2

ஐக்கிய நல்லாட்சி அரசில் மக்களின் தேவையை புரிந்து அபிவிருத்தி ரீதியில் நாட்டையும் மக்களையும் கட்டியெழுப்ப கட்சி பேதமின்றியும் இன பேதமின்றியும் செயற்படுவதை தலைவர்கள் இலக்காக கொள்ள வேண்டும் என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை நகரில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலையத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பயணிகள் போக்குவரத்து சேவையில் சுதந்திரமாக செயல்பட இடமளிக்கப்பட வேண்டும். தவிர தரகர்கள் ஊடாக பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுத்த இடமளிக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

ஜனாதிபதி அனைத்து இன மக்களின் ஏகோபித்த தலைவராக செயற்படுகின்றார். இவரிடம் இன மத வேறுபாடுகள் இல்லை அபிவிருத்தி பாதையில் அனைவரையும் வழிநடத்தி செல்ல முனைப்புடன் செயற்படுகின்றார். இந்த நிலையில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுள்ள நாங்கள் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவோம்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பஸ் தரிப்பு நிலையங்கள் இல்லாமல் மக்கள் அவதியுறுகின்றனர். எனவே நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் இவ்வாறான பஸ் தரிப்பு நிலையங்களை அமைத்து பயணிகளின் போக்குவரத்தை சீர் செய்ய எனது அமைச்சும் தற்போதுள்ளபுதிய அரசும்நடவடிக்கைகளை மேற்கொள்ளும். (ற)

# போர்ட் சிற்றி நிர்மாணத்துக்கு நிபந்தனைகளுடன் அனுமதி

## அமைச்சர் சுஜீவ தெரிவிப்பு



கொழும்பு, நவ.2

கொழும்பு துறைமுகத்தை அண்டிய போர்ட்சிற்றி நிர்மாணப் பணிகளுக்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதியை அரசு வழங்கியுள்ளது என்று ராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச வர்த்தக அபிவிருத்திக்கான ராஜாங்க அமைச்சரான சுஜீவ சேனசிங்க இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது-

கொழும்பு போர்ட் சிற்றி நிர்மாணப் பணிகளுக்கு நிபந்தனையுடன் கூடிய அனுமதியை அரசு வழங்கியுள்ளது. இது தொடர்பாக இலங்கை மற்றும் சீன அரசுகள் இடையே கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது.

அத்துடன் எதிர்காலத்தில் சீனாவுடன்மட்டுமன்றி, இந்தியாவுடனும் புதிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படும். அரசு எந்தவொரு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான ஒப்பந்தங்களையும் ரத்துச் செய்யவில்லை.

ஆனால் அவற்றில் இருக்கும் முறைகேடுகள், மதிப்பீடுகள் தொடர்பில் தீவிர கரிசனை கொண்டுள்ளது - என்றார். (ற)

# 10 நகரங்கள் சுற்றுலா நகரங்களாகும்

## அமைச்சர் நவீன் தெரிவிப்பு

கொழும்பு, நவ.2

நுவரெலியா மாவட்டத்தில் பத்து நகரங்கள் இந்தப் புதிய அரசால் அபிவிருத்திகள் செய்யப்பட்டு சுற்றுலா நகரங்களாக மாற்றியமைக்கப்படும்எனபெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

தலவாக்கலை நகரில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலைய ஆரம்ப வைபவத்தின் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த நல்லாட்சி அரசு நாட்டு மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை செய்வதில் முனைப்புடன் செயற்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி என வேறுபாடு இன்றி மக்களின் எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்வதே எமது இலக்காகும். 2011ஆம் ஆண்டு இந்த இடத்தில் சாதாரண



பஸ் தரிப்பு நிலையமாக இருந்த இந்த இடம் இன்று சொர்க்க பூமியாக மாற்றம் பெற்றுள்ளது.

அதேவேளை மேல் கொத்மலை திட்டம் இன்னும் பூர்த்தி ஆகாத நிலையிலும் தலவாக்கலை நகரம் அனைவராலும் விரும்பக்கூடிய நகரமாக மாறிவருகின்றது. அதே போன்று கினிகத்ஹேன, கொட்டகலை, அட்டன் பொகவந்தலாவ போன்ற இன்னும் 10 நகரங்கள் இந்தப் புதிய அரசால் அபிவிருத்தி செய்யப்படும். நுவரெலியா மாநகரத்தை முழுமையாக மாற்றியமைத்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க பிரதமருடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார். (ற)

# நல்லாட்சி அரசு தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது

## சரத் பொன்சேகா கூறுகின்றார்



கொழும்பு, நவ.2

நல்லாட்சி என்று மார்தட்டும் புதிய அரசின் நடவடிக்கைகள் குறித்துத் திருப்தி கொள்ள முடியாதுள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன என்றும் எனினும் அவை நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் ஊடக சுதந்திரம், ஐக்கிய நாடுகள் அமைப்புடன் சுமுக உறவைப் பேணுதல் என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனினும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பது தொடர்பில் அரசு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் பொதுமக்கள் எந்த வகையிலும் நன்மை அடையவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# நல்லாட்சிக் கனவுகள் தகர்க்கப்படுகின்றன

## ரஞ்சித் தேவசிறி கவலை

கொழும்பு, நவ.2

நல்லாட்சி தொடர்பான கனவுகளுடன் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் அரசின் செயல்பாடுகள் காரணமாக பொதுமக்களின் எதிர்பார்ப்புகள் நொருங்கிப் போயுள்ளன என்று புரவெசி பலய அமைப்பின் முக்கியஸ்தர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழிப் பத்திரிகை ஒன்றின் ஞாயிறு வார இதழுக்கு அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கிராமப் புறங்களில் பெற்றிருந்த செல்வாக்கைப் பார்த்து அவரை ஒருபோதும் தோற்கடிக்க முடியாது என்று ஆரம்பத்தில் நாங்கள் நினைத்திருந்தோம். எனினும் பொதுமக்களின் மீதான அடக்குமுறை காரணமாக மகிந்த அரசு வீட்டுக்கு அனுப்பப்பட்டது.

அதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய இந்த அரசும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நொருங்கிப் போகச் செய்துள்ளது.

நல்லாட்சி என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையே இந்த அரசின் செயற்பாடுகள் மூலம் தகர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.- என்று தெரிவித்துள்ளார். (ற)

# உள்ளூராட்சிச் சட்டங்களை திருத்த வேண்டியுள்ளது

## அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, நவ.2

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான அநேகமான சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டி உள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சட்டங்கள் 50 தொடக்கம் 100 வருடங்கள் பழைமை வாய்ந்ததாகக் காணப்படுவதால் இதனைத் திருத்தவேண்டிய தேவை உள்ளது என்று உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா குறிப்பிட்டுள்ளார்

மக்களின் தேவை கருதியே இந்தச் சட்டங்களைத் திருத்தியமைக்கவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், குறித்த சட்டங்களை திருத்துவதற்கு தேவையான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# அரசுகள் பல மாறினாலும் கொள்கை மாறக் கூடாது

## அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, நவ.2

அரசுகள் மாறினாலும் மாற்றமடையாத பொருளாதாரக்கொள்கையொன்று நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று தென் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை உயன்வத்தை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நிலையானபொருளாதாரக்கொள்கை, கல்விக்கொள்கை,வெளிநாட்டுக் கொள்கை என்பவற்றைக் கொண்டுள்ள நாடுகளே அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க முடியும்.

ஆட்சி மாறும்போது அடிக்கடி மாறும் பொருளாதாரக் கொள்கைகள் நாட்டின் முன்னேற்றத்துக்கு துணைபுரிவதில்லை. எனவே இலங்கையிலும் நிலையான பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

எதிர்வரும் நாள்களில் இது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.- என்றார். (ற)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் கூடும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த சுபசெய்தி வரும்.

**இடபம்:** சுய இலாபம் கருதி சிலர் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப இலாபம் கிடைக்கும். சேமிப்புப் பணம் அத்தியாவசிய செலவுகளுக்குப் பயன்படும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும்.

**மிதுனம்:** அன்றாடப் பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், இலாபமும் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர்.

**கடகம்:** குடும்ப விடயம் பற்றிப், பிறரிடம் விவாதிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். பயணத்தின் போது விழிப்புடன் இருப்பது அவசியம்.

**சிங்கம்:** மனதில் உற்சாகமும், செயலில் திறமையும் வெளிப்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்ட மிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவீர்கள். இலாபம் கூடும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**கன்னி:** நண்பர்களின் பேச்சால் சங்கடம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிடலாம். இலாபம் சுமாராவிருக்கும். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும். பெற்றோர் உடல்நலனில் அக்கறை தேவை.

**துலாம்:** எதிலும் திட்டமிட்டுச் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்ப்பு நிறைவேறத் தாமதமாகும். மனைவி வழி உறவினர்களால் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** பொறுப்பைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராகவிருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவது நல்லது.

**தனுசு:** எந்தச் செயலையும் நேர்த்தியுடன் நிறைவேற்றுவீர்கள். குடும்ப வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்குப் பூர்த்தியாகும். இலாபம் உயரும்.

**மகரம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். எதிரியின் தொல்லை வந்த சுவடு தெரியாமல் விலகும். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர்.

**கும்பம்:** எதிலும் பொறுப்புணர்வுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். மனைவி பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். வாகனப் போக்குவரத்தில் மித வேகம் நல்லது.

**மீனம்:** மனதில் சாந்த குணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சேமிக்க முயல்வர். மாணவர்கள் ஆர்வத்துமுடன் படித்து முன்னேற்றம் காண்பர்.




## தனுஷ்க்கு ஜோடியான த்ரிஷா!

தனுஷ் வளர்ந்து கொண்டிருந்த போது அவருடன் டூயட் பாட முன்னணி நடிகைகளுக்குப் பெரிதாக ஆர்வம் இருந்ததில்லை. ஆனால் 'ஆடுகளம்' படத்தில் நடித்து தேசிய விருது பெற்ற நடிகரானபோது கவனிக்கப்படும் நடிகரானார் தனுஷ். அத்தோடு தென்னிந்தியச் சினிமாவைக் கடந்து இந்திச் சினிமாவிலும் அவர் நடித்து வருவதால், இப்போது மேல்தட்டு நடிகைகளுக்கு அவருடன் ஜோடி சேரும் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில், தனுசுடன் சில வருடங்களுக்கு முன்பே நடிக்கச் சம்மதம் தெரிவித்த பின்னர் திகதி முன்பதிவுப் பிரச்சினையால் அந்தப் படத்தில் இருந்து பின்வாங்கிய காஜல் அகர்வால், சில மாதங்களுக்கு முன்பு வெளியான மாரி படத்தில் தனுசுடன் நடித்தார். அவருக்குப்பின்னர் சமந்தா, எமி ஜாக்சன், கீர்த்தி சுரேஷ் ஆகியோர் தனுஷ் படங்களில் நடித்துள்ள நிலையில், எதிர்நீச்சல் துரை.செந்தில்குமார் இயக்கத்தில் தனுஷ் இரண்டு வேடங்களில் நடிக்கும் படத்தில், அஜித்தின் மச்சினி ஷாம்லி ஒரு ஹீரோயினாக ஏற்கனவே ஒப்பந்தம் ஆகியுள்ளார். இந்த நிலையில், அந்தப் படத்தில் எதிரான பாத்திரத்தில் நடிக்கும் தனுசுக்கு ஜோடியாக நடிக்க த்ரிஷாவிடம் பேசியுள்ளனராம். தூங்காவனம் படத்துக்குப் பின்னர் முன்னணி ஹீரோக்களின் படவாய்ப்பு இல்லாமல் இருந்து வந்த த்ரிஷா, இந்தப் படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததால் உற்சாகமடைந்திருக்கிறாராம். ஆக, இப்போதுதான் தனுசுடன் முதன்முறையாக த்ரிஷா ஜோடி சேருகிறார் என்று கூறப்படுகிறது.

உன் மேல் அன்பு
செலுத்துகிறவர்களை
நேசி... உன் மீது கோபம்
கொண்டவர்களை
அதைவிட அதிகமாக
நேசி...

–அன்னை தெரேசா






## பேஸ் புக்கில் பிடித்தவை...









நான் எதிலும் தோற்பதில்லை
ஒன்று வெற்றி கொள்கிறேன்
இல்லை கற்றுக்கொள்கிறேன்.



## பீட்சா மாவை காற்றில் சுழற்றி புதிய கின்னஸ் சாதனை

சாங்காய் நகரத்தில் உள்ள சாங்கிரி-லா சொகுசு நட்சத்திர ஹோட்டலில் பீசா தயாரிக்கும் மாவை 'டாஸ்' செய்து கின்னஸ் உலக சாதனை நிகழ்த் தப்பட்டுள்ளது. பீசா மீது அலாதியான பிரியம் கொண்ட 511 பேர் ஒரே நேரத்தில் டாஸ் செய்து இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இதற்கு முன்பாக, லண்டனில் உள்ள பாபா ஜான்ஸ் ஹோட்டலில் 338 பேர் ஒரே நேரத்தில் டாஸ் செய்ததே கின்னஸ் சாதனையாக இருந்தது. சாங்காயின் இதே நட்சத்திர ஓட்டலில் கடந்த 2013 ஆம் ஆண்டு 'எர்த் அவர்' நிகழ்வின் போது 500 க்கும் மேற்பட்டவர்கள் ஒரே நேரத்தில்மெழுகுவர்த்திகளை ஏற்றிக் கின்னஸ் சாதனை படைத்திருந்தனர்.

சென்ற ஆண்டு 338 பேர் ஒரே நேரத்தில் படுக்கையில் காலை உணவு சாப்பிட்டு கின்னஸ் சாதனை புரிந்திருந்ததும் இதே ஹோட்டலில் தான்.

# ஏ- 32 வீதிக்கு சூரிய மின்கல விளக்குகள் இணைப்பு

யாழ்ப்பாணம்,நவ. 2

யாழ்ப்பாணம் - மன்னார் ஏ-32 வீதியின் பெரும் பகுதிகளில் சூரிய மின்கல விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏ-32 வீதியில் கேரதீவு, சங்குப்பிட்டிப் பாலத்தின் இரு மருங்கிலும் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு, சூரிய மின் கலத்தில் இயங்கும் மின் விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளமை பலரினதும் கவனத்தை ஈர்த்துள் ளது. குறிப்பாக மின் சாரத்தை மீதப்படுத்தக் கூடிய வழி முறையுடன் மின்சாரம் தடைப்படும் நேரத்திலும் பயன் தரக் கூடிய வழிமுறை என்பதால் இந்தப் பாதையின் ஊடாகப் பயணிப்பவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. (ஐ-10)


**மணமகள் தேவை**

யாழ்.R.C 82. கம்பனி ஒன்றில் வேலை பார்க்கும் விவாகரத்துப் பெற்றவருக்கு அரச உத்தியோகம் பார்க்கும் பெண் தேவை.

தொடர்பு: 077 406 4773 (65715)(11,15,16)

**பணியாளர்கள் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர்கள் உடன் தேவை.

தொடர்பு: 077 720 8454 (65715)(11,15,16)

**வீடு விற்பனைக்கு**

4ஆம் குறுக்குத் தெருவில் பிரதான வீதிக்கு அருகில் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 440 2087 (65714)(11,15,16)

**சாரதி உண்டு**

A.V சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற சாரதி உண்டு.

தொடர்பு: 077 822 3017

நல்லூர், யாழ்ப்பாணம். (65718)(11,15,16)


**பரிசுத்த ஆவிக்கு செபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே! என் வாழ்வில் எச்சந்தர்ப் பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறு கின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப் பினும், எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என்று உறுதி கூறு கின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

ஆமென்

(63566)(11,15,17) தகவல்: கா.முத்துக்குமார்


**புதுக்கடைத் திறப்புவிழா**

நிகழும் மங்கலகரமான மன்மத வருடம்
ஐப்பசி 16 ஆம் நாள் இன்று (02.11.2015) திங்கட்கிழமை
முற்பகல் 10.20 -11.15 மணிவரையுள்ள சுபவேளையில்

**Harees Electrical & Hardware Store**
**No.113, K.K.S.Road,Kokuvil.**

எனும் முகவரியில் கோலாகலமாகத் திறக்க உள்ளோம்
என்பதனை அன்பர்கள், நண்பர்கள்,வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
அனைத்துவிதமான **மின்சார உபகரணங்களையும், கட்டடப் பொருள்களையும்** மலிவாகவும் தரமாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

077 910 3486 (65719)(3.15)

உரிமையாளர்
சி.சிபாஸ்கரன்



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசிய சேமிப்பு வங்கியில் 37 வருடங்கள்
சேவையாற்றி இன்று தனது 60 ஆவது வயதில்
ஓய்வு பெறும் எமது வடபிராந்திய முகாமையாளர்




## திரு.வி.வி.கிரேசன்

அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புமாக
குடும்பத்துடன் நீடூழி வாழ வாழ்த்துவதுடன் எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்
தேசிய சேமிப்பு வங்கி
யாழ் மேற்தரக்கிளை

NSB

(65672)(14,15)



# புலமைப்பரிசில் பரீட்சை பாராட்டு விழா - 2015
# மு/ கலைமகள் வித்தியாலயம் - முள்ளியவளை




எமது பாடசாலை மாணவச் செல்வங்களை தமது அயராத உழைப்பாலும் அர்ப்பணிப்பான சேவையினாலும் வெற்றி பெறச் செய்து எமது வித்தியாலயத்திற்குப் பெருமை தேடித் தந்த அதிபர் திரு.க. ஜெயவீரசிங்கம் அவர்களையும் பகுதித் தலைவர் திரு.இ.வசந்தகுமார் அவர்களையும் ஆசிரியர்களான திருமதி ம.மிசியாஸ், செல்வி த.தவயோகினி ஆகியோரையும் இவர்களுடன் இம் மாணவர்களை ஆரம்பம் முதல் அறிவூட்டிய ஆசான்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். தமது அயராத முயற்சியினால் அதிசிறந்த புள்ளிகளைப்பெற்று பாடசாலைக்கு பெருமை ஈட்டித்தந்த மாணவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்

இடமிருந்து வலமாக முதலாவது வரிசையில்

ஜெ.கஜீவனா - 179, பி.அனிஸ் - 152, வ.விபுஜன் - 155 த.சக்சன் - 155, ம.துசாளன் - 152, செ.சிந்துசன் - 179 அ.பவலோசனன் - 176 றொ.கனிசன் - 180, பு.ஷத்யபிருந்தாபன் - 161

இடமிருந்து வலமாக இரண்டாவது வரிசையில்

த.சங்கவி -163, செ.கோபிகா - 160, ற.தரணிகா - 163 கி.அச்ஷயா - 162, வி.நர்த்திகா - 175, ஜெ.யஸ்மிகா - 171, கோ.சங்கிசை - 163 வி.மதுசாங்கினி - 168

100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்

ரா.நிலவெழிலன் -149, ந.சுலக்சன் -149, லோ.லோஜிதா - 148, கோ.அபின்ஜா - 148, கு.பானுஜா - 147, வி.மிந்துசா - 145, ப.பிரியங்கன் - 142, இ.வினுஜன் - 137, ப.பிரியங்கன் - 135, வி.லிதுசன் - 129, கி.சனுயா - 128, கி.டர்சிகன் - 125, ச.சஸ்மிகா - 119, இ.சானுஷா - 118, சி.யதுர்சிகா - 115, சு.யுதர்சன் - 112, ப.கேனுசியா -109, ர.வினோஜன் - 107, ம.டினோசன் - 101

70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்

ப.சானுஜா - 98, ற.தனுசாந் - 97, கு.சர்மிகா - 96, சு.டஸ்விதன் - 81, சா.ரிஸ்விதா - 80, செ.பேரமுதன் - 79, க.சங்கீர்த்தனன் - 70

பாடசாலைச் சமூகம்

மு/கலைமகள் வித்தியாலயம்

## வவுனியா பஸ் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

வவுனியா.நவ.02

வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த நிதியாண்டுக் கணக்கறிக்கை சமர்ப்பிப்பும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 31ஆம் திகதி வவுனியா கொரவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றன. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர். வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்.நவ.02

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் வழங்கும் நிகழ்வுகள் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை அதிபர் சு.மோகனராஜன் தலைமையில் நடைபெறள்ளது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-ரி5)

# அதிவேகப் பயணத்தால் கட்டுப்பாட்டை இழந்த பஸ்

## வீதிக்குத் தூக்கி எறியப்பட்ட இளைஞன் படுகாயம்

மன்னார்.நவ.02

மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து நானாட்டானுக்குப் பயணிகளுடன் புறப்பட்ட பஸ் அதி வேகமாகச் சென்று கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்தது. இதன் போது பஸ்ஸில் இருந்த இளைஞன் ஒருவர் வீதியில் தூக்கி வீசப்பட்டுப் பலத்த காயங்களுக்கு உள்ளாகினார். குறித்த சம்பவம் கடந்த 31 ஆம் திகதி இடம் பெற்றது. மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.10 மணியளவில் நானாட்டான் நோக்கிப் பயணிகளுடன் புறப்பட்ட பஸ் அதிவேகமாகச் சென்று கொண்டிருந்த போது தள்ளாடிச் சந்தியில் வைத்து திடீர் என பஸ்ஸின் வேகத்தைச் சாரதி கட்டுப்படுத்தியுள்ளார். இதன் போது பஸ்ஸில் இருந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த நிலையில் பஸ்ஸில் இருந்த இளைஞன் ஒருவர் வீதிக்குத் தூக்கி வீசப்பட்டார். இதன் போது குறித்த இளைஞன் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் உடனடியாக மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையின் பின் நோயாளர் விடுதியில் சேர்க்கப்பட்டார். நோயாளர் விடுதியில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் குறித்த இளைஞனின் உடலில் மாற்றங்கள் ஏற்பட்ட நிலையில் உடனடியாகச் சோதனைகளை மேற்கொண்ட வைத்தியர்கள் குறித்த இளைஞனை மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மற்றும் யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கைகளை மேற்கொண் டனர். எனினும் பல மணி நேரமாகியும் குறித்த இளைஞனை மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்வதற்கு உரிய நேரத்தில் அம்புலன்ஸ் வைத்தியசாலையில் இருக்கவில்லை. பல மணி நேரத்தின் பின்னர் அம்புலன்ஸ் வந்த நிலையில் குறித்த இளைஞன் மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட இளைஞனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 5 அம்புலன்ஸ் காணப்பட்டன. அதில் ஒன்று விபத்தின் காரணமாகக் கடுமையாகச் சேதமடைந்து பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இரண்டு அம்புலன்ஸ் திருத்த வேலையில் உள்ளன. ஏனைய இரண்டு அம்புலன்ஸை மாத்திரமே மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை அவசர சேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றது. மன்னார் மாவட்டப் பொது வைத்திய சாலைப் பணிப்பாளரின் கடமைக்கு உயர் அதிகாரிகள் சிலர் தடையாகச் செயற்பட்டு வருகின்றமையினால் வைத்தியசாலையில் உள்ள அம்புலன்ஸ் பற்றாக்குறை உட் பட பல்வேறு பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் மன் னார் மாவட்டப் பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலைத் தரப்பினர் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் அம்புலன்ஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையினால் நோயாளர் களை மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக வேறு வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மன்னார் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ-56)

## மானிய உரங்கள் இன்று விநியோகம்

சாவகச்சேரி.நவ.02

கைதடி நாவற்குளி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான இரண்டாம் கட்ட மானிய உர வகைகள் இன்று திங்கட்கிழமை கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளன. குறித்த தினத்தில் அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் அனைவரையும் வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு தலைவர் ந.திருநீலகண்டன் அறிவித்துள்ளார். (ஐ)

## மனைப்பொருளியல் கண்காட்சி

யாழ்ப்பாணம்.நவ.02

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தின் பிரதேச மட்ட மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் ஆடை வடிவமைத்தல். அழகுக்கலை மற்றும் மனைப் பொருளியல் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. வலி மேற்கு பிரதேச செயலகர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், வடமாகாண மீன்பிடி, வீதிப்போக்குவரத்து., கிராம அபிவிருத்தி மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்து கொள்வர்.

மேலும் இந்த நிகழ்வில் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை மற்றும் மனைப் பொருளியல் கற்கை நெறிகளில் பங்குபற்றிய மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட பொருள்களும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (ஐ-ரி5)

## கிளிநொச்சியில் நடைபெற்ற ஐ.நா.நிறுவனத்தின் நிகழ்வுகள்

கிளிநொச்சி.நவ.02

ஐ.நா. நிறுவனத்தின் 70 ஆவது ஆண்டு நிகழ்வும், குறித்த நிறுவனம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவு தினமும் கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்றன. குறித்த நிகழ்வுகள் கிளிநொச்சி 155 ஆம் கட்டை சந்தியில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்தில் இடம்பெற்றன. ஐ.நா. நிறுவனத்தின் தோற்றத்தையும், அந்த நிறுவனம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு 60 ஆண்டுகள் பூர்த்தியையும் உள்ளடக்கிய நினைவுப் புத்தகம் ஒன்றும், முத் திரைகளும் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் வடக்கு மாகாணத்தில் இயங்கும் ஐ.நா. நிறுவனத்தின் பிரதிநிதிகள் , மாவட்ட இளைஞர் சேவை மன்ற உறுப்பினர்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி3)

## குருமன்காடு பகுதியில் தனிநபர் மீது ஐவர் கொண்ட குழுவினர் தாக்குதல்

வவுனியா.நவ.02

வவுனியா குருமன்காட்டுச் சந்திக்கு அருகில், வியாபார நிலையம் ஒன்றில் பொருள்களைக் கொள்வனவுசெய்து விட்டுத்திரும்பியவர் மீது குருமன்காட்டுப் பகுதியில் ஐந்து பேர் கொண்ட குழுவினர் தாக்கு தல் நடத்தியதுடன் அவரின் மோட்டார் சைக்கிளுக்கும் சேதம் ஏற்படுத்தியுள்ளனர். தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 15 நிமிடங்கள் வரை நடைபெற்ற இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர் வியாபார நிலைய ஊழியர்களின் உதவியுடன் அருகிலிருந்த தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். குருமன் காட்டுப் பகுதியில் இது இரண்டாவது தாக்குதல் சம்பவம் என்பதும் குறிப்பிடத்தக்கது. தாக்குதல் நடத்தியவர்கள் மது போதையில் இருந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.நவ.02

யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண் டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், நடைமுறைப் படுத்தும் நிறுவனங்களின் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதி உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

கலந்துரையாடலில் 100 நாள் திட்டத்துக்கு இணைந்ததாக கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள், இந்திய வீட்டுத் திட்டம், வாழ்வின் எழுச்சி முதலீட்டு அபிவிருத்தித் திட்டம், வீட்டுக்கு வீடு கிராமத்துக்கு கிராமம் அபிவிருத்தித் திட்டம், கிராமிய சமூக சுகாதாரத்திட்டம், மீள்குடியேற்ற அமைச்சின் அபிவிருத்தி வேலைத்திட்டம், மாவட்டச் செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் போன்றவை ஆராயப்படவுள்ளன எனவும் அறிவித்துள்ளார். (ஐ-9)

## சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை வேண்டி வழிபாடு

சாவகச்சேரி.நவ.02

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் - யுவதிகளின் விடுதலை வேண்டி, தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான இந்து ஆலயங்களில் கடந்த 30 ஆம் திகதி விசேட அபிசேகங்களும், வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்து குருமார் அமைப்பின் தலைவர் க.வைத்தீஸ்வரக் குருக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்து ஆலயங்களில் இடம்பெற்ற கேதாரகௌரிவிரதபூசைகளுடன், சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலை வேண்டி விசேட அபிசேகங்களும், விசேட வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்த வழிபாடுகளில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். (ஐ-9)

## சுகாதாரமற்ற முறையில் உணவுகள் விற்பனை விற்பனையாளருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்.நவ.02

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் உள்ள உனவகம் ஒன்றில் சுகாதாரமற்ற முறையில் உணவுகளை விற்பனை செய்தமை தொடர்பாக, யாழ். மாநகர சபை பொதுச் சுகாதார பரிசோதகரால் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் குறித்த விற்பனையாளருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு 10 ஆயிரம் ரூபா இழப்பீடும் விதித்து யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் தீர்ப்பளித்துள்ளார். யாழில் உள்ள தனியார் உணவகமொன்றில் உணவுப் பொதியில் தீக்குச்சி ஒன்றும், இறைச்சித் துண்டுகளுடன் விலங்கின் உரோமங்களும் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக மாநகர சபை பொதுச் சுகாதர பரிசோதகரிடம், பாதிக்கப்பட்டவரால் முறையிடப்பட்டிருந்த நிலையில், குறித்த விற்பனையாளருக் கெதிராக சுகாதார பரிசோதகரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது. இதன் அடிப்படையில் நீதிவான் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார். (ஐ-101)

## பாடசாலையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கோரி மனு கையளிப்பு

காரைநகர்.நவ.02

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கோரி மீள்குடியேற்ற இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. அண்மையில் குறித்த பாடசாலை மாணவர்கள் 21 பேர் ஒவ்வாமை நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவத்தையடுத்து கடந்த 25 ஆம் திகதி பாடசாலைக்கு நேரடியாகப் பயணம் செய்த மீள்குடியேற்ற அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சர் எஸ்.சத்தியலிங்கம் ஆகியோரும் பாடசாலையைப் பார்வையிட்டு பாடசாலையின் தேவைகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டனர். அமைச்சர்களுடன் முன்னாள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் பாடசாலைக்கு நேரடியாகப் பயணம் செய்தனர். காரைநகர் மக்கள் மீளக்குடியமர்ந்தும் 15 வருடங்கள் கழிந்த நிலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னரே. இந்தப் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பாடசாலைக்கான அடிப்படை வசதிகள் போதியளவில் ஏற்படுத்தப்படாததுடன், ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது. இது தொடர்பாகப் பாடசாலைச் சமூகத்தால் சுட்டிக் காட்டப்பட்டதுடன் அவற்றை உடனடியாக நிறைவேற்றித் தருமாறும் கோரிக்கை விடப்பட்டது. இது தொடர்பானமகஜர்ஒன்றும்பாடசாலைபழைய மாணவர் சங்கத் தால் அமைச்சரிடம் கையளிக்கப் பட்டது. (ஐ-250)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ்- 2015

## யா/அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை

2015 தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்கள்



சு.ஆர்த்திகன்
164 புள்ளிகள்



பி.சேயோன்
161 புள்ளிகள்



கு.பவிஷ்னா
159 புள்ளிகள்



சு.ரசீபன்
158 புள்ளிகள்



இ.கிசாளன்
152 புள்ளிகள்



க.திஷானுகா
152 புள்ளிகள்




100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் விவரம்

வி.லவன்ரிகா,சி.கஜனி,ஜெ.கஜானி,த.விதுசன்,பா.தில்ஷாந்,யோ.டிலக்சனா, க.நிவேதா, வி.சஞ்சீவன்,கி.தருஜன்,தி.வேணுஜன்,க.லாவண்யா,ச.மதுமிஜா,ரா.அங்கனன்,அ.கஜனா,உ.டிசாலன், த்.கஜானா,ச.தாரனா,ம.பிரிந்திகா, அ.சகீன்,தி.கிருஷாந்,ம.திருஷிகா, அ.அபிஸ்னா, ஜெ.அபிஷாந்,தி.கோபிகா, க.பானுசா,ம.சஞ்சீத்,வி.மகிராஜ்,க.விதுர்சன்.

சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(64170)(11,15)

பாடசாலைச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுகந்தன் - மாலினி தம்பதிகளின் புதல்வனும்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும்
மாணவனுமாகிய

**செல்வன் சு.புருஷோத்தமன்**

2015இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
154 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.இவரின் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எல்லோரையும் பாராட்டுவதோடு மென்மேலும் பல சிறப்புக்கள் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பெற்றோர்,சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

(64171)(11,15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




பாக்கியபவனம்,
மினாகரா, அல்வாய்.

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி மாணவன்

**செல்வன் சௌந்தரதாசன் சந்தீபன்**

2015ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மென்மேலும் கல்வித் துறையில் சிறந்து விளங்கி பல சாதனைகள் பெற்றுயர எல்லாம் வல்ல அல்வாய் சாமணந்தறை ஆலடி ஐங்கரனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தங்கை,
அப்பம்மா,பெரியமாமா குடும்பம்,
சின்னமாமா குடும்பம்,
பெரியப்பாமார் குடும்பம்,சித்தப்பா
குடும்பம், மைத்துனர்மார் குடும்பம்.

(62188)(11,15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015




இ.உதயபானு
172




வி.யசிந்தன்
162




ற.கஜானி
162




இ.கவிநயா
159




வி.விசானுகா
155

ஆகிய சித்தியடைந்த மாணவர்களையும்,
ப.அஸ்வின் -149, கே.திவானி -149
ஆகியோரையும், 70 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களையும், **அதிபர்** மற்றும் பொறுப்பாசிரியர் **க.சிவகுமார்** ஆகியோரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(62186) (13.15)

பாடசாலைச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்

ஆங்கிலதினப் போட்டி - 2015

**Copy Writing**



த.மதுமிதா
தரம் 9
தேசியநிலை - 1,
மாகாணநிலை - 1



பி.பிரவீனா
தரம் 4
தேசியநிலை - 3,
மாகாணநிலை - 1

Best Wishes!



இ.வந்தனா
தரம் 11
மாகாணநிலை - 1



இ.தசானா
தரம் 9
மாகாணநிலை - 3



அ.விதுரன்
தரம் 6
மாகாணநிலை - 3

வெற்றி பெற்ற மாணவர்களையும் அதிபர் மற்றும் ஆங்கிலப் பாடநெறி ஆசிரியர் செ. அன்பழகன் ஆகியோரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(62187) (14,15)

பாடசாலைச் சமூகம்.

# தேசிய சேமிப்பு வங்கியால் மது பாவனைக்கு எதிரான பேரணி

யாழ்ப்பாணம், நவ.2

'நீங்கள் சிக்கனம் பற்றிச் சிந்திப்பவர்களாக, இருந்தால் தேவையற்ற தீங்கு விழைவிக்கும் போதைப் பாவனைகளை விடுத்து நல்வாழ்வுக்காகச் சிந்தியுங்கள்' என்ற தொனிப் பொருளுடன் புகைத்தல் மற்றும் மதுபானப் பாவனைக்கு எதிராக தேசிய சேமிப்பு வங்கிப் பணியாளர்களால் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக் கப்பட்டன. யாழ்.தேசிய சேமிப்பு வங்கியின் கிளை இரண்டைச்சேர்ந்த பணியாளர்கள் யாழ்.நகரில் துண்டுப்பிரசுங்களைவிநியோகித்ததுடன், வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் என்பற்றுக்குச் சென்று இது தொடர்பான விளக்கங்களையும் வழங்கினர். புகைத்தல் மற்றும் மதுபாவனையில் இருந்துவிடுபட்டு அவற்றுக்காகச் செலவிடப்படும் பணத்தைச் சேமிப்பதன் ஊடாக வாழ்வை எவ்வாறு சிறப்படையச் செய்யலாம் என்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அத்துடன் தேசியசேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையினர் கடந்த 31 ஆம் திகதி போதைப் பொருள் பாவனைக்கு எதிரான பேரணியை நடத்தினர். 'மது போதையற்ற இல்லத் தில் சந்தோசம் பொங்கி வழியும்' என்ற சுலோகத்துடன் வங்கிக் கிளைக்கு முன்பாக ஆரம்பித்த பேரணி சாவகச்சேரி நகரப் பகுதி ஊடாக பஸ்நிலையம்வரைநடைபெற்றது. நகரப் பகுதியில் உள்ள வணிக நிலையங்கள் பொதுச் சந்தை பஸ் நிலையம் போன்ற இடங்களில் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (ற-ரி5,9)



# புறொயிலர் கோழிகளுக்கு விலையை நிர்ணயிக்குக

## வவுனியா கோழி வளர்ப்பாளர்கள் கோரிக்கை

வவுனியா,நவ. 2

வவுனியாவில் புறொயிலர் கோழிகளின் இறைச்சிக்கு விலைக்கட்டுப்பாட்டை நிர்ணயிக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட புறொயிலர் கோழிவளர்ப்பாளர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். வவு னியாவில் புறொயிலர் கோழி களை வளர்த்து அதனை விற் பனை செய்யும் போது, இறைச் சிக்கடைக்காரர்கள் குறைந்த விலையில் கிலோ 300 ரூபா தொடக்கம் 325 ரூபா வரை கொள்வனவு செய்து தாம் 500 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்கின்றனர். இதனால் புறொயிலர் கோழி வளர்ப்பாளர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். கோழித் தீவனத்தின் விலை, கோழிகளின் நோயின் தாக்கத்தால் ஏற்படும் இழப்பு மற்றும் காப்புறுதி வசதிகள் இல்லாமை என்பவற்றால் தொடர்சியான நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான நஷ்டத்தைத் தவிர்க்க உரிய வகையில் கோழிகளுக்கு விலையை அரசு நிர்ணயிக்க முன்வரவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-40)

# பனம்பழம் விழுந்து குடும்பஸ்தர் காயம்

சாவகச்சேரி,நவ. 2

வீதியோரத்தில் காணப்பட்ட பனம் பழத்தை எடுக்கக் குனிந்தபோது மரத்திலிருந்து மற்றொரு பனம் பழம் அவரது முதுகில் விழுந்தது. இந்தச் சம்பவம் கடந்த 29 ஆம் திகதி மிருசுவில் வடக்கில் இடம் பெற்றது. பனம்பழம் முதுகில் வீழ்ந்ததில் பாதிக்கப்பட்ட 54 வயது குடும்பஸ்தர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஜ-9)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **செல்லத்துரை வினோகரன்**

திதி: 02.11.2015

பிறப்பு 01.01.1981 — இறப்பு 18.10.2011

இடைக்குறிச்சி, வரணி. — குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ரஞ்சிதமலர் நாகேஸ்வரன்



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தை 42 ஆவது வீதியையும், நெல்லியடியையும் வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ரஞ்சிதமலர் நாகேஸ்வரன் நேற்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்தையா -மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குணரெட்ணம் - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜனனியின் ( செலான் வங்கி - நெல்லியடிக் கிளை) பாசமிகு தாயாரும், அச்சுதனின் (ஓமான்) மாமியும், காலஞ்சென்ற தவமலர் மற்றும், ஞானமலர் (முகாமையாளர் ஆசிரிய நிலையம் - மன்னார்), தவயோகன் (டென்மார்க்), கிருபாமலர் (சுவிஸ்), ஜெயமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், தருமராசா (சுவிஸ்), கிருஸ்ரிராசா (கோட்டக்கல்விப் பணிப்பாளர், முசலி- மன்னார்), வசந்தவேணி (டென்மார்க்), நாதன் (சுவிஸ்), ரவிராஜ் (பிரான்ஸ்), ராஜேஸ்வரன், யோகேஸ்வரன், குணபூசணி, ஜெகதீஸ் வரன், குமுதாதேவி, புவனேஸ்வரன், கமலேஸ்வரன், குணாநிதி, சதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், அனோஜா- சுஜீவன், வேணுகா, சுஜிந்தினி, சுஜீவன், கீர்த்தனா, சுஜாளினி, கெரின், பவித்ரா, மீரா ஆகியோரின் பெரிய தாயும், கோபிநாத்,ஜனத், தியோசன், சலோமி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2015) திங்கட்கிழமை புதியவீதி, உப்புக்குளம் மன்னாரில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் மன்னார் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய வீதி, உப்புக்குளம், மன்னார். (65720)(11,15,17) தகவல்: குடும்பத்தினர்.

# மானிய உரம் நாளை விநியோகம்

சாவகச்சேரி,நவ. 2

தனங்களப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான, இரண்டாம் கட்ட மானியஉரவகைகள் நாளை செவ்வாய்க்கிழமை கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளன. அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் தமக்குரிய மானிய உரவகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் இ.சதானந்தன் அறிவித்துள்ளார். (ஜ-9)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் 08 . 10 . 1966 — விண்ணில் 02 . 10 . 2015

அமரர் **றொஹான் சஞ்ஜே ராஜ்**

(பிரதம மதுவரிப் பரிசோதகர் - கிளிநொச்சி)

ஆருயிர்த் தலைவா அன்பின் தந்தாய்
அருமையாய் எமை வளர்த்து ஆவன யாவும் ஆற்றி
உரிமையாய் அனைவருக்கும் உதவிக்கரம் நீட்டி
உபசரிப்பில் உத்தமராய் திகழ்ந்தீர் உலகில் நின்று உயிர் பிரிந்தீர்
உள்ளத்தினில் நிலைத்து நிற்பீர்

"நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக்காத்துக் கொண்டேன்"

(11 தீமோத் தேயு 4 -7)

*02.10.2015 அன்று இறைபதம் அடைந்த அமரர் றொஹான் சஞ்ஜே ராஜூ அவர்களின் ஆன்மா நித்திய வாழ்வு பெற வேண்டி கர்த்தரிடத்தில் கரம் கூப்பி நிற்கின்றோம்.*

51, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (c19664) (14,16,17) மனைவி, பிள்ளைகள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 11.11.1934

மறைவு 03.10.2015

### அமரர் கனகசபை செல்லத்துரை

(இளைப்பாறிய ஊழியர் சாவகச்சேரி - ப.நோ.கூ.சங்கம்)

கடந்த (03.10.2015) இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (02.11.2015) திங்கட்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது தந்தையின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி, மின்னஞ்சல், முகப்புத்தகத்தினூடாக ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் எமது குடும்ப வைத்தியர் Dr. [illegible] அவர்களுக்கும் பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கைதடி கிழக்கு, கைதடி. — குடும்பத்தினர்.

# கைதடி முதியோர் இல்லத்தில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ. 2

கைதடி அரச முதியோர் இல்லத்தில் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் மு.ப. 10 மணிக்கு நடைபெறும். இலங்கை கியூமெடிக்கா நிறுவனத்தினால் நடத்தப்படும் இந்த மருத்துவ முகாமில் சகல வயோதிபர்களும் பங்கு பற்றிப் பயன்பெற முடியும் என்று முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.திருபாகரன் தெரிவித்துள்ளார். மருத்துவ முகாமில் கண் சிகிச்சை உட்பட ஏனைய மருத்துவ சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும். முகாமில் பிரபல வைத்திய நிபுணர்கள் பங்குபற்றவுள்ளதால் அன்றையதினம் சகல மக்களும் இதில் கலந்து பயன்பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஜ-17)



## பேஸ்புக்கின் மெமரியில் உள்ள பழைய விடயங்களை மறைப்பது எப்படி?

எமது வாழ்க்கையில் நடக்கும் முக்கியமான விடயங்களை மட்டுமல்லாது அவ்வப்போது, எமக்குக் கோபத்தையோ, சோகத்தையோ ஏற்படுத்திய சம்பவங்களையும் உலகோடு பகிர்ந்துகொள்ள நாம் பேஸ்புக் போன்ற இணைய தளங்களை நாடுகின்றோம். பிரிந்து போன காதலி, காதலனுடன் மகிழ்ந்த நிமிடங்களை என்றைக்கோ பதிவு செய்திருந்ததைப், பிரிந்து வேறு ஒருவரை மணம்முடித்த பின்னர் பல ஆண்டுகள் கழித்து திடீரென பேஸ்புக் ஞாபகப்படுத்தினால்..! இதுபோன்ற சோதனையான சூழ் நிலைகளுக்கு நாம் தள்ளப்படாமலிருக்க www.fac ebook.com/onthisday.. என்ற இந்தப் பக்கத்துக்குச் சென்று நோட்டி பிகேன் பொத்தானை அழுத்தி, அதில் வேண்டிய மாற்றத்தைச் செய்துகொள்ளலாம். இதேபோல, நியூஸ்பீட் பக்கத்திலும் நீங்கள் எவருடைய கருத்துக்களைப் பார்க்க விரும்புகின்றீர்களோ, அதற்கேற்ப 'பிரிபரன்ஸ்' பொத்தானை அழுத்தி மாற்றம் செய்துகொள்ளலாம்.

## டேப்லட் கையாள்வதில் சிரமமா?

தற்போது மடிக்கணனிகளின் பாவனை வெகுவாகக் குறைந்த டேப்லட்களின் பாவனை அதிகரித்து வருகின்றது.

இவ்வாறான டேப்லட்களை வசதி போன்று எந்தவொரு இடத்திலும் வைத்து இலகுவாக பாவிப்பதற்கு Booy எனும் சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 60 டொலர்களே பெறுமதி வாய்ந்த இந்தச் சாதனம் தற்போது விளம்பரப்படுத்தல் மற்றும் நிதி திரட்டல் நோக்கங்களுக்காக Kickstarter தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## மர நடுகை மாதம்

## தல விருட்சம்

*"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."* –வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

கார்த்திகை மாதம் பல சிறப்பியல்புகளைக் கொண்டது. 'கார் நாற்பது', 'நெடுநல்வாடை' 'அகநானூறு', 'சிலப்பதிகாரம்' போன்ற பழந்தமிழ் நூல்களில் கார்த்திகை மாதத்தின் சிறப்புப்பற்றிப் போற்றிக் கூறப்படுகின்றது. இது ஓர் அற்புத மாதம். வாழ்வை வழம் பெறச் செய்யும் மாதம். இந்த மாதத்தில் எந்த வகையான புண்ணிய காரியங்கள் செய்தாலும், மிக நல்ல பயன் கிடைக்கும் என்று சாஸ்திரங்களில் கூறப்படுகின்றது. சாஸ்திரத்தில் நம்பிக்கை இல்லாவிட்டாலும், கவலைகள் தீர்க்கும் மாதம் கார்த்திகை மாதம் என்பதனைப் பலரும் உணர்வர். இந்த மாதத்தை மர நடுகை மாதமாகத் தேர்ந்தெடுத்து, அதற்கான செயலில் இறங்குவது, எதிர்காலச் சந்ததிக்கும், பூமித் தாய்க்கும் நாம் செய்யும் மாபெரும் நன்றிக்கடனாகும். ஏனெனில் இந்தப் புவி வெறுமனே எமக்கு உரியது மட்டுமல்ல, எதிர்காலச் சந்ததியினருக்கும் ஆனதுமாகும். அதனை ஒருபோதும் புறந்தள்ளி விட முடியாது. நமது முன்னோர் மரங்களின் மீது கொண்ட பற்றுக்கும் பாசத்துக்கும் கோயில்களில் காணப்படும் தல விருட்சங்களே சான்றாகும். சைவத் தலங்களில் முதன்மையான தலங்களில் ஒன்றான, சிதம்பரத்தில் 61 வகையான தல விருட்சங்களை வளர்க்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இது 2 ஏக்கர் பரப்பில் சிதம்பரம் யானை மேட்டுக் குளப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சிதம்பரத்தில் தில்லை வனம் - தில்லை எனும் ஒரு வகை மரங்களைக் கொண்ட பகுதி இருந்ததாகவும், காலப்போக்கில் அது அழிந்துவிட்டதாகவும், அதனை நிவர்த்திக்கவே 61 வகையான தல விருட்சங்கள் உண்டாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தகைய தல விருட்சங்கள் ஆலயத்திலுள்ள தெய்வ சந்நிதானங்களில் ஒன்றாக மதித்து, பூஜித்து வழிபடுகின்ற மரபு பேணப்படுகின்றது. அது இயற்கைமீது கொண்ட பக்தியின் வெளிப்பாடு என்று கூறினால் மிகையாகாது. தல விருட்சங்களுக்கு ஆன்ம சக்தி உண்டு என நம்பப்படுகின்றது. ஆலயத்தின் பழைமைச் சிறப்பை உணர்த்துவது. தலத்தின் சிறப்பும் தல விருட்சத்துள் அடங்கியுள்ளது. ஆல மரம், அரச மரம், வன்னி, விளா, நாகா, வில்வம், விளா, பலா, மா, வேம்பு, இலந்தை, அத்தி, பாரிஜாதம், வேங்கை, கடம்பு போன்ற நூற்றுக்கு மேற்பட்ட வகையான மரங்கள் தல விருட்சங்களாக பல்வேறு கோயில்களிலும் வழிபடப்படுகின்றன. பனை மரங் கூட ஓர் ஆலயத்தில் தல விருட்சமாக போற்றி பாதுகாக்கப்படுகின்றது. சில இடங்களில் மூவாயிரம் ஆண்டுகால வாழ்வுகாலத்தைக் கொண்ட தல விருட்சம் பசுமை மாறாமல், பூத்துக் குலுங்கும் அதிசயமுமுள்ளது. இலந்தை மரக் காற்றும், இலந்தைக் கனியும் உடற் சூட்டைக் குறைக்கும் என்கிறது சித்த மருத்துவம். மரத்தின் இலைகளும், கிளைகளும் ஆடி அசைந்தால், அது எமக்குத் தரும் ஆசி என உணர்ந்து கொள்வோம். ஆலயங்களில் ஆரோக்கியம் அருளும் பொருட்டே ஆலய விருட்சங்கள் உள்ளன.

–செ.செல்வராஜா, அரியாலை–





சோமாலிய தலைநகர் மோகடிசூவில் இடம்பெற்ற இருவேறு குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர். குறித்த பிராந்தியத்திலுள்ள விடுதி ஒன்றினுள் நுழைந்த அல் சபாப் தீவிரவாத அமைப்பின் போராளி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மோகடிசூவில் அல் சபாப் போராளிகள் கடந்த சில காலமாக தொடர்ந்து தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றனர். குறிப்பாக அரசு அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதிகளை இலக்கு வைத்து தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதல்களில் அல் சபாப் போராளிகள் தனித்துவமான ஒரு யுக்தியைக் கையாளுகின்றனர். அவர்கள் தாக்குதல் நடத்த திட்டமிடும் ஹோட்டலுக்குள் அல் சபாப் போராளி நுழைவதற்கு முன்னர் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்கின்றனர்.

அந்தக் கபேபரத்தில் அனைவரும் மூழ்கியிருக்கையில் விடுதிக்குள் நுழையும் போராளி தாக்குதல் நடத்தி திட்டமிட்டபடி கொலை செய்கின்றார்.

குறித்த ஹொட்டலுக்குள் துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதற்கு முன்னர் ஹோட்டலின் வாயிற் பகுதியில் இரு வேறு கார் குண்டுத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன என்று அந்த விடுதியின் காவலாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ற)

# ஐந்து மாத
# 28,000 பேரு
## திணறுக்கின்ற

லண்டன், நவ.2
தாய்வானில் கடந்த மே மாதத்
காலப்பகுதியில் சுமார் 2
இனங்காணப்பட்டுள்ளன
உயிரிழந்துள்ளனர் என்று
இந்தத் தகவலை தாய்வா
தொடர்பான கட்டளை மை
அறிவித்துள்ளது.
கடந்த வியாழக்கிழமை
நோயாளர்கள் புதிதாக இனங்
அந்த மையம் வெளியிட்
காட்டப்பட்டுள்ளது.
அதில் தைவான் மாகாணத்
டெங்கு நோயாளர்களும்,
நோயாளர்களும் இனங்கா
தெரிவிக்கப்படுகின்றது.
இதனையடுத்து அதிகமா
இனங்காணப்பட்ட தைவ
களவிலான டெங்கு ஒழிப்
முன்னெடுக்கப்பட்டு வருகின்
தாய்வானின் சுசாங் உள்ள
டெங்கு நோய் பரவுவது உறு
அந்த நாட்டு சுகாதார ஆய்வு

# அணு ஆயுத சோதனைக்கு பூமிக்கு அடியில் சுரங்கம்!
## வடகொரியா மும்முரம்

பியாங்யாங், நவ.2
வடகொரியா எதிர்காலத்தில் பரந்த அளவிலான அணு ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனை நடத்துவதற்காக பூமிக்கடியில் பெரும் சுரங்கம் தோண்டும் பணியை ஆரம்பித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடகொரியாவின் வடகிழக்கு மாகாணத்தில் புங்கி என்ற இடத்தில் பூமிக்கடியில் மிகப்பெரிய அளவிலான சுரங்கம் தோண்டும் பணிகள் நடந்து வருகின்றன என்று யான்ஹாப் என்ற செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சீன, தென்கொரிய, அமெரிக்க ராணுவ அமைச்சர்கள், தென்கொரியாவின் சீயோல் நகரில் சந்தித்து வடகொரியாவின் அணு நடவடிக்கையை தடுப்பது குறித்து ஆலோசிக்க உள்ள நிலையில் இந்தச் செயற்பாடானது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள வடகொரியா 2013ஆம் ஆண்டு முதல் இதுவரை மூன்று முறை அணு சோதனை நடத்தி சர்வதேச சமூகத்தை மிரட்டி வருகிறது.

வடகொரியாவின் இந்தப் போக்குக்கு ஐ.நா. கடும் கண்டனம் தெரிவித்ததுடன் அணுத் திட்டங்களை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி வருகின்றது. (ற)

# சிறைக் கைதிகளுக்காக 80 பில். டொலர் செலவு
## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கவலை

வொஷிங்டன், நவ.2
அமெரிக்காவில் உள்ள சிறைக் கைதிகள் மற்றும் கண்கா்ணிப்பில் உள்ள குற்றவாளிகளுக்காக ஆண்டுதோறும் 80 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் அந்த நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா.

இதனை சீர்செய்ய குற்றவியல் நீதி ஒழுங்கு முறையில் சீர்திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்றும் சாதாரண குற்றங்களை புரிந்தவர்கள் அதிக தண்டனை அனுபவிக்காத வகையிலும், சிறையில் இருந்து வெளியே வருபவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவது உள்ளிட்ட அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த சீர்திருத்தம் அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அமெரிக்காவில் தற்போது 22 லட்சம் மக்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பரோலிலோ அல்லது மேற்கண்காணிப்பிலோ வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்காக ஆண்டுதோறும் 80 பில்லியன் அமெரிக்கன் டொலரை நாம் வரியில் இருந்து செலவிடுகிறோம்.

சாதாரண குற்றங்களை செய்தவர்கள் அதிகளவில் தண்டனை பெறும் சூழ்நிலை நிலவுகிறது. சிறையில் இருந்து வெளியே வருபவர்களுக்கு வேலை கிடைப்பது சிரமமாக உள்ளது.

இதனால் நம் நாட்டு குற்றவியல் நீதி அமைப்பு சட்டங்களில் உரிய, மேம்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். இதனை எதிர்க்கட்சிகளுடன் இணைந்து சுமுகமாகக் கொண்டுவர வேண்டும் என்று விரும்புகிறேன்.- என்றார். (ற)

# அத்துமீறின
# போர் வெடிக்
## அமெரிக்காவை எச்சரிக்கின்

பீஜிங், நவ.2
சீனா கட்டுப்பாட்டில் உள்ள ஸ்பார்ட்டி தீவுக்கு மிக அருகே அமெரிக்காவின் போர்க்கப்பல் சில தினங்களுக்கு முன்பு ரோந்து நடவடிக்கை மேற்கொண்டமைக்கு சீனா கடும் கண்டனம் வெளியிட்டுள்ள நிலையில் தென் சீனக் கடலில் அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் அத்துமீறினால் போர் வெடிக்கும் என்றும் எச்சரிக்கை செய்துள்ளது.

எனினும் அதற்கு மறுப்பு தெரிவித்த அமெரிக்கா அது சீனாவின் கடல் பகுதி இல்லை. சர்வதேச எல்லை எனத் தெரிவித்துள்ளது. அதையடுத்து இந்தப் பிரச்சினை பெரும் சர்ச்சையாக வெடித்துள்ளது.

இது தொடர்பில் சீன கடற்படை தளபதி அட்மிரல் வூ செங்லி ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் தென் சீன கடலில் அமெரிக்க போர்க் கப்பல்கள் அத்துமீறுவதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்க கடற்படைத்தளபதி அட்மினரல் ஜோன்ரிச் சர்ட்சனை கேட்டுக் கொள்கிறேன்.



அமெரிக்க கடற்படை, மற்றும் விமானப் படை தொடர்ந்து அத்து மீறினால் கடற்பரப்பு மற்றும் வான் வழியாக தாக்குதல் நடத்துவோம். ஒரு சிறிய சம்பவம் கூட இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் சூழலை ஏற்படுத்திவிடும்.- என்று தெரிவித்துள்ளார்.

சீனா, தென் சீன கடலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதனால் பிலிப்பைன்ஸ், ஜப்பான், வியட்நாம், மலேசியா, தாய்வான், புருனே ஆகிய

# ஆயிரம் கைதிகளை விடுவிக்கிறது அமெ

வொஷிங்டன், நவ.2
அமெரிக்கச் சிறைகளில் இருக்கும் அதிகப்படியான கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் முகமாக சிறைகளில் இருக்கும் போதை மருந்து தொடர்பான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட சுமார் ஆறாயிரம் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடைமுறையை அமெரிக்க நீதியமைச்சகம் ஆரம்பித்துள்ளது.

வன்முறை தொடர்பற்ற குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்களின் சிறைவாசத்தைக் குறைப்பதற்கு அரசு எடுத்த முடிவின் விளைவாக இவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க மத்திய சிறைகளில் இருக்கும் கைதிகளில் ஏறக்குறைய சரிபாதிபேர் இப்படியானவர்கள் எனக் கூறப்படுகின்றது. விடுவிக்கப்படவிருக்கும் கைதிகளில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் வெளிநாட்டவர்கள் என்பதால் அவர்கள் அவர்களின் நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலையை எதிர்நோக்கியிருப்பவர்களில் பலர் ஏற்கனவே சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு, சமூகத்தில் அனுமதிக்கப்படுவதற்கு முந்தைய நிலையான கண்காணிப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது. ஏனைய கைதிகள் நாளை செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்படவிருக்கும் கைதி

## மாத காலத்தில்
## 0 பேருக்கு டெங்கு
### க்கின்றது தாய்வான்

2
ந்த மே மாதத்தில் இருந்து இதுவரையான
ில் சுமார் 28 ஆயிரத்து 744 பேர்
ப்பட்டுள்ளனர். அவர்களில் 129 பேர்
ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
லை தாய்வானின் தொற்றுநோய்கள்
கட்டளை மையம் உத்தியோகபூர்வமாக
து.
ழக்கிழமை மாத்திரம் 315 டெங்கு
புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று
வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்
து.
ன் மாகாணத்தின் தைசுங் நகரில் 226
ாளர்களும், தைவான் நகரில் 54 டெங்கு
ரும் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும்
டுகின்றது.
து அதிகமான டெங்கு நோயாளர்கள்
ப்பட்ட தைவான் மாகாணத்தில் அதி
டெங்கு ஒழிப்புத் திட்டங்கள் துரிதகதியில்
ப்பட்டு வருகின்றன.
சுசாங் உள்ளிட்ட 21 பிராந்தியங்களில்
பரவுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று
காதார ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ற)

## ினால்
## ுக்கும்
### க்கின்றது சீனா



விமா
மீறி
வான்
வாம்.
இரு
போர்
டும்.-
திக்கம்
பிலிப்
நாம்,
ஆகிய

நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையே முறுகல் நிலை காணப்படுகின்றது. பிலிப்பைன்ஸ், ஜப்பானுக்கு ஆதரவாக அமெரிக்கா செயல்படுகிறது. தென் சீன கடலில் மணல் கற்களை கொட்டி சீனா பல செயற்கை தீவுகளை உருவாக்கி வருகிறது. அதில் விமானப்படை தளம், கடற்படை தளம் மற்றும் கலங்கரை விளக்கம் கட்டுகின்றது. அதற்கு அமெரிக்காவும், பசிபிக் நாடுகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. (ற)

## அமெரிக்கா

பட்டு,
வதற்கு
கண்
தங்க
என்று
கைதி
ழமை
ார்கள்
.
கைதி

களில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் வெளிநாட்டவர்கள் என்பதால் அவர்கள் அவர்களின் நாடுகளுக்கு திருப்பியனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அமெரிக்க வரலாற்றில் இந்த அளவுக்கு பெருமளவிலான கைதிகள் இதுவரை ஒரே சமயத்தில் விடுவிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். (ற)

# ரஷ்ய விமானம் சிதறியது ஐ.எஸ்ஸின் தாக்குதலால்!
## வெளியான தகவலால் அதிர்ச்சி



மொஸ்கோ, நவ.2
தொழில்நுட்பக் கோளாறு காரணமாவே எயர்பஸ் ஏ-321 ரஷ்ய பயணிகள் விமானம் விபத்துக்குள்ளாகிது என்று கூறப்பட்டுவந்த நிலையில், எகிப்தின் சினாய் பகுதியில் செயற்படும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு தாமே ரஷ்ய விமானத்தை சுட்டு வீழ்த்தினர் என்று உரிமை கோரியுள்ளது.
ஐ.எஸ். அமைப்பின் ஆதரவு இணையதளமும் இந்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளது. அந்த தளத்தில் ஐ.எஸ். போராளிகள் எகிப்தின் சினாய் மாகாணத்தில், 224 பேருடன் சென்ற ரஷ்ய விமானத்தை வெற்றிகரமாக சுட்டு வீழ்த்தியுள்ளனர். விமானத்தில் பயணித்த அனைவரும் கொல்லப்பட்டார்கள். கடவுளுக்கு நன்றி என கூறப்பட்டுள்ளது.
எகிப்தின் சினாய் தீபகற்பத்தில் இருந்து ரஷ்யா நோக்கி பயணித்த ரஷ்ய விமானம், மத்திய சினாய் தீபகற்பத்தில் நேற்றுமுன்தினம் வீழ்ந்து நொறுங்கியது. விமானத்தின் சிதைவுகள் ஹஸ்ஸானா பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று பிந்திய தகவல்கள் குறிப்பிடுகின்றன.
சுமார் 31 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கையில் அந்த விமானம் திடீரென விழுந்து நொறுங்கியுள்ளதாக இது தொடர்பில் கருத்து தெரிவித்த எகிப்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இந்த விமானம் 217 பயணிகள் மற்றும் 7 ஊழியர்களுடன் பறப்பை மேற்கொண்டிருந்தது.



### கறுப்புப் பெட்டி மீட்பு

விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
அவற்றில் பதிவாகியுள்ள விமானியின் உரையாடலை ஆய்வு செய்த பின்னர், அந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதா? அல்லது, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தரையில் விழுந்து நொறுங்கியதா? என்ற விவரம் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
செங்கடலை ஒட்டியுள்ள கடற்கரை நகரமான சினாய் கோஸ்டல் ரிசார்ட் நகரில் இருந்து திரும்பிய அந்த விமானத்தில் இருந்தவர்கள் பெரும்பாலும் ரஷ்ய நாட்டு சுற்றுலாப் பயணிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### அவசர குழு விரைவு

ரஷ்ய விமான விபத்து இடம்பெற்ற சினாய் பகுதிக்குச் செல்லும் பொருட்டு ரஷ்ய அவசரகால குழு நேற்றுக் காலை எகிப்தின் ஹெய்ரோவுக்குச் சென்றுள்ளது.
ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் பணிப்புரையின் பேரிலேயே அமைச்சர்கள் அடங்கிய குழு அவசர பயணமாக எகிப்து சென்றுள்ளனர்.
விமான விபத்தில் இறந்தவர்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். அமைச்சர்கள் அடங்கிய அவசரகால குழுவை விபத்து நடந்த இடத்துக்கு உடனடியாக செல்லும்படி புடின் உத்தரவிட்டுள்ளார். இந்த குழுவில் அவசரகால அமைச்சர் விளாடிமிர் பச்கோவ், போக்குவரத்து அமைச்சர் மக்சிம் சோகோலோ மற்றும் மீட்புக் குழுவினர் இடம்பெற்றுள்ளனர் என்று ரஷ்யா சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தகவல் அறிந்த எகிப்து மீட்புப் படை சம்பவ இடத்திற்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகிறது. 17 குழந்தைகள் உட்பட 100க்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. விமானத்தில் பயணம் செய்த எவரும் உயிர்பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்று மீட்புப் படை அதிகாரி தெரிவித்துள்ளார்.



### தாக்குதலுக்கு பதிலடி

கடந்த ஒரு மாதமாக ரஷ்யா சிரியாவில் உள்ள ஐ.எஸ். அமைப்பினரின் தளங்கள் மீது கடும் விமானத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. அதனால் ஐ.எஸ். அமைப்பு கடும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. ரஷ்யாவின் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சுமார் 30க்கும் மேற்பட்ட முக்கிய நகரங்களை ஐ.எஸ். அமைப்பு சிரியப் படைகளிடம் இழந்துள்ளது. ரஷ்யாவின் விமானத் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அந்த அமைப்பு பயணிகள் விமானத்தைத் தாக்கி இருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது.
அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் விமானம் தாக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



### துக்க தினம்

விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று ரஷ்யாவில் தேசிய துக்க தினமாக கடைப்பிடிக்கப்பட்டது. ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் பணிப்புரைக்கு அமைய துக்க தினம் கடைப்பிடிக்கப்பட்டது. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி மற்றும் ஏனைய அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் உள்ள ரஷ்ய தேசி

**ஊரவன்**

# நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம்

# தீவின் விருட்சமாக மாறுவது எப்போது?

நெடுந்தொலைவில் உள்ள நெடுந்தீவும் அதன் மக்களும் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக யாழ். பெரு நிலப்பரப்பை எதிர்பார்த்துத்தான் தம் வாழ்வைத் தொடர்கின்றனர். ஆனால், இவற்றில் பெரும்பாலான தேவையை உள்ளூரிலேயே நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பத்தை மக்களுக்கு 'நெடுந்தீவு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம்' மட்டுமே ஏற்படுத்திக்கொடுக்கமுடியும். இவ்வாறான சேவையால் 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதையும் மெய்ப்பிக்க முடியும்.

ஆனால், இந்தக் கட்டுரை வரையும் வரை மக்கள் இதனை எதிர்பார்த்திருப்பதும், அதன் சேவைகளை அனுபவிக்கத் துடிப்பதும் தொடர்ந்து கொண்டுதான் இருக் கின்றது. மக்கள் தங்கள் விருப்புக்கேற்ப கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்து அதனூடாக ஓர் இயக்குநர் சபையை கட்டி நல்ல சேவையைப் பெறுவதென்பது கடந்துவரும் காலங்களில் முடியாத ஒன்றாகி விட்டதுடன் இதற்கமைய கூட்டுற வும் வளைந்து கொடுக்கிறது. இங்கு கிளைக் குழுத் தேர்தல் நடைபெறவில்லை. இத னால் ஓர் இயக்குநர் சபை இல்லை. தொடரும் அரசியல் மாற்றங்களின்போது மாறிமாறித் தலைமையை நியமிப்பதும் வரை முறையுமாகிவிட்டது.

பெரும்பாலான திட்டநிதி ஒதுக்கீடுகள், மக்களது பணம், நிதிசார் நிறுவன உதவிகள் என்பவற்றுடன் உள்ளூரிலே உழவு இயந்திரங்கள், கடலிலே படகு, யாழ்.நிலப்பரப்பிலே பாரவூர்திகள் எனப்பெருமளவு நிதி முதலீடின்றி பெறப்பட்டு பராமரிப்புச் செலவுடன் மட்டும் இயக்கப்பட்டுவரும் இத்தனை சாதனங்களைத் தன்னகத்தே வைத்துள்ளது பல.நோ.கூ.சங்கம்.

ஆனால், பருவகாலங்களை எதிர்பார்த்து சிறிய முதலீடுகள் மூலம் தொழில் செய்து கிளை விளைபொருள்களைச் சந்தைப் படுத்தவோ, பெரு இலாபத்துடன் விற்கவோ உள்ளூரில் களம் கிடைக்காமல் வாகனக் கூலிகளைக் கொடுத்து யாழ்.நகரில் இடைத் தரகர்களின் கைகளில் மாட்டிக் கொண்டு குறைந்த விலைகளில் விற்க வேண்டிய நிலையுள்ளது. இதனை ஏன் இத்தனை ஊடக வளங்கள் கொண்ட நெடு.பல. நோ.கூ.சங்கம் கொள்வனவு செய்து மக்களின் அலைச்சலைதவிர்த்து, இலாபத்தை உள்ளூரிலேயே பகிர முடியாதுள்ளது. இதன் காரணமாக யார் யாரோ வந்து வளங்களை அள்ளி எடுத்து கிள்ளிக் கொடுத்து விட்டுக் கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றார்கள். இதனை எமது சங்கம் முறியடித்து செயற்பட்டால் எமது பணம், முதலீடு எல்லாம் எம்மிடமே சுழன்றுவரும். தீவும் அபிவிருத்தியடையும்.

இவ்வாறான முயற்சிகளை தீவிலுள்ள சில துடிப்பான தனி வியாபார நிலைய முதலாளிகள் செய்து பலபடிகள் முன்னேறி உச்சமடைகின்றனர் என்றால் நெடுந்தீவின் 15 வட்டாரங்களுக்கும் ஆங்காங்கே கிளைகளை நிறுவியுள்ள பல.நோ.கூ.சங்கம் மூலம் இதனை அடைய முடியாதுள்ளது.

இதற்கெல்லாம் காரணம் மாறிமாறி வருகின்ற தலைமைத்துவமும் இயக்குநர் சபையும் தான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் பெயருக்கும், தொடர் பதவிக்குமாக இதன் தலைமையை ஏற்று வருகின்ற அத்தனை பேரும் இதன் வளர்ச்சியிலே முழுப்பயனையும் எட்டிப் பிடிக்க முடியாது போனது ஏன்..?

இவ்வாறு இந்தக் கட்டுரையில் தேடலை, மேற்கொள்வதன் எனது நோக்கம் தீவின் தேவைகளை நிறைவு செய்யவும், மேற்கொள்ளவும் பலரும் பல நிர்வாகங் களையும், தலைமைப் பொறுப்பையும் வைத்து இதுவரை எதனைச் சாதித்துள்ளனர். நெடுந்தீவில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு பெருவிருட்சம், நிறுவனம் பல.நோ.கூ.சங்கம்தான் இதன் மூலமே தீவின் அபிவிருத்தி, வருமானம், சேவை என்பவற்றைச் சிறப்பாக அடையமுடியும். முடியாதென ஒன்றும் இல்லை. புலம் பெயர்ந்து வெளிநாட்டில் இருப்போர் தாம் வாழும் நாட்டின் பெயரை வைத்து ஒவ்வொரு அமைப்புக்களை உருவாக்கி இன்றுவரை எதனைச் சாதித்தார்கள், சாதிக்கப் போகின்றார்கள். நல்ல நிலையில் நிர்வாகக் கட்டமைப்புடன் நெடுந்தீவு பல. நோ.கூ.சங்கம் இயங்குமானால், இதுவே போதும். அரச சார்பற்ற நிதிமூலம் நெடுந்தீவின் வளர்ச்சியைக் கட்டியெழுப்புவதற்கு இதுவே ஒரு தலைமையகமாக இருந்து பல செயற்பாடுகளை முன்னேற்ற முடியும் என்பதேயாகும். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான நிலையில் உல்லாசப் பயணிகள் வருகை எமது தீவுக்கு அதிகரித்துள்ளது. இதனை எப்படி எதிர்கொள்வது என சங்கத்தினர் ஒருபோதாவது சிந்தித்ததுண்டா? வருபவர்கள் தங்குவதற்கு ஒரு விடுதி, சுற்றிக்காட்ட வாகனவசதி, இதனைச் செய்தால்கூட, பெயரும் வளரும், வருமானமும் கிடைக்கும்.

பொதுப்பரீட்சைகளில் சித்தியடைவோரைப் பாராட்டுதல், ஏனையோரை ஊக்குவித்தல் என தீவோடு இணைந்த சங்கத்தால் ஏன் செய்யமுடியாதுள்ளது. இவற்றையெல்லாம் ஏனைய இடங்களில் உள்ள சங்கங்களைப்பார்த்து அல்லது சமாசங்களைக் கேட்டு அறிந்து கொண்டு பூர்த்தி செய்ய முடியாதா?

பல.நோ.கூ.சங்கம் என்பது சேவைக்கால நிறுவனம் மட்டும் அல்ல. இலாபத்தையும் அடைய வேண்டும். அதனூடாகவே ஊழியர்களது மாதாந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளமுடியும். மற்றும் இதர வளங்களைக் கட்டியெழுப்ப முடியும். தனிப்பட்டவர்கள் தற்போது பல இலட்சக் கணக்கிலே உணவுப்பொருள்கள் முதல் கட்டப்பொருள்கள் வரை கடனடிப்படையில் யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் இருந்து பெற்றுத் தீவிலே வேலைகளையும், வியாபாரத்தையும் மேற்கொண்டு வருகின்றனர் என்றால் நீண்டகால வரலாற்றையும் உறவையும் யாழ்.வர்த்தக வட்டாரத்தில் வைத்துள்ள கூட்டுறவுச் சங்கம் இதனைச் சிறப்பாகச் செய்ய முடியாதுள்ளது.

வாகனத்தேய்வு, பராமரிப்பு என்று குறுகிய முதலீட்டுடன் இயங்கும் சகல போக்குவரத்து ஊடகங்களையும் கையிலே வைத்துள்ள இந்தப் பெரிய இயந்திரத்தால் இதனை ஏன் நிறைவேற்ற முடியாதுள்ளது. இன்றும் சங்கத்தின் ஊழியர்கள் சம்பளமின்றி வேலை செய்வதாகத் தெரிகின்றது. இதனை வெளியிலே கூறினால் தீவுக்கே அவமானம் தான். ஆனால் ஏன் இப்படி என்று ஒரு கணம் சிந்தியுங்கள்.

வருமானம் என்பது எல்லோரும் எதிர்பார்ப்பதுதான். அதன்மூலம் இலாபத்தை அடைந்து சேவைகளையும் செய்து தீவில் நற்பெயர் பெற்ற நல்ல நிறுவனமாகத் திகழ்ந்தால் எத்தனையோ முதலீடுகள் எம்மைத் தேடிவரும். இதன்மூலம் மேலும் இலாபம் அடையலாம்.

இதற்கெல்லாம் மக்கள் பிரதிநிதிகளாக மக்களால் ஒவ்வொரு வட்டாரக் கிளைகள் மூலமாகத் தெரிவு செய்யப்படுவோரும், இதனடிப்படையில் அமையும் இயக்குநர் சபையும் மிகவும் பலம்மிக்கதாக இருப்பதுடன், இதனை ஏற்று நடக்கும் நிர்வாகத்தை இயக்கிச் செல்லும் பணியாளர்களும் தரமானவர்களாக அமைதல் வேண்டும். இவர்கள் அனைவரிலும் தீவு மக்கள் என்றும் நம்பிக்கை கொண்டு நடக்க வேண்டும். இவ்வாறு நடப்பார்களானால் இன்னும் குறுகிய காலத்தில் தீவகங்களிலே சிறந்த சங்கமாக நெடுந்தீவு சங்கத்தை நிலைநிறுத்த முடியும்.

நெடுந்தீவுக்கென முன்னெடுக்கப்படுகின்ற பல லட்சக்கணக்கான நிதி ஒதுக்கீடுகள் மூலமான வேலைத்திட்டங்களை பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் என்ற முறையிலும், சகல வளங்களும் படைத்தவர் என்ற முறையிலும் ஏன் ஏற்றுக்கொண்டு செய்ய முடியாதுள்ளது. தனியார் துறையினரால் இதனை பெரும் இலாபத்துடன் செய்ய முடிகின்றதென்றால் சங்கத்தினரால் ஏன் செய்யமுடியாதுள்ளது. நிர்வாகமா? இதை தெரிவு செய்த மக்களா?

கடந்த சில காலங்களில் இவ்வாறான முன்னெடுப்புக்கள் இருந்தபோதும், நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் நிலைமை மாறி இலவச நிவாரண விநியோகத்துக்கு மட்டும்தான் சங்கம் என்றாகி இன்று அது மட்டும்தான் என்றாகிவிட்டது.

விழுந்தவர்கள் அனைவரும் எழுந்து முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் சூழலில், இப்போதும் சங்கத்தின் நிர்வாகம் ஏன் நிமிர்ந்து நின்று பணியாற்றமுடியாதுள்ளது?

பல வளங்கள், சேவைகள், சாதனங்கள், பணியாளர்கள், அரச இயந்திரங்கள், அரசியல் வட்டாரங்கள் எனத் தன்னகத்தே உள்ளீர்க்கும் சக்தி கொண்ட பொது நிறுவனமான பல.நோ.கூ.சங்கமானது, தனது நிர்வாகக் கட்டமைப்பை வட்டார ரீதியான கிளைத்தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரியப்பட்டு அதனூடாக இயக்குநர் சபையும், தலைவர் தெரிவும் இடம்பெற்ற ஒரு கூட்டுறவுச் சட்ட நிர்வாகம் மூலம் நிர்வகிக்கப்பட்டு, நிர்வாகத்திறனை வளர்த்துக்கொண்டு மெல்ல மெல்ல அடியெடுத்தால் நாளடைவில் வெற்றிநடை போடமுடியும் என்பது திண்ணம். முடியாது என்று எதுவுமே இல்லை.

'கூட்டுறவே நாட்டு உயர்வு'

மீண்டும் எழுந்து வீறுநடை போடுவோம்

# பத்தாண்டுகள் பூர்த்தியில் வெல்வட்




கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்னர் நூறு சதவீதம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெல்வட் அறிமுகத்தோடு இலங்கையின் அழகு சவர்காரத் துறையில் புதிய சகாப்தம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான இலங்கையர்களின் வாழ்வை மேம்படுத்த மற்றும் மிருதுவாக்கும் மிகச்சிறந்த உற்பத்தி எனும் ரீதியில், இன்று அதன் ஆடம்பரமான வரலாற்றையும், அபிமானத் தையும் வெல்வட் கொண்டாடுகிறது. தன்னை அழகாகக் காட்டிக்கொள்ளவும், வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவும் விரும்பும் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் தொடர்பில் ஆழமான புரிதலை வெல்வட் கொண்டுள்ளது. நியாயமான உரையாடல்கள், புத்தாக்கம் மற்றும் நீடித்த பாரம்பரியம் ஊடாக வெல்வட் உலகத் தரத்தை பேணும் அதே வேளை, உண்மையான உள்நாட்டு உற்பத்தியை வழங்கி வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து மகிழ்வித்த வண்ணமுள்ளது. இதற்கு முன்னைய ஆண்டுகளில் இலங்கை சந்தைப்படுத்தல் ஆய்வு பணியகத்தின் வீட்டு பெனல் வேலைத்திட்டம் மூலம் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கமைய, போட்டிமிக்க அழகு சவர்க்காரப் பிரிவில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக நாமங்கள் மத்தியில் இலங்கையில் முதலிடத்தில் உள்ள அழகு சவர்க்காரம் எனும் பெருமையை பெற்ற வெல்வட் 2015 ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன் னெடுக்கப்பட்ட ஸ்தானத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வெல்வட் உற்பத்தி தெரிவுகளுள் இளமையான சருமத்துக்கு ரோஜா மற்றும் மாதுளம், போசாக்கான சருமத்துக்குப் பால் மற்றும் பாதாம், பளபளப்பான சருமத்துக்கு சந்தனம் மற்றும் மரமஞ்சள், பொலிவான சருமத்துக்கு வேப்பிலை, கற்றாளை மற்றும் பிரகாசமான சருமத்துக்கு பேர்ப்பிள் லோட்டர்ஸ் மற்றும் லெவண்டர் போன்ற தெரிவுகள் உள்ளடங்கியுள்ளன.

மேலும் குளியல்நேரத்தை வெறும் தூய்மைப்படுத்தும் அனுபவமாக மட்டுமன்றி, சருமத்தை புத்துணர்ச்சியூட்டும் வகையில் நீர் லில்லி மற்றும் கடல் தாதுக்கள் எனும் புதிய தெரிவை அண்மையில் வெல்வட் அறிமுகம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் சந்தையில் வர்த்தக நாமத்தின் சக்தி மற்றும் செல்வாக்குத் தொடர்ச்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2014 இலங்கை வர்த்தக நாம சந்தைப்படுத்தல் கல்வியகத்தின் வர்த்தக நாம மேன்மை விருதுகள் வழங்கும் நிகழ்வில் 2014 ஆம் ஆண்டுக்கான சிறந்த வர்த்தக நாமம் எனும் விருதை வெல்வட் வென்றெடுத்தது.

அதே விருதுகள் விழாவில் வருடத்துக்கான சிறந்த உள்நாட்டு வர்த்தக நாமம் மற்றும் வருடத்துக்கான சிறந்த உற்பத்தி வர்த்தக நாமம் விருதுகளையும் தனதாக்கிக்கொண்டது. நுகர்வோருக்கு மிகவும் சகாயமான வகையில் குடும்பப் பொதிகளை உள்நாட்டு சந்தையில் அறிமுகம் செய்த முதலாவது அழகு சவர்க்காரமாக வெல்வட் விளங்குகிறது.

சந்தை முன்னோடி மற்றும் புதிய கண்டுபிடிப்பாளர் எனும் அதன் ஸ்தானத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதுடன், வாடிக்கையாளர்களின் மாற்றமடையும் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையிலான புதிய தெரிவுகளை அறிமுகம் செய்ய வெல்வட் எதிர்பார்த்துள்ளது.

# அல்லாரை வெள்ளாம்போக்கட்டி ஊரெல்லைத் தெரு புனரமைக்கப்படுமா?

தென்மராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட கொடிகாமம் பகுதியில் அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி ஆகிய கிராமங்களைப் பிரிக்கும் மூன்று கிலோ மீற்றர் நீளமான ஊரெல்லைத்தெரு கிட்டத்தட்ட முப்பத்தைந்து வருடங்களாக புனரமைக்கப்படாமலுள்ளது.

இந்த வீதி கல் வீதியா? அல்லது மணல் வீதியா? என்று இனம் காண முடியாத அளவுக்கு கற்களும் மணலும் மட்டுமே கலந்து காணப்படுகின்றன.

இந்த வீதியால் கொடிகாமம் மத்திய மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்களும் கொடிகாமம் மத்திய சந்தைக்கு தாம் உற்பத்தி செய்த விளை பொருள்களுடன் செல்லும் இந்தப் பகுதி விவசாயிகளும் ஏனையோரும் பெரும் சிரமத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது. சைக்கிளுடனும் மோட்டார் சைக்கிளுடனும் செல்வோர் சில இடங்களில் ஓடியும் பல இடங்களில் உருட்டியும் வீதி ஒழுங்குகளைப் பேண முடியாமல் விபத்துக்குள்ளாகிய சம்பவங்களும் பலவுண்டு.

இந்த வீதியின் அவலம் பற்றி சம்பந்தப்பட்டோருக்கு போர் ஓய்வடைந்த 2009ஆம் ஆண்டிலிருந்து பல தடவைகள் பலராலும் பலவிதமாகவும் தெரியப்படுத்தியும் இன்றுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் இடம்பெறவில்லை.

இதனால் அடுத்த 2016ஆம் ஆண்டுக்குரிய அபிவிருத்தி நிதியிலிருந்தாவது இந்த வீதியை சம்பந்தப்பட்டவர்கள் புனரமைக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

சி.காசிப்பிள்ளை,
அல்லாரை வடக்கு, கொடிகாமம்.

# இளைஞர்களிடம் ஒரு வேண்டுகோள்

ஊடகங்களில் இன்று பத்திரிகைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. வாசகர்களிடமிருந்து பலவித அபிப்பிராயங்கள் பத்திரிகைகளுக்குக் கிடைக்கின்றன. அவற்றை உள்வாங்கி சிறந்தவற்றைப் பிரசுரிக்க வேண்டியது பத்திரிகைகளின் கடமையாகும். அந்த வகையில் உதயன் ஆற்றும் பணி சிறப்பானது. சந்திரிகாவை சகலகலாவல்லி எனச் சிறப்பித்து பாடல் இயற்றிய நவீன கலைஞன் ஒருவனைச் சாடி நான் சில தசாப்தங்களுக்கு முன்னரே போராடியிருக்கிறேன். அந்த நினைவுகள் இந்துக்கள் மனத்தைப் புண்படுத்தும் செயல் என்ற வாசகர் கடித மூலம் அன்று அரங்கேறியது.




மேலும் இன்றைய இளைஞர்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். இளைஞனே உன் சமூகத்துக்கு உனது உள்ளம் சொல்வதென்ன? இளைஞனே அதனை எழுது. அதன்போது இதனை மறவாதே.

வானரம் மழையினில் நனையத் தூக்கணான்
தானொரு நொடி சொல்லத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக்குரைத்திடல் இடரதாகுமே.

நான் இளமையில் எழுத வேண்டுமென்று நினைத்திருந்ததெல்லாம் தற்போது காலாவதியாகி விட்டது. எனவே என்னைப்போல நீயும் ஆகிவிடாமல் இன்று நினைப்பதை இப்போதே அனுப்பு. உதயன் உனக்காகக் காத்திருக்கிறான்.

சி.ஜெயகணேன், சாவகச்சேரி

# உணவகங்களின் சீர்கேடுகள்

உணவகம் ஒன்றில் பரிமாறப்பட்ட கொத்துரொட்டியில் இறைச்சிக்காக அறுக்கப்பட்ட மிருகத்தின் உரோமமும், தீக்குச்சியும் இருந்ததாக வெளிவந்த செய்தி வயிற்றைக் குமட்டுகின்றது.

உணவகங்களின் சுகாதாரக் குறைபாட்டுக்கு இதுவொரு உதாரணமாகும். தினமும் லட்சக்கணக்கானவர்கள் உணவகங்களில் உணவை அருந்துகின்றனர். உணவகங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையில் அங்கே சென்று உணவை அருந்துகின்றனர். ஆனால் இந்த நம்பிக்கையைச் சிதைக்கும் வகையில் உணவகங்கள் நடந்து கொள்வதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

செ.சதீஸ்,
மானிப்பாய்.

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# லஞ்சப் பேர்வழிகளை அனுப்புங்கள் வீட்டுக்கு

வடக்கில் அதிகார மட்டத்திலுள்ளவர்கள் சரிஅதற்குக் கீழ் நிலையிலுள்ளவர்கள்சரி அலுவலகங்களில் வேலையில்லாமல் இருப்பது, அந்த நேரங்களில் வேறு வேலைகள் பார்ப்பது, மோசடிகளில் ஈடுபடுவது, குழப்பங்களில் ஈடுபடுவது, பணிகளை முன்னெடுக்காமலிருப்பது, பக்கச் சார்பான வேலைகளில் ஈடுபடுவது, லஞ்சம் பெறுவது இன்னும் தொடர்ந்து கொண்டுதானிருக்கின்றன. அவற்றுக்காக எப்போதாவது ஒருக்கால் எவராவது ஒருவரைப் பிடித்துவிடுவார்கள். அது பற்றி ஊடகங்களில் செய்திவெளிவரும். அத்துடன் அந்த வருடத்துக்குரிய லஞ்ச ஊழல் ஒழிப்புப் பணி முடிந்துவிடும். அல்லது அத்தகைய குற்றங்களில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுக்களுடன் அத்தகையவர்களின் மீது மேலதிகாரிகளின் நடவடிக்கை மறைந்துவிடும். இது நிதர்சனமான உண்மை.

கல்வி, சுகாதாரம், மதுவரித் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் என்று முறைகேடுகள், லஞ்சம் பெறுவது உள்ளிட்ட பல சம்பவங்களும் முன்னரும் இடம்பெற்றுள்ளன. தற்பொழுதும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

சில நாள்களுக்கு முன்னர் மதுவரித் திணைக்கள வடமாகாண ஆணையாளர் கிறிஸ்ரி ஜோசப் லஞ்சம் பெறும் போது லஞ்ச ஊழல் பிரிவு உயரதிகாரிகளால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார். அவரது பதவி நிலைக்கும் அவர் நடந்து கொண்ட விதம் தொடர்பான குற்றச்சாட்டு அவருக்கு இதனைவிட வேறு கேவலமான எதுவும் தேவையில்லை என்று கருதுமளவுக்கு கீழ்த்தரமாக நடந்து கொண்டுள்ளார் என்பதனைக் காட்டுகிறது.

ஆனால் மதுவரித் திணைக்களத்தின் கீழ் வரும் மேலும் பல அதிகாரிகளும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டு இன்னும் இருந்து கொண்டுதானிருக்கின்றன. கையும் மெய்யுமாக அவர்கள் பிடிபடவில்லை என்பதே உண்மை என்று கூறுவதே சரியானதாக இருக்கும்.

அதுமட்டுமன்றி சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸில் பணி புரியும் 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடைகள் தோறும் சென்று லஞ்சம் பெற்று வந்த நிலையில், ஒரு கடையில் பொலிஸ் சீருடையில் லஞ்சம் பெற்றுச் சென்றமை அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரீவி கமராவில் பதிவாகியுள்ளது. அவர்கள் இருவரதும் வேலையே லஞ்சம் பெறுவதும், ஏனைய பொலிஸார் குற்றவாளிகளை, போக்குவரத்து விதிமீறுபவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யும்போது அந்த அதிகாரிகள் அதனைத் தடுத்துவிடுவார்களாம் என்றும் பொலிஸாரிடையே கதைபடுகிறது. அதற்கும் அவர்கள் பணம் பெற்றுவந்தார்களா என்ற நியாயமான சந்தேகம் எழுப்பப்படுகிறது.

இன்னும் பல துறைகளில் நிதி மோசடி உள்ளிட்ட பல இடம்பெற்றுள்ளன. இன்னும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

இத்தகைய சம்பவங்களை அதிகாரிகள் இனிமேலும் தொடர்வார்களா? ருசி கண்ட அவர்கள் நிதிமோசடி, லஞ்சம் பெறுவதனை இலேசில் விட்டுவிடுவார்களா? அத்தகைய சம்பவங்களில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய முடியாதா? அத்தகையவர்களை இனிமேலும் கட்டுப்படுத்த முடியாதா? என்ற எண்ணற்ற கேள்விகள் எழுந்தாலும் அவற்றை ஏன் செயற்படுத்த முடியாது என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

அத்தகைய நிதிமோசடிகளில் ஈடுபடுபவர்கள் எத்தகையவர்களாக இருந்தாலும், ஏந்தப் பதவி நிலையில் இருந்தாலும், அவர்கள் யாருடைய வாலைப் பிடித்துக் கொண்டு திரிந்தாலும் சரி, எந்த இனத்தவராக இருந்தாலும் சரி அவர்களை விட்டு வைக்கக்கூடாது.

அதனால் பாதிக்கப்படுவது வடக்கு மக்கள். வடக்கின் முன்னேற்றம். வடக்கின் பொருளாதாரம். இங்குள்ள பல மது விற்பனை நிலையங்களும் எந்தத் தராதரத்துடன், எந்த வழிகளில் அனுமதிகளைப் பெற்றுள்ளன? எத்தகைய வழிகளில் அவை புதிப்பிக்கப்படுகின்றன என்ற கேள்விகளின் பின்னால் சென்றால் உண்மை வெளிக்கும். மேலும் பல அதிகாரிகள் சிக்குவர்.

ஆனால் அதனை உத்தியோகபூர்வமாக லஞ்ச ஒழிப்புப் பிரிவினரே மேற்கொள்ள வேண்டும். அவர்கள் அதனை ஆரம்பித்துள்ளனர் என்று கூறலாம். ஆனால் இத்துடன் அவர்கள் விட்டுவிடக் கூடாது என்பதில் கவனம் வேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021 493 1111
விநியோகம் : 021 493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இந்நாட்டின் அரசியலில் இருந்து இனவாதம் ஒழிவதற்கு.....

உலகில் குறிப்பாக இலங்கையில் இன்று வாழ்கின்ற பல தரப்பினர்களில் இந்துக்கள், பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்களே பிரதான பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பௌத்தர்கள் சிங்களம் பேசும் மக்களாகவும் கிறிஸ்துவத்தைப் பின்பற்றும் மக்களாகவும், இந்துக்கள் தமிழ் பேசும் மக்களாகவும் கிறிஸ்துவத்தைப் பேணும் மக்களாகவும் காணப்படுகின்றனர். முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்களுக்கிடையில் உள்பிரிவுகள் சில காணப்பட்டாலும் பெரும்பாலும் தமிழ் பேசுபவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்த மூவின மக்களும் (சிங்களம், தமிழ், முஸ்லிம்) பின்பற்றுகின்ற சமயங்களின் கோட்பாடுகளின் அடிப்படையில், அவர்கள் வேற்று மதத்தைப் பின்பற்றினாலும் கூட, பிறர்மீது வெறுப்பைப் பாராட்டுவதை ஆதரிப்பதில்லை. அன்பும் கருணையும் சகல மதங்களுக்கும் அடிப்படையான தர்மமாகக் காணப்படுகின்றன. அது மட்டுமல்ல இந்து, பௌத்த கோட்பாடுகளின்படி மனிதனாகப் பிறக்கும் ஒருவன் தான் செய்யும் வினைகளுக்கு (கர்மம்) ஏற்ப அவன் இறந்தபின் மீள் ஜென்மம் எடுக்கின்றான்.

அவ்வாறு நோக்குகையில் இந்தப் பிறப்பில் தமிழ் பேசும் மனிதனாக இருப்பவன் அடுத்த பிறப்பில் சிங்களவனாகவும் சிங்களவனான ஒருவன் மறுபிறப்பில் தமிழ் பேசும் ஒருவனாகப் பிறப்பதற்கும் இடம் இருக்கிறது.

இந்த இரண்டு மதங்களாலும் கற்பிக்கப்படுகின்ற இந்தத் தத்துவத்தை பௌத்தர்களும், இந்துக்களும் உண்மையில் நம்புபவர்களாக இருப்பின், உண்மையாக பின்பற்றுபவர்களாக இருப்பார்களாகின் இந்த நாட்டில் இனக்குரோதம், இனவெறுப்புக்கள் மற்றும் இன வன்செயல்கள் இடம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்க மாட்டாது. துரதிர்ஷ்டவசமாக சமயக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டியவர்களே அவைகளைப் புறக்கணித்து, இனங்களுக்கிடையில் வெறுப்பையும் குரோதங்களையும் தூண்டிவிட்டு காரியம் சாதிக்கிறார்கள்.

அவற்றுக்கான காரணங்களை ஆராய்ந்தால், அடிப்படையில் அரசியல்தான் காணப்படுகின்றது. அரசியலில் இலகுவாக முன்னேறவும் பட்டம் பதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் அதன்மூலம் சொத்து சுகங்களைத் தேடிக் கொள்ளவும் இனவாதத்தைத் தூண்டி விட வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கிறது. அதன் விளைவாலேயே, இன்று இனங்களுக்கிடையில் நம்பிக்கையின்மை, போட்டி பொறாமைகள், வன்முறைகள், குரோதங்கள் யாவும் அதிகரித்து சீர் குலைவை நோக்கி நாடு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாயிற்று. சிங்கள, பௌத்த பேரினவாதம் அரசியலுக்குள் குடிகொண்டு விட்டதால், அதனைக் களைவது மிகக் கஷ்டமான காரியமாகி விட்டது.

இந்த நிலைமையிலேயே இப்போது மைத்திரி-ரணில் தேசிய அரசு நாட்டில் இனவாதத்தை ஒழிக்கப்போவதாக அறிவித்து சிலபல காரியங்களைச் செய்ய முற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அண்மையில் வடக்குக்கு வருகை தந்திருந்த சட்ட ஒழுங்கு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன பருத்தித்துறையில் புதிய பொலிஸ் நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசியபோது, குறுகிய அரசியலுக்காக கடந்த காலத்தில் இனவாதம் பயன்படுத்தப்பட்டது, ஆனால் இனிமேல் நாட்டில் இனவாதம் இருக்காது என்பதாக ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார். ஜனாதிபதியும் பிரதமரும் இனவாதத்தை ஆதரிக்கவில்லை. எனவே இனவாதம் இனி ஏற்படாது என்பதாக இருந்தது அவர் கருத்து.

ஜனாதிபதியும் சரி, பிரதமரும் சரி கடந்த காலத்தில் இனவாதத்தை வைத்து அரசியல் செய்த கட்சிகளில் இருந்து வந்தவர்களே. இன்று இந்த இரு கட்சிகளும் சேர்ந்து அரசமைத்திருப்பதால் இன்று அவ்விரு கட்சிகளும் இணைந்து இனவாதத்தை ஒழித்து விடலாம் என்பது அமைச்சரின் கருத்தாக இருக்கலாம்.

ஆனால் தொடர்ந்தும் இனவாதத்தை முன் வைத்தே அரசியல் நடத்தும் ஒரு பிரிவினர் நாட்டில் இருக்கவே செய்கிறார்கள். இனவாதமின்றி அவர்களால் அரசியலில் நிலைத்திருக்க முடியாது. அதனால் அவ்வப்போது இனவாதக் கருத்துகளையே வெளியிட்டு பேரினமக்களை உசுப்பேற்றி வருகிறார்கள்.

அவர்களின் இந்த வித செயற்பாடானது தேர்தல் காலங்களில் இன்னும் விரிவடையலாம். அதை வைத்தே இப்போதைய அரசை அவர்கள் வீழ்த்து வதும் சாத்தியமாகலாம். எனவே இனவாதம் முற்றாக அரசியலில் இருந்து ஒழிக்கப்படுவதற்கான செயற்பாட்டில் இப்போதைய அரசு உடனடியாக இறங்க வேண்டும்.

இனம், மொழி, மதம் மற்றும் இவை போன்ற வேறுபாடுகளை வைத்து குரோதமான பரப்புரைகள் நடத்தப்படுவதைத் தடுக்க சட்டங்கள் இருத்தல் வேண்டும். வெறும் வாய்ப்பேச்சுக்களால் பயன் ஏற்படப் போவதில்லை.

அதேவேளை நசுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் தமது மொழி, மதம் மற்றும் இவை போன்ற உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள முயற்சிப்போருக்கும் இந்த மக்களைத் தொடர்ந்தும் அதே நிலையில் வைத்திருக்க முனைவோருக்கும் இடையில் உள்ள வேறுபாடு உணரப்பட வேண்டும். இனவாதத்தை ஒழிக்க விரும்பும் அரசு இந்த இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகளை கருத்தில் வைத்துச் செயற்படுவது முக்கியம்.

# தமிழர் இதயங்களில் உறைந்திருக்கும் தமிழ்ச் செல்வன்

மு.ஈழத்தமிழ்மணி

சு.ப. தமிழ்ச்செல்வன் இன்றும் தமிழ் மக்களின் மனங்களில் வீற்றிருக்கின்ற நித்திய புன்னகை அழகன். தமிழ்மக்களின் விடுதலைக் கனவைச் சுமந்து விடுதலைப் போரில் பயணித்த ஆயுத - அரசியல் போராளியான இவர் ஏழுவருட காலங்கள் வரையில் ஆயுதப் போராளியாகவும், இருபத்தியொரு வருடகாலம் அரசியல் போராளியாகவும் உலகத் தமிழ் மக்கள் மத்தியில் வலம் வந்தவர்.

விடுதலைப் போராட்டத்தின் அரசியல் வெற்றிடத்தை நிரப்பி தனக்கிட்ட பொறுப்பைத் தமிழினத்தின் கட்டளையாக ஏற்று புயலாகச் செயற்பட்டதோர் இராஜதந்திரப் போராளியான தினேஷ் என்ற இயற்பெயர் கொண்ட தமிழ்ச்செல்வனின் உயிர் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி அதிகாலைவேளைப் பொழுதில் விமானப் படையினரின் குண்டு வீச்சுத் தாக்குதலில் பறிக்கப்பட்டது. இன்று நித்திய புன்னகை அழகனின் எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அவர் தினேஷாகப் பதினெட்டுவயதில் இளைஞனாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துகொண்டு ஆயுதப் போராளியானார். ஒரு போராளியாக உருவெடுத்த தமிழ்ச்செல்வனின் தாக்குதல் திறமைகள், செயல்கள் யாவும் ஒருங்கே அமைந்திருந்தமையால் விடுதலைப் புலிகளின் தலைவரால் இவர்மீது பெரும் மதிப்பு இருந்தது. தமிழ்ச்செல்வன் ஏழு வருடகால ஆயுதப் போராளியாகப் பரிணமித்தவர். விடுதலைப் புலிகளின் தலைவரால் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1993 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருந்த நிலையில் தமிழ்ச்செல்வன் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தமிழ்ச்செல்வன் தான் பொறுப்பேற்றுக் கொண்ட அரசியல் பணியை மேற்கொள்வதென்பது சாதாரணமானதாக இருக்கவில்லை. தொடர்ச்சியான போர் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழுகின்ற மக்கள் மத்தியில் அரசியல் பணியை ஆற்ற வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாக இருந்தது. அதனைப் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் முன்னெடுத்துச் சென்றார். விடுதலை இயக்கத்தின் கொள்கை, இலட்சியம் என்பவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் அவர் தனது தனித்திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

1995 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரணதுங்கவின் ஆட்சியின்போது யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் மக்கள் இடம்பெயர வேண்டியதோர் நிலை உருவாகியது. சுமார் ஐந்து லட்சம் மக்கள் ஒரே இரவில் இடம் பெயர்ந்தனர். தமிழ்ச்செல்வனின் எதற்கும் கலங்காத மனமும், பிரச்சினைகளைச் சுமுகமாக அணுகும் திறனும் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்ற மக்களுக்கு ஆறுதலை அளித்தது.

அவர் வேலைத்திட்டங்களுக்குத்தலைமை தாங்கியதுடன் அத்தனை விடயங்களையும் தீவிரமாகச் செயற்படுத்தினார். இந்தக் காலப் பகுதிகளில் மிகப்பெரியபோர், இடப்பெயர்வு, இயற்கை அழிவுகள் உள்ளிட்ட இன்னும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்த வேளைகளில் அதனையும் செய்து முடிக்கின்ற பணியும் அவரது கைகளில் தங்கியிருந்தது. ஒரு புறத்தில் போர். மறு பக்கத்தில் அரசியற் பணி. இவ்விரண்டுக்கும் நடுவில் தமிழ்ச்செல்வன் வன்னிப்பெரு நிலப்பரப்பை அரசியல் ஆளுமைக்குள் உட்புகுத்தி தென்னிலங்கை அரசியல்வாதிகளை மிரள வைத்தவர். தமிழ்ச் செல்வனின் நிதானமானபோக்கு, மென்மையான அணுகுமுறை அவரிடம் காணப்பட்ட செயல் பூர்வமான சிந்தனைகள், அரவணைத்துச் செல்லுகின்ற மனப்பான்மை, மனதில் உதிர்ந்து வருகின்ற



கருத்தாற்றல்கள் அனைத்தினதும் மறுவடிவமாக தமிழ்ச்செல்வன் இயக்க அரசியல் தளத்தில் மட்டுமன்றி உலகத் தமிழ்மக்கள் மத்தியிலும் உச்சத்தைத் தொட்டு நின்றார்.

தமிழ்ச்செல்வனின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு மத்தியில் அரசியல் துறைக்கான நிர்வாகக் கட்டமைப்புகள் சீர்குலையாமலிருந்தன. ஆகவே அனைத்துப் பணிகளும் முன்னெடுக்கப்பட்ட போது தடங்கல்களுக்கு இடமின்றி முழுமை பெற்றிருந்தது. ஓர் இறைமை கொண்ட அரசானது இடர்காலத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பணிகளின் பொறுப்புகளும் கடமைகளும் எப்படி அமைந்துள்ளதோ அதேபோலவே அந்தப் பணிகளை மேற்கொண்ட நிலையில் ஆளுமை கொண்டவராக உயர்ந்து நின்றார். தமிழ்ச்செல்வனின் துரிதகால செயற்பாடுகளே பாதிக்கப்பட்ட அத்தனை மக்களையும் துரித கதியில் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஆக்கபூர்வமாக இருந்ததுடன் விடுதலைப் போராட்டத்துக்கும் வலுவாக அமைந்திருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் அவரது பாதிக்காலமானது மக்களோடு மட்டும் சேர்ந்ததாகவும் அர்ப்பணிப்புள்ளதாகவும் இருந்தது. பின்னர் இவரது அரசியற்பணி இராஜதந்திர நகர்வுகளை நோக்கிச் செல்லும் காலகட்டத்துக்குள்ளும் தள்ளப்பட்டது.

1987 ஆம் ஆண்டுப் பகுதியில் இந்தியாவிலிருந்து புலிகளின் இயக்கத் தலைவர் நாடு திரும்பிய காலம். இயக்க வேலைகளை ஒழுங்கு படுத்திக்கொண்டிருந்தார். மகளிர்களுக்கான அரசியற் பிரிவு உண்டாக்கப்பட்டது. அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களும் உருவாக்கப்பட்டன. உலகில் எவராலாகினும், எங்கிருந்தாயினும் வரவேற்று உள்வாங்கித் தொடர் போரினால் மக்கள் பட்ட அவலத்துக்குச் சிகிச்சையாக, புத்தூக்கமாக அதனை மாற்றிப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையிருந்தது. ஆனால் இயக்கத்தின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கக் கூடியதாக, தோற்கடித்துவிடக் கூடிய சூழ்ச்சியாக அது உருவெடுக்க விடாமல் அதனிடமிருந்து தற்காத்துக்கொள்ள வேண்டிய தேவையுமிருந்தது. இந்த இரண்டுக்குமிடையில் ஒரு சமன்பாட்டைக் கண்டறிந்து அதனை நிர்வகிப்பதற்கான கட்டமைப்புக்களை உருவாக்கி அதை வெற்றிகரமாகக் கையாண்ட தமிழ்ச்செல்வன் ஒரு திறமையாளனாவார்.

விட்டுக் கொடுப்புக்கள் எதையும் சாதாரணமாகத் தமிழ்ச்செல்வன் கையாளவில்லை. இணைந்து செயற்படுதல் என்ற போர்வையில் சிங்கள அரசின் மடியில் விழவுமில்லை. காலடிக்குப் போகவுமில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பை ஓர் அரசியல் நீரோட்டத்துக்குள் கொண்டுவர சர்வதேசம் விரிக்க முயற்சித்த சதி வலைக்குள் சிக்கிக் கொள்ளலாம் என்றபோலிக் கனவையும் உடைத்துச் சிங்கள அரசுக்கும், சர்வதேசத்துக்கும் தெளிவுபடுத்தியவர். சர்வதேச இராஜதந்திரங்களுக்கு ஈடு கொடுத்து கொள்கையையும், இலட்சியத்தையும், தலைமையின் முடிவுகளையும், பாதுகாக்கின்ற இராஜதந்திரப் போராளியாகவும் அவர் இருந்துள்ளார். தமிழ்ச்செல்வனிடம் இராஜதந்திரக் குணாதிசயங்கள் இயல்பாகவே இருந்தன.

தமிழ்ச்செல்வன் ஜெனீவா பேச்சு வார்த்தையின் போது, அரச தரப்பினரின் போலித் திரையைக் கிழித்தெறிந்து உண்மைநிலையை விளக்கியிருந்தார். அரச தரப்பினர் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கின்ற முயற்சிகளில் சிறிதளவேனும் நாட்டம் கொள்ளாது ஏமாற்றவே பார்க்கின்றனர். அவர்களது நோக்கமும் அதுவாகும் என அந்த இடத்தில் தெரிவித்திருந்தார். அரசு விரித்த பொறியில் அரச தரப்பினரையே விழ வைத்த இராஜதந்திரியாகவே பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டிருந்தார். அதுவே இறுதிப் பேச்சுவார்த்தையாகவுமிருந்தது.

தமிழ்ச்செல்வன் மீது சுமத்தப்பட்டிருந்த பணிகள் சிக்கல் மிகுந்ததாக இருந்தாலும் அந்தப் பணிகள் யாவும் சுமையாக அவருக்குத் தெரியவில்லை. அரசியல் பலம்மிக்க சக்தியாக புலிகளின் தலைமை தமிழ்ச்செல்வனை வளர்த்தெடுத்திருந்தது: பேச்சு மேசையென்றாலும் சரி, ஊடகவியலாளர்கள் சந்திப்பாக இருந்தாலும் சரி, புன்னகையில் மலரும் அவரது முகம் ஆயிரம் அர்த்தங்களை வெளிப்படுத்தி நிற்கும். ஓர் அரசியற்றுறைப் பொறுப்பாளராகவோ அல்லது ஒரு போராளியாகவோ எவரும் அவரைக் கணிப்பதில்லை. ஒரு நிர்வாக உத்தியோகத்தராக அவர் காட்சியளிப்பதே அவரது குணாதிசயத்துக்கும், உயர்ந்த பண்புக்கும் நல்லெடுத்துக்காட்டாகும்.

ஓர் இளம் அரசியல்வாதியாகத் தோற்றப்பாடு கொண்டவராக இருந்தாலும் ஓர் அரசியற் தலைவராகவே பார்ப்பவரைப் பிரமிக்கச் செய்கின்றவாறு எளிமையான பிரமுகராகக் காட்சியளிப்பார். இந்தியாவினால் முன்வைக்கப்பட்டிருந்த மாகாண சபை முறைகள், முன்னைய அரசு கொண்டு வந்திருந்த மாவட்ட சபை முறைகள் பற்றிய கருத்துக்கள் யாவும் இன்றுவரையில் சர்வ அரசியல் ஆய்வாளர்களால் மட்டுமன்றி புத்திஜீவிகளாலும் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. தமிழினத்தின் விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழர்களின் நிமிர்வுக்கும், அரசியலில் பலமாக உயர்ந்து நிற்பதற்கும் உரமிட்ட ஒரு சாணக்கியன் தமிழ்ச்செல்வன்.

தமிழ்ச்செல்வனிடத்தில் காணப்பட்ட ஒரு சிறப்பான குணம், மாதத்தில் மூன்று, நான்கு தடவைகள் முதியோர் இல்லம் சென்று அவர்களிடம் அளவளாவி, சிரித்து மகிழ்வது உணவருந்துவது பெற்ற தாய் - தந்தையரைப் போல் அன்பு பாராட்டுவதாகும். இவைகளை எவராலும் எளிதில் மறந்துவிட முடியாது.

நவம்பர் மாதம் 2007 ஆம் ஆண்டு 2 ஆம் திகதி அதிகாலை வெள்ளிக்கிழமை ஈழத்தமிழர்களின் கண்கள் தம்மையறியாமல் கண்ணீர் பெருக பேரிடியாக அந்தச் செய்தி வருகின்றது. எந்தத் தமிழராலும் நம்பவே முடியவில்லை. சு.. ப.. சாவடைந்து விட்டார்... வான் படையினரால் கொல்லப்பட்டார். தமிழர்கள் வீடுகள் தோறும் சோகம்... முகாரி ராகம் காணுமிடமெங்கும் ஒலிக்கின்றது. பிரிந்துவிட்டார் தமிழ்ச்செல்வன்.

தன் அரசியல் அனுபவத்தாலும், ஆளுமையாலும் தமிழினத்தின் போராட்ட விடுதலையின் நியாயங்களை அதன் தாற்பரியங்களை, கொள்கைகளை எட்டுத் திக்கிலும் கொண்டு சென்று செவ்வனே புரியவைத்திருந்தவர். குண்டு வீச்சில் தமிழ்ச் செல்வனது உயிர் பறிக்கப்பட்டாலும் தமிழ்மக்களிடமிருந்து அவரை இன்றுவரையில் எவராலும் பிரிக்க முடியாது. அவர் கூறிய கருத்துக்களை அழிக்கவும் முடியாது.


நித்திய புன்னகை அழகன் அவன். தமிழர்களின் இதயங்களில் உறைந்திருக்கும் தமிழ்ச்செல்வன் இவன்.

சேரலாதன்

# ஊடகவியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இன்று உறுதி பூணுவோம்

**இன்று ஊடகவிய லாளர்களுக்கு எதிரான குற்றங்களை முடிவுக்குக் கொண்டுவரும் ஐ.நா. தினம்**





இன்றைய தினத்தை ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை முடிவுக்குக் கொண்டு வரும் தினமாக ஐ.நா.பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தத் தினத்தையொட்டி ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதில் மக்களிடம் உண்மைகள் சென்றடைவதற்காக ஊடகவியலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தமது கடமையின் போது உயிரிழந்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் இன்றைய தினம் நினைவு கூரப்படுதல் வேண்டும் எனத் தமது அறிக்கையில் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டு ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதன் நினைவாக 2013 ஆம் ஆண்டுநவம்பர் மாதம் 2 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதற்கான தினம் பிரகடனம் செய்து வைக்கப்பட்டது.

உலகம் பூராகவுமுள்ள ஊடகவியலாளர்கள் அச்சத்துடன் பணியாற்ற வேண்டியதொரு நிலை இன்று காணப்படுகின்றது. இதனால் ஊடகவியலாளர்கள் தமது கடமைகளை நேர்மையான வகையில் நிறைவேற்ற முடியாததொரு நிலை உருவாகியுள்ளது. அனைத்துத் தரப்பினரும் தமக்குச் சார்பான செய்திகள் வெளிவருவதையே எதிர்பார்ப்பதால் ஊடகவியலாளர்களின் நிலை பரிதாபகரமான கட்டத்தை எட்டி நிற்கின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 700 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் மோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் கடமையாற்றியபோது கொல்லப்பட்டுள்ளனர். வேறு பலர் திட்டமிடப்பட்ட வகையில் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் உண்மையான செய்திகளை வெளிக்கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டபோது அதற்கு எதிரானவர்களால் கொல்லப்பட்டனர். ஆனால் இந்தக் குற்றச் செயல்களில் பத்து வீதமானவை மட்டுமே முழுமையாக விசாரிக்கப்பட்டுள்ளன. ஏனையவற்றுக்கு என்ன நடந்தது என்பதே தெரியாத நிலை நீடிக்கின்றது.

ஊடகவியலாளர்கள் தமது உயிருக்கு அஞ்சி செய்திகளைச் சுயதணிக்கைசெய்வதால் உண்மையான செய்திகள் மக்களைச் சென்றடைய முடியாத வகையில் தடுக்கப்பட்டு விடும். ஆகவே இந்த நிலையைத் தடுக்க வேண்டுமானால் ஊடகவியலாளர்கள் பாது காக்கப்படுவதோடு அவர்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிபவர்கள் தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இந்த ஆண்டு நிறைவு பெறுவதற்கு இன்னமும் இரண்டு மாதங்கள் உள்ள நிலையில் இதுவரை 45 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளமை ஒரு பாரதூரமான விடயமாகும். சமூக விரோதக் கும்பல்கள் தமது குறைபாடுகள் தொடர்பான செய்திகள் வெளியில் வருவதை விரும்புவதில்லை. இதனால் அத்தகைய செய்திகளை வெளிக்கொண்டுவருகின்ற ஊடகவியலாளர்களைத் தீர்த்துக் கட்டுவதில் குறியாகச் செயற்படுகின்றனர். இதன் காரணமாகவே ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்த போதிலும், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் நடப்பதில் முன்னணி வகிக்கின்றது. அதிலும் கடந்த ஆட்சியின்போது மிகவும் மோசமானதொரு நிலை இங்கு காணப்பட்டது. ஊடகவியலாளர்கள் உண்மைகளைக் கூறுவதிலிருந்து பலாத்காரமாகத் தடுக்கப்பட்டனர். தடைகளுக்கு அஞ்சாது உண்மையான செய்திகளை வெளியிட்டவர்கள் ஒன்றில் கொலை செய்யப்பட்டனர் அல்லது கடத்தப்பட்டுக் காணாமற்போகச் செய்யப்பட்டனர். அதிலும் தமிழ் ஊடகவியலாளர்களின் நிலைதான் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. நடேசன், சுகிர்தராஜன், நிமலராஜன் எனக் கொல்லப்பட்டவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. இந்தக் கொலைகள் தொடர்பாக உண்மையான விசாரணைகள் இடம் பெறவில்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும். இதை



இந்த ஆண்டு நிறைவு பெறுவதற்கு இன்னமும் இரண்டு மாதங்கள் உள்ள நிலையில் இதுவரை 45 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளமை ஒரு பாரதூரமான விடயமாகும். சமூக விரோதக் கும்பல்கள் தமது குறைபாடுகள் தொடர்பான செய்திகள் வெளியில் வருவதை விரும்புவதில்லை.

விட யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற முன்னணித் தமிழ்ப் பத்திரிகையான உதயன் மீது பல தடவைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பணியாளர்கள் சிலர் கொல்லப்பட்டனர். மேலும் பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் சிலரும் கூட கொலை செய்யப்பட்டனர். அச்சு இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன நாசம் செய்யப்பட்டன. இந்தச் சம்பவங்களுக்கு அப்போதைய அரசுடன் சேர்ந்து இயங்கிய கட்சி ஒன்றின் மீது குற்றம் சாட்டப்பட்ட போதிலும் எவரும் கைது செய்யப்படவுமில்லை. நீதியின் முன்னால் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவுமில்லை.

இதைப்போன்றுதான் சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவும் படுகொலை செய்யப்பட்டார். இவரது கொலையிலும் முக்கியஸ்தர்கள் சிலரின் கரங்கள் நீண்டிருந்ததாகக் கூறப்பட்ட போதிலும் முன்னைய அரசின் காலத்தில் விசாரணைகள் எவையும் இடம்பெறவில்லை. தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர்தான் இந்தக் கொலைதொடர்பான விசாரணைகள் மெல்ல மெல்ல இடம்பெற்று வருகின்றன. இதைப்போன்றே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கொலை தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

எப்போதுமே உண்மையைக் கூறுமாறுதான் ஊடக தர்மம் வற்புறுத்திக் கூறுகின்றது. ஓர் உண்மையான ஊடகவியலாளனுக்கும் அந்தப் பண்புதான் எப்போதுமே இருத்தல் வேண்டும். இதனைச் சீர்குலைக்கும் வகையில் மூன்றாம் தரப்பினர் நடந்து கொள்வதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. ஆகவேதான் ஊடகவியலாளர் களுக்கு எதிரான குற்றங்களை முடிவுக்குக் கொண்டுவரும் தினமாக இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.





# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | 2 | |
| | | 3 | 4 | | | | 6 | |
| | 4 | 6 | | | 9 | | | |
| | 6 | 5 | 8 | 1 | | 4 | | |
| | 1 | 7 | | | | 8 | 5 | |
| | | 4 | | 9 | 7 | 2 | 1 | |
| | | | 7 | | | 5 | 8 | |
| | 5 | | | | 8 | 6 | | |
| | 7 | | 6 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 4 | 7 | 5 | 9 | 1 | 6 | 3 |
| 5 | 9 | 1 | 3 | 8 | 6 | 4 | 7 | 2 |
| 6 | 7 | 3 | 1 | 4 | 1 | 8 | 5 | 9 |
| 1 | 5 | 9 | 4 | 6 | 7 | 2 | 3 | 8 |
| 8 | 6 | 7 | 2 | 3 | 1 | 9 | 4 | 5 |
| 4 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 1 | 6 |
| 9 | 1 | 6 | 5 | 7 | 8 | 3 | 2 | 4 |
| 3 | 2 | 5 | 9 | 1 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 4 | 8 | 6 | 2 | 3 | 5 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வலிமையுடன் வாழுங்கள்

உங்களிடம் நேர்மை இருக்கிறதா? பொதுநலத்துடன் சேவை செய்கிறீர்களா? அன்பு இருக்கிறதா? இந்த மூன்றும் இருந்தால் வாழ்வில் பயமே தேவையில்லை. சாவு கூட உங்களை நெருங்க முடியாது. இறைநம்பிக்கையோடு செயல்படுங்கள். அவரையே எப்போதும் சார்ந்திருங்கள். உங்களை எந்தச் சக்தியும் எதிர்த்து நிற்க முடியாது. வலிமையின்மையே துன்பத்துக்கான ஒரே காரணம். பொய்யும், திருட்டும், கொலையும், மற்ற அனைத்து பாவச் செயல்களும் மனபலவீனத்தாலே தோன்றுகின்றன.

## துளசியின் தீமைகள் பற்றித் தெரியுமா?



துளசி அனைவருக்கும் தெரிந்த ஒரு நன்மை பயக்கும் மூலிகை. ஆனால் துளசியில் சில தீமைகளும் ஏற்படும் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். ஆம், நன்மைகள் அதிகம் உள்ள இதே துளசியால், தீமைகளும் ஏற்படுகின்றன. துளசியில் யூஜினால் என்ற வாசனை பொருள் அதிகம் உள்ளது.

இந்த யூஜினாலை அதிகமாக உட்கொண்டால் அது விசத்தன்மையை ஏற்படுத்தும். துளசி குருதி அணுக்களை அதிகரிக்கும் சக்தி கொண்டது. எனவே அடிபட்டிருக்கும் போதும் குருதி உறைவதற்கு எதிரான மருந்துகளை எடுத்துக் கொள்ளும் போது, துளசி எடுத்துக் கொண்டால் குருதி உறைவு ஏற்படுவது தாமதமாகும். இளம் பெண்களுக்கு மாதவிடாய் வேளைகளில் துளசி இலைகளை உண்டால், குருதிப் போக்கை அதிகரிக்கச் செய்யும். அடிக்கடி துளசியைச் சாப்பிடும் ஆண்களுக்கு விந்தணுக்கள் குறைந்து கரு உருவாதில் பாதிப்பு ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது. கர்ப்பிணிப் பெண்களுக்கு துளசி உகந்தது இல்லை. கர்ப்பிணிப் பெண்கள் துளசியை அதிகம் சாப்பிட்டால் குழந்தைப் பிறப்பில் சிக்கலும், தாய்க்கும், சேய்க்கும் நீண்ட காலப் பாதிப்புகளும் ஏற்படும் அபாயம் உள்ளதாம்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 500 | 500 |
| நண்டு | 250 | 600 | 200 | 300 | 400 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 700 | - |
| பாரை | 400 | 450 | 350 | 450 | 500 | 300 |
| சுறா | 400 | 500 | 350 | 600 | 600 | 360 |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 400 | 300 |
| விளை | 450 | 400 | 260 | 450 | 400 | 320 |
| முரல் | 250 | 300 | 250 | 350 | 350 | - |
| கும்பிளா | 200 | 300 | 200 | 400 | 300 | 160 |
| கிழாக்கன் | 300 | 800 | - | 500 | - | - |
| ஓரா | 250 | 300 | 220 | 350 | - | 300 |
| திரளி | 150 | 300 | 150 | 300 | 150 | - |
| நகரை | 150 | 300 | 100 | 300 | 200 | 200 |
| சூடை | 100 | 100 | 50 | 120 | 100 | - |
| ஒட்டி | 200 | 150 | 180 | 300 | - | - |
| திருக்கை | 150 | 300 | 150 | 250 | 200 | 100 |
| பாலை | 300 | 200 | - | 400 | 300 | - |
| வாளை | 100 | 100 | 150 | 300 | 250 | 150 |
| கொய் | 100 | 100 | 40 | 120 | 50 | - |
| மதனம் | 150 | 250 | 130 | 250 | 250 | 100 |

### நாளை

ஐப்பசி-17
செவ்வாய்க்கிழமை
03.11.2015

திதி: ஸப்தமி
மு.ப. 10.27
நட்சத்திரம் :
பூசம் மு.இ. 10.52
சுபநேரம்:
10.34 – 12.04 வரை
இராகு காலம்:
3.04 – 4.34 வரை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 60 | 60 | 60 | 60 | 30 |
| கத்தரி | 100 | 120 | 80 | 80 | 80–100 | 80 | 80 | 60 |
| கரட் | 70 | 120 | 60–120 | 80 | 100–180 | 120 | 100 | 180 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40 | 30 | 50 | 30 |
| பயிற்றை | 90 | 120 | 100 | 180 | 160 | 200 | 100 | 140 |
| பாகல் | 160 | 180 | 250 | 180 | 160 | 200 | 110 | 170 |
| கருணைக்கிழங்கு | 70 | 60 | 80 | 80 | 60 | 120 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 130 | 120 | 140 | 140 | 180 | 120 | 130 |
| சி.வெங்காயம் | 100 | 100 | 120 | 140 | 130 | 160 | 100 | 130 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 50 | 80 | 50 | 40 |
| தக்காளி | 100 | 120 | 160 | 120 | 120 | 160 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 50 | 60 | 60 | 60 | 40 |
| கீரை | 30 | 50 | 40 | 10 | 30 | 40 | 30 | 35 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 250 | 340 | 240 | 150 | 200 | 250 | 350 |
| புடோல் | 60 | 60 | 100 | 100 | 80 | 60 | 60 | 70 |
| கோவா | 100 | 100 | 80 | 100 | 100 | 140 | 100 | 60 |
| வெண்டி | 120 | 80 | 100 | 100 | 100 | 120 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 160 | 180 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 40 | 100 | 100 | 100 | 100 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 50–60 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 120 | 120–140 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 350 | 330 | 600 | 250 | 350 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 10 | 10 | 20 | 15 | 8 |
| கறிமிளகாய் | 140 | 160 | 120 | 160 | 200 | 160 | 120 | 170 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 150 | 150 | 120 | 100 | 140 | 200 | 120 | 70 |

# உங்கள் பிறந்த மாத பலன்கள்



**ஜனவரி**

சூரியன் மகர ராசியில் சஞ்சரிக்கும் காலத்தை ஜனவரி மாதம் என்கிறோம். இந்த ராசியானது சனி பகவானின் ஆட்சி வீடுகளில் ஒன்றாகும். சூரியனுக்கு இது பகைவீடாகும். குருவுக்கு இது நீச ராசியாகவும் ஆற்றல் மிக்க செவ்வாய்க்கு உச்ச ராசியாகவும் விளங்குகின்றது. இது சுக்கிரனுக்கு நட்பு வீடாகும். ஐம்பூதத் தத்துவங்களில் பூமி அல்லது மண்ணை இந்த ராசி குறிக்கின்றது. அகண்ட ஆகாயத்தில் காற்று வீசும். அனல் பரவும். நீர் ஆவியாகவும் மாறும். கட்டியாகவும் உறையும். ஆனால், மண்ணானது அசைவற்று நிற்கும். 'அவனின்றி ஓரணுவும் அசையாது' என்ற திடமான சங்கற்பமுடையது மண். பார்ப்பவர்களுக்கு மண்ணாகவும் எடுத்து உபயோகப்படுத்துபவர்களுக்குப் பொன்னாகவும் விளங்கும். விளையும் பொருள்களுக்கெல்லாம் மண்ணே ஆதாரம். தோன்றும் உயிரினங்களுக்கெல்லாம் மண்ணே ஆதாரம். பார்ப்பதற்கு ஜடப்பொருளாகத் தோன்றினாலும் அஸ சக்தி நிறைந்தது. கிரியா சக்தியின் இருப்பிடம், மாயையின் சேஷ்டைக்கு மறை விடம். எதையும் கிரகிக்கும் தன்மையுடையது. சூரியனின் ஜீவாதார சக்தியையும், சந்திரனின் ஜீவாமிர்த சக்தியையும் கிரகித்து, வித்தான பொருள்களுக்கெல்லாம் சத்தான பொருள்களை ஈட்டித் தருவதும் மண்ணே. வேண்டியவர்களுக்கு விரும்பியதை வாரிவழங்குவதும் மண்ணே. கண்ணுக்குத் தெரியாமல் மண்ணுக்குள் மறைந்திருப்பவை விண்ணில் தோன்றிய வினோதங்களைவிட விபரீதமென்று சோதிட ரீதியாக விளக்கும் ஏடுகள் எண்ணிலடங்கா. இத்தகைய மண்ணைப் போன்றவர்களாம் ஜனவரி மாதத்தில் தோன்றிய வித்தகர்கள்.

**தோற்றம்**

பெரும்பாலும் நடுத்தர உயரத்துக்கும் குறைவான உயரம் உடையவர். எலும்புகள், முட்டிப் பாகங்கள் எடுப்பாகத் தோற்றம் அளிக்கும். எனினும் அழகு வாய்ந்தவை. உண்மையான வயதைவிட அதிக வயது உடையவராகக் காட்சியளித்திடுவார். நீண்ட கழுத்தும், நீண்ட தலையும் உடையவர். நெற்றி விரிந்தும் உயர்ந்தும் காணப்படும். அதில் ஆழ்ந்த கோடுகள் உடைய சுருக்க முடைய சரும பாகம் காணப்படும். புருவங்கள் உயர்ந்தும் வளைந்தும் காணப்படும். கண்கள் ஆழமாகப் பதிந்து சிறுத்துக் காணப்படும். நீண்ட நாசியும் ஒரு சிலருக்கு வளைந்தும் காணப்படும். தாடைகளில் சுருக்கம் அல்லது பள்ளம் தென்படும். செவிகள் விரிந்து நீண்டு காணப்படும். தோள்கள் விரிந்திருக்கும். பாதங்கள் அகன்றிருக் கும். கீழ்ப் பார்வை உடையவர். முகத்தில் கவலைக் குறியும் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டது போன்ற பாவனையும் வெளிப்புறத் தோற்றமாகக் காட்சியளித்திடும். அழுத்தந்திருத்தமாகப் பேசுவார். பேச்சில் உறுதி தொனிக்கும். நிதானமாகவும் பரபரப்பின்றியும் பேசுவார். கபடமற்ற உள்ளமும், ஆடம் பரமற்ற தோற்றமும் உடையவர். ஜன சஞ்சாரம் உடைய கூட்டங்களில் இவர் பின்னணியில் நிற்பார். பிறருடைய கவனத்தை ஈர்த்திடா வண்ணம் நடந்துகொள்வார்.

**குணபாவங்கள்**

வந்தவர்களுக்கு விருந்தளிப்பதும், நொந்தவர்களுக்கு மருந்தளிப்பதும் இவர் கடமைகளில் ஒரு சிலவாம். சரண் புகுந்தவர்களுக்குக் கருணை காட்டுவதும், பயந்து தம்மையடைந்தவர்களுக்கு அபயமளிப்பதும் இவருடைய இயல்பாம்.

நண்பரானாலும் பகைவரானாலும் விருப்பு, வெறுப்புக் கொள்ளாதவர். எதையும் எளிதில் கிரகிக்கும் சக்தியுடையவர். கிரகித்ததைப் பிறருக்குப் பாத்திரமறிந்து அனுக்கிரகம் செய்யும் ஆவலுடையவர். பிரதிபலன் கருதாது உழைத்திடுவார். உழைப்பால் உயர்ந்திடுவார். கடவுளைக் காட்டிலும் கடமையைப் பெரிதென மதிக்கும் இலட்சியவாதி. பிடித்ததை விடார். ஆனால் வீண் பிடிவாதக் காரரல்லர். வீண் வார்த்தைகளை வெளியிடார். பிறர் வெளியிட்டாலும் பொருட்படுத்தார். மனம் வெகுளார். விடாமுயற்சியே இவருடைய மூச்சு. நீதி வழுவாமை இவருடைய பக்தியாகும்.

(தொடரும்)

# பெண்களைச் சாபமாகத் தொடரும் குடும்ப வன்முறை



பெண்கள் எவ்வளவுதான் படித்துப் பொருளாதார ரீதியாக முன்னேறி விட்டாலும், இன்றளவும் குடும்பம் என்ற அமைப்பின் கீழ் ஆக்கிரமிக்கப்பட்டு வெளியில் சொல்ல முடியாத வேதனைகளை மௌனமாகச் சகித்துக் கொண்டு தான் வாழ்கிறார்கள். காரணம் குடும்ப மானம், கௌரவம், வாழ்வாதார நெருக்கடிகள் எனப் பலவற்றைச் சொல்லலாம். முந்தைய தலைமுறையினர் 'நாங்க எல்லாம் கல்யாணம் பண்ணிக்கலையா, புருசனிட்ட அடி உதை வாங்கலையா, இதெல்லாம் ஒரு விடயமா? நல்லாதானே வாழ்ந்தோம், என்ன மோசம்? விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போனா கடைசி வரைக்கும் சந்தோசமா இருக்கலாம். பொறுமையும் சகிப்புத்தன்மையும் தான் பெண்களின் குணம்' என்பார்கள். அன்பும் பரஸ்பர புரிதலும் எந்த உறவையும் பலப்படுத்தும் என்பது உண்மைதான். ஆனால் தன்னைப் போல சகல விதத்திலும் சரிசமமான ஒரு உயிரை வதைப்பதும், பலம் அதிகமிருப்பதால் கொடுமைப்படுத்துவதும் எந்த விதத்தில் நியாயம்? பெண்கள் தான் அனுசரித்துப் போகவேண்டும், விட்டுக் கொடுப்பவர் கெட்டுப்போவதில்லைபோன்றஅறிவுரைகள் எதைச் சொல்ல முன்வருகின்றன? எதை விட்டுக் கொடுப்பது? தன்மானத்தையா? அல்லது உயிரையா? இனி விட்டுக் கொடுக்க எதுவுமில்லை என்ற நிலை வந்த பிறகே பெரும்பாலான பெண்கள் மௌனத்தை உடைக்கிறார்கள். இன்று கிட்டத்தட்ட சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்பும் முன்னேற்றமும் அசுர வேகத்தில் உள்ளன. கல்வி, மேலாண்மை, சட்டம், நீதி, காவல், அரசியல் மற்றும் அறிவுத் தளங்களில் தமது பங்கேற்பின் மூலம் பல மாற்றங்களைப் பெண்கள் நிகழ்த்திச் சாதித்து வருகிறார்கள். ஆனால் அவர்களது வாழ்க்கையைத் திருமணத்துக்கு முன், திருமணத்துக்குப் பின் என்று பிரித்தால் முன்னால் பெற்ற வெற்றிகளையும் சந்தோ-ங்களையும் புறந்தள்ளி விட்டு பிந்தைய வாழ்க்கையின் இறுக்கம் அவர்களை முடக்கிவிடுகின்றது என்பது கண்கூடு. அதற்காகத் திருமணமே தேவையில்லை பெண்கள் துணையின்றித் தனியாக வாழுங்கள் என்று சொல்லும் கட்டுரை இதுவல்ல. ஒரு பெண்ணின் வெற்றியும் சமூகப் பங்களிப்பும் அவளது கணவன் அல்லது புகுந்த வீட்டின் கட்டுப்பாட்டில் இருப்பது சமூக அடுக்குகளில் நாடு எந்த அளவுக்குப் பின் தங்கியுள்ளது என்பதைப் புலப்படுத்துகிறது. ஒரு பக்கம் பெண்களைத் தெய்வமாக உயர்த்தியும் இன்னொரு பக்கம் தொடர்ந்து இழிவுபடுத்தியும் வருவது, நகரம், கிராமம் என்று வேறுபாடின்றி எங்கும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. பொதுவெளியில் ஆகட்டும் சொந்த வீட்டிலாகட்டும் வன்முறையை வாழ்க்கையில் எதிர்கொள்ளாத எந்த ஒரு பெண்ணும் இருக்க முடியாது. அது உடல் ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ இருக்கலாம். அவர்கள் ஒருநாளும் தான் அனுபவித்த வேதனைகளைப் பகிர்ந்து கொள்ளாமலும் இருக்கலாம். ஆனால் இது அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இல்லாமல் மனைவியை அவமதிப்பது தர்மப்படி மட்டுமல்லாது சட்டப்படியும் குற்றம் என்று ஆண்கள் உணர வேண்டும். கணவனானவன் தனது மனைவியின் செலவுகளுக்குத் தேவையான பணம் தராமல் இருப்பதும் (பொருளாதார வன்முறை), தகாத வார்த்தைகளால் திட்டுவதும், அவதூறு செய்வதும், வரதட்சணைக் கேட்டு துன்புறுத்துவதும் (வார்த்தைகளால் வன்முறை) மற்றும் தன்னைப் போன்ற சக மனித உயிராய் மதிக்காமல் புறக்கணிப்பதும் (உணர்வு ரீதியான வன்முறை) குடும்ப வன்முறைக்கு உட்பட்டது. தாலி கட்டிய ஒரே காரணத்துக்காக மனைவியை இது போன்ற வன்முறைச் செயல்களால் துன்புறத்த முடியாது. இப்படிப்பட்ட வன்முறைச் சூழல்களில் தொடர்ந்து வாழும் பெண் மனரீதியாகப் பாதிக்கப்படுகிறாள். ஆனால் தங்களது உரிமையை விட்டுக் கொடுக்காமல் அதே சமயம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் சட்டத்தில் வழி உள்ளது என்ற விழிப்புணர்வு இல்லாததால் அநேகமான பெண்கள் அவதிக்கு ஆளாகிறார்கள். பெண்கள் ஆண்களிடம் அடங்கியே போகவேண்டும் என்ற மனோபாவம் பெரும்பாலான ஆண்களிடம் இருக்கவே செய்கின்றது, பலர் பெண்களைச் சொத்தாகவே கருதுகின்றார்கள். திருமணம் என்பது பெண் மீது ஆண் பெறும் உரிமை என்ற கருத்தியலும் இருக்கின்றது. கணவனை விட்டு விலகிவிட முடிவு செய்தாலும் முரண்பட்ட ஒத்துவராத திருமண உறவில் நீடித்திருக்கும்படி பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு இப்போதும் கூட வலியுறுத்துகிறார்கள். பெண்கள் சுயமானவர்கள், அவர்களுக்கும் தனிப்பட்ட ஆசைகள், சுய விருப்பங்கள், தெரிவுகள், உணர்வுகள், சுயமரியாதை போன்றன உள்ளது என்பதை ஆண்கள் உணர வேண்டும். கணவன் மனைவியராய் இருந்தால் கூட இருவருக்கும் இடையே தனித்தன்மை இருக்கும், அதை மதித்து நடக்கவேண்டும். ஒரு கூரையின் கீழ் வாழும் போது அன்பும் நேசமும் மட்டுமே பிரதானமாக இருக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் நான் பெரியவன், நீ தகுதியற்றவள் போன்ற குற்றச்சாட்டுகள் இருக்குமானால் வாழ்க்கை பின்னடையத் தொடங்கிவிடும். குழந்தைகளை வளர்க்கும் போது பெண் குழந்தைகளுக்கும் தங்கள் சுயத்தை தன்னம்பிக்கையை உணரச் சொல்லித் தர வேண்டும். ஆண் குழந்தைகளுக்குப் பெண்களை மதிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவன் வளர்ந்த பின் தனது மனைவியை மதித்து நிறைவான ஒரு வாழ்க்கையை வாழ்வான். நாளைய தலைமுறையினராவது வன்முறையைக் கைவிட்டு அன்பினால் மலரட்டும்.



# திருந்திய திருடன்

முன்னொருகாலத்தில்திருடன்ஒருவன்இருந்தான்.அவர்தனதுமகன்ராசப்பாவையும் திருட்டுத் தொழிலில் வல்லவனாக அவன் வளர்த்தான். திருடன் இறக்கும் நேரம் வந்தது. 'மகனே! நீ திருட்டுத் தொழிலில் மேலும் மேலும் வல்லவனாக வேண்டும். நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொள். எங்கேனும் பக்திச் சொற்பொழிவு, இசை நிகழ்ச்சிகள் நடந்தால் அங்கு போகாதே. நீ அங்கே இருக்க வேண்டிய சூழ்நிலை வந்தால் ஏதும் காதில் விழாதபடி உனது காதுகளைப் பஞ்சுகளால் அடைத்துக் கொள். இல்லையெனில் அந்த நல்ல வார்த்தைகள் உனது மனதை மாற்றமடையச் செய்துவிடும்' என்றான். 'அப்படியே செய்கிறேன்' என்றான் மகன். தந்தையின் அறிவுரைப்படியே நடந்து வந்தான் ராசப்பா. ஒரு முறை அவன் திருடி விட்டு திரும்பிக் கொண்டிருந்தான். ஓரிடத்தில் மக்கள் கூட்டமாக இருப்பதைக் கண்டான். என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக அருகில் சென்றான். அங்கே மகாவீரர், ஒருவர் மேடையில் அமர்ந்து மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார். தனது தந்தை சொன்னது உடனே நினைவுக்கு வந்தது அவனுக்கு. தனது இரு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து நடக்கத் தொடங்கினான். அப்பொழுது முள் ஒன்று அவன் காலில் தைத்தது. குனிந்த அவன் தனது ஒரு கையால் முள்ளைப் பிடுங்கி விட்டு மீண்டும் காதைப் பொத்திக் கொண்டான். 'தேவர்களுக்கு நிழல் விழாது. அவர்கள் கால்கள் நிலத்தில் படியாது' என்று மகாவீரர் பேசியது அவன் செவி யில் விழுந்தது. சில நாள்களில் முக்கிய திருட்டு ஒன்றைச் செய்த போது வீரர்களிடம் அவன் சிக்கிக் கொண்டான். அவன் செய்த திருட்டை எல்லாம் அறிய வீரர்கள் அவனை அடித்துத் துன்புறுத்தினர். கல்லுளி மங்கனான அவனோ வாய் திறக்கவே இல்லை. அவனிடம் இருந்து உண்மையை அறிய அதிகாரிகள் சூழ்ச்சி செய்தனர். மயக்க மருந்து கொடுத்து அவர்கள் அவனை ஓர் அழகான பூஞ்சோலையில் கிடத்தினர். பல அழகான பெண்கள் அவனைச் சூழ்ந்து நின்றனர்.








மயக்கம் தெளிந்த ராசப்பா தான் இருந்த இனிய சூழலைப் பார்த்து வியப்படைந்தான். 'நான் எங்கே இருக்கிறேன்?' என்று அந்தப் பெண்களைக் கேட்டான். அவர்களில் ஒருத்தி, 'நீங்கள் இப்பொழுது தேவலோகத்தில் இருக்கிறீர்கள். இங்கே நீங்கள் என்ன நினைத்தாலும் உடனே நிறைவேறும். நீங்கள் எங்களைப் போல மகிழ்ச்சியாக இருக்கலாம். நாங்கள் தேவலோகப் பெண்கள். இங்கே யாரும் பொய் சொல்லக் கூடாது. பொய் சொன்னால் உடனே இந்த உலகத்தை விட்டுப் போய் விடுவர். நீங்கள் யார்? பூவுலகில் என்னென்ன செய்தீர்கள்? சொல்லுங்கள்' என்று இனிமையாகக் கேட்டாள். உடனே ராசப்பா அந்தப் பெண்களைப் பார்த்தான். அவர்கள் கால்கள் தரையில் இருப்பதையும், நிழல் விழுவதையும் பார்த்தான். மகாவீரர் சொன்னதைக் கேட்டது அவன் நினைவுக்கு வந்தது. 'இவர்கள் தேவர்கள் அல்லர்; மனிதப் பெண்கள் தான். என்னை ஏமாற்ற முயற்சி செய்கின்றனர்' என்ற உண்மை அவனுக்குப் புரிந்தது. 'ஆ! மகாவீரர் பேசியதைச் சிறிது நேரம் கேட்டதாலேயே இவர்கள் என்னை ஏமாற்றுவதைக் கண்டுபிடிக்க முடிந்ததே... அவர் பேசுவதை நான் முழுமையாகக் கேட்டிருந்தால் எத்தனை நன்மைகள் உண்டாகி இருக்கும்' என்று நினைத்து உள்ளம் கலங்கினான். அவர்களைப் பார்த்து, 'நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள். இது சொர்க்கம் அல்ல, நீங்களும் தேவர் உலகப் பெண்கள் அல்ல. எனக்கு மட்டும் விடுதலை கிடைத்தால் நான் திருட்டுத் தொழிலையே செய்யமாட்டேன். மகா வீரரின் சீடனாகி அவர் அருளுரைகளை எப்பொழுதும் கேட்டுக் கொண்டு அவர் திரு வடிகளில் விழுந்து கிடப்பேன்' என்று உணர்ச்சியுடன் சொன்னான். அவனது பேச்சு அரசனின் காதுகளில் விழுந்தது. ராசப்பாவை அழைத்து விசாரித்தான் அரசன். நடந்ததை அறிந்த அரசன் அவனை விடுதலை செய்தான். அவனும் திருட்டுத் தொழிலை விட்டு மகாவீரரின் சீடர்களில் ஒருவன் ஆனான்.



# கண்டிப்பாக இருங்கள்



ஒவ்வொரு நாளும் இரவில் தூங்கும் போது சிந்தித்துப் பார்த்தால் 'நாம் எத்தனை நேரம் பயனுள்ளதாகச் செலவழித்திருக்கிறோம், எவ்வளவு வீணடித்திருக்கிறோம்' என்று புரியும். தேவையில்லாத அரட்டைப் பேச்சினால் கவனிக்க வேண்டிய முக்கியமான அலுவல்கள் தாமதப்படுகின்றன. நாம் விரும்பும் செயலைக் குறித்த நேரத்தில் செய்து முடிக்க முடிவதில்லை. 'இல்லை, என்னால் முடியாது' என்று உறுதியாகச் சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள். எதிராளி ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்களே என்பதற்காக உங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தாமல் 'ஆமாம் சாமி' போடாதீர்கள். 'அப்போ, நாளைக்குப் பத்து மணிக்குச் சந்திக்கலாமா?' என்று ஒருவர் கேட்டால், உங்களால் அந்த நேரத்தில் முடியாது என்று கருதினால் பளிச்சென்று சொல்லிவிடுங்கள்.



சரி என்று தலை ஆட்டிவிட்டு அப்புறம் போகாமல் இருப்பதைவிட அப்போதே மறுப்பது உத்தமம்! கெட்டிக்கார நிர்வாகிகள், 'தெரியவில்லை, எனது நாட்குறிப்பைப் பார்த்துவிட்டு நாளை உறுதி செய்கிறேன்' என்று சொல்லுவார்கள்.

முடியாது என்று சொல்ல வேண்டுமானால் அதனைத் தீர்மானமாக அழுத்திச் சொல்லுங்கள்! ஆனால், அடுத்தவரது மனம் புண்படாமல் சாமர்த்தியமாகச் சொல்ல வேண்டும். சாமர்த்தியமானவர்கள் தங்கள் மறுத்தல்களைத் தெரிவிக்கும்போது கூட எதிரிலிருப்பவருக்கு அவர் நமக்காகச் செய்கிறார் என்பதுபோல எண்ணம் ஏற்படும்படிப் பேசுவார்கள். 'மோப்பக் குழையும் அனிச்சம்; முகம் திரிந்து நோக்கக் குநழ்யும் விருந்து' என வள்ளுவர் கூறுகிறார். உங்களால் ஒரு வேலையைச் செய்ய முடியாது என்றால் 'முடியாது' என்று சொல்லத் தயங்காதீர்கள். முடியும்; ஆனால் சற்று நேரமாகும் என்றால், எனக்குமிகவும்ஆசையாகத்தானிருக்கிறது. ஆனால், உடனே செய்ய நேரமில்லையே! அடுத்த முறை நிச்சயம் செய்கிறேன்' என்று, சொல்பவர் மனம் கோணாமல் சொல்லப் பழகுங்கள்.

## பதினோராம் ஆண்டு நினைவு



மலர்வு - 10.05.1946
உதிர்வு :02.11.2004

அமரர்
**கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**
(கோட்டக்கல்விப் பணிப்பாளர் - ஊர்காவற்றுறை)

இருவிழிகள் நீர் நிரப்பி
இளகி நிற்கும் இதயங்கள்
இறைவனின் திருவடியில்
இளைப்பாறும் மன்னவர்க்கு
இழப்பு என்பது எளிதல்ல - உடன்
இருப்பு என்பது நினைவானால்
இறப்பு என்பது புதிரல்ல-மறு
பிறப்பு என்பதும் நீயானால்
உருளும் உலகில்
உலகம் விடியும்
உயிரும் உணர்வும்
உனக்காய் உழலும்
மனிதம் போற்றும் மன்னவா - உனை
மறத்தல் என்பது மரிக்கும் வரை

நின் மனைவி
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.
(65721) (11,15,17)



## மரண அறிவித்தல்கள்

### சீவரத்தினம் பாலசுப்பிரமணியம்



பிறப்பு 14.05.1951 இறப்பு 28.10.2015

யாழ்.ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் zurich ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் பாலசுப்பிரமணியம் அவர்கள் 28.10.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தமலர் (சாந்தம்) அவர்களின் அன்புக் கணவரும், துவாரகேசன் (முகுந்தன்), சிந்துகேசன் (சிந்து), விதுஷன் (வினு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வராணி, வேலாயுதம் மற்றும் புஷ்பராணி (இந்தியா), கந்தசாமி (சிறீ-சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இலட்சுமிகாந்தன் (இலங்கை), விமலகாந்தன் (ஜேர்மனி), சந்திரகாந்தன் (இலங்கை), உமாகாந்தன் (இலங்கை), சிவசிதம்பரநாதன் (லண்டன்), அஜந்தா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஷ்வினின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.11.2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 - பி.ப. 2.00 மணிக்கு Krematorium Nordheim, Kaferholzstrasse 101, 8046 Zurich, Swiss இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இலட்சுமிகாந்தன்
(உ 19697)(11,15,17)



### தவசிப்பிள்ளை முத்துகுமாரசாமி
(ஆயுள்வேத வைத்தியர்)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவசிப்பிள்ளை முத்துகுமாரசாமி 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவசிப்பிள்ளை - சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மகனும், கமலலட்சுமி மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, தில்லை நாயகி, தம்பிப்பிள்ளை, உலகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலகுமாரன் (யோகா - கனடா), செல்வகுமாரன் (கனடா), அகில குமாரன் (கனடா), கோகிலகுமாரி (பிரான்ஸ்), மோகன் (முழங்காவில்), மேனகா (இந்தியா),மேகலா (கனடா), மதனா (டோகா), மதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜய லீலா (கனடா) ரஞ்சினி (கனடா), சர்மிலா (கனடா), பாலகுமார் (பிரான்ஸ்), தர்சிகா, வியஜேந்திரகுமார் (இந்தியா), சத்தியன் (கனடா), தனுசன் (டோகா) நிஷானி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், அபர்னா, மதுசன், சுயானா,சானுகா, ஜெனனி, டென்னுசன், ஜெருசன், அக்சா, அஸ்வின், அபிசா, யூலியா, நேமியா,கோபியா, ஆர்த்திகன், டிதுசன், அர்ச்சயன், அர்ச்சிகா, ஓவியா, இனியன், தசானிக்கா, ரிஸ்ரிக்காந், லிர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
தொ.பே. 077 314 6895, 077692 9580

தகவல்:
குடும்பத்தினர்.
(65723) (13,15,17)


# அத்துமீறும் மீன்பிடிப் படகுகளுக்கு 250 மில்லியன் ரூபா வரை அபராதம்

## *அமைச்சரவை அனுமதி*

கொழும்பு, நவ.2

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடும் வெளிநாட்டு மீன்பிடிப்படகுகளுக்கு 250 மில்லியன் ரூபா வரை அபராதம் விதிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த சமரவீர கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் வெளிநாட்டு மீனவ படகுகளுக்கு 150 மில்லியன் ரூபா அபராதம்விதிக்கும்வகையிலான அமைச்சரவைப்பத்திரம் எம்மால் சமர்ப் பிக்கப்பட்டது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதுடன், மீன்பிடிப் படகுகளின் கொள்ளளவுக்கு ஏற்ப அபராதத் தொகை 250 மில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை எமது நாட்டு மீனவர்களுக்கும் பொருந்தும். இலங்கைக் கடற்பரப்புக்கு வெளியே சென்று எமது நாட்டு படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டால் 250 மில்லியன் ரூபா வரை அபராதம் விதிக்கப்படும்.

நாம் இந்தத் திட்டத்தை எந்த ஒரு நாட்டையும் இலக்கு வைத்து நடைமுறைப்படுத்தவில்லை. எமது நாட்டு மீனவர்களும் சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபட்டாலும் இவ்வாறு அபராதம் விதிக்கப்படும்.

இந்திய மீனவர்கள் விடயத்தில் மனிதாபிமானமாக இலங்கை பார்க்கிறது. குறித்த மீனவர்கள் அவர்களின் படகு உரிமையாளர்களின் கட்டளையில் அனுப்பப்படுபவர்கள்.-என்றார். (ற-வ)

# புதிய கூட்டணி குறித்து சுரேஸுடன் பேசவில்லை

## *சொல்கிறார் ஆனந்தசங்கரி*

கொழும்பு, நவ.2

புதிய கூட்டணி குறித்து சுரேஸுடன் பேசவில்லை என்று தெரிவித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி, அவரது கட்சியிலுள்ளவர்களே தன்னுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று அணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொண்டுள்ளது. அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து, மகிந்த அரசுடன் இணைந்து இயங்கிய கருணா என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனும் இணையவுள்ளார் என்று கடந்த வாரம் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறானதொரு நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை, நீர்வேலியில் பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்களுள் ஒருவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், தான் கருணா - சங்கரி புதிய கூட்டணியில் இணையப் போவதாக வெளியாகியுள்ள செய்திகளில் உண்மை இல்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து வெளியாகியிருந்த நிலையில், கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வழங்கிய நேர்காணலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக மோசமாக நடந்து கொள்கின்றது. அதனால் புதிய அணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும். ஆனால் சுரேஸுடன் இது தொடர்பில் பேச்சுநடத்தப்படவில்லை. ஆனாலும் சுரேஸின் கட்சியைச் சேர்ந்த பலரும் என்னுடன் பேசி உள்ளனர். இது சுரேஸுக்குத் தெரியுமோ தெரியாது. அவர்கள் புதிய கூட்டணியில் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளனர் - என்றார். (த-5)

## மன்னார் மீனவ சங்க பிரதிநிதிகளைச் சந்தித்தார் இந்தியத் துணைத்தூதுவர்

மன்னார், நவ.2

யாழ். இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜாவிற்கும் மன்னார் மாவட்ட மீனவ சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னாரில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அதன் தலைவர் என்.எம்.ஆலம் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து மீன்பிடிக் கிராமங்களின் மீனவ சங்க பிரதி நிதிகள் கலந்து கொண்டதோடு மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறையின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் என்.மெராண்டாவும் கலந்து கொண்டார்.

இதன்போது, இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதினால் மன்னார் மாவட்டம் மற்றும் வட பகுதி மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப் பட்டது.

குறிப்பாக இந்திய இழுவைப்படகுகள் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடிநடவடிக்கைகளில் ஈடுபடும் போது வட பகுதி மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகள் இந்திய இழுவைப்படகுகளில் மாட்டி சேதத்திற்கு உள்ளாகுகின்றமை குறித்தும் இதனால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (வ-56)

## பதில்பொலிஸ்மா அதிபராக பூஜித



கொழும்பு, நவ.2

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன் உகண்டாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி நேற்று முதல் எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை பூஜித ஜயசுந்தர பதில் பொலிஸ் மா அதிபராக கடமைகளை மேற்கொள்ளவுள்ளார்.

மேலும், ஐந்தாம் திகதிக்குப் பின்னர் பதில் பொலிஸ் மா அதிபராக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்க செயற்படுவார் என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (வ-4)

## மாரப்பன பதவி விலக வேண்டும்

கொழும்பு,நவ.2

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பன தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமென ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பி லான பொறுப்பை ஏற்றுக் கொண்டு இவ்வாறு பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் குறிப்பிட்டுள்ள அவர், விசாரணை அறிக்கை நாளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். (வ)

# வர்த்தக நடவடிக்கைகளை படையினர் கைவிடவுள்ளனர்

## *அமைச்சரின் கருத்தை மறுக்கிறது இராணுவம்*

கொழும்பு, நவ.2

இராணுவத்தினர் தாங்கள் முன்னெடுக்கும் வர்த்தக நடவடிக்கைகளை கைவிடவுள்ளனர் என மீள்குடியேற்ற அமைச்சர் டி எம் சுவாமிநாதன் தெரிவித்துள்ள கருத்தை இராணுவம் நிராகரித்துள்ளது.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ,

இராணுவத்தினர் தாங்கள் மேற்கொண்டு வரும் வர்த்தக நடவடிக்கைகளை கைவிடப்போவ தாக கடந்த வாரம் உறுதியளித்தனர். அவர்கள் தற்போது ஆறு வர்த்தக நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு நன்மையளிக்கும். இந்த வர்த்தகங்களை பொதுமக்கள் மேற்கொள்ள முடியும். புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் உட்பட வடக்கு, கிழக்கில் வேலைவாய்ப்பிற்காக பலர் காத்திருக்கின்றனர்.-என்றார்.

எனினும் இது குறித்து கருத்து தெரிவித்துள்ள இராணுவபேச்சாளர் ஜயந்த ஜயவீர, இவ்வாறான உயர் மட்டக்கலந்துரையாடல் இடம்பெற்றது குறித்து நாம் அறிந்திருக்கவில்லை. ஆனால், இராணுவத்தினர் தற்போது வர்த்தக நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை-என்றார். (த-வ)

# இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 650 கருக்கலைப்புகள்

கொழும்பு, நவ.2

இலங்கையில் நாளொன்றுக்கு சராசரியாக 650க்கும் அதிகமான கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன என்று சுகாதார அமைச்சின் குடும்பநல மருத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் 77 வீதமான கருத்தரிப்புகள், அவை எதிர்பாராத கருத்தரிப்புகள் என்று சம்பந்தப்பட்டவர்களால் கருதப்படுகின்றன என்றும் அந்தப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்துஊடகங்களுக்கு கருத்து வழங்கிய கிழக்கு மாகாண சமூக நல மருத்துவ நிபுணரான டாக்டர் எஸ். அருள்குமரன், கருக்கலைப்புக்கள்1000என்றஎண்ணிக்கையில் இருந்து தற்போது 650ஆக குறைந்துள்ளது.

கருக்கலைப்புகள் மருத்துவ காரணங்களுக்காக மாத்திரமே அரச மருத்துவமனைகளில் நடக்கின்றன. ஆனாலும், சில சட்டவிரோத நிலையங்கள் அதற்காக செயற்படுகின்றன . அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார். (ற)

# மாணவர் மீதான தாக்குதலுக்கு மட்டு. மாணவர்களும் எதிர்ப்பு

கணக்கியல் உயர் டிப்ளோமா மாணவர்களால் கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பு உயர் தேசிய கணக்கீட்டு கற்கைநெறி மாணவர்கள் திங்கட்கிழமை அமைதியான முறையில் எதிர்ப்பை வெளியிடவுள்ளனர் என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்களையும் அத்துமீறல்களையும் கண்டித்தும் உயர் தேசிய கணக்கீட்டு கற்கைநெறி தொடர்பான தமது உரிமைக் கோரிக்கைகளை வலுப்படுத்தி அதற்கான தீர்வை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இதன்போது வலியுறுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு உயர் கல்வியகத்தை சேர்ந்த முழு, பகுதிநேர மாணவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர் என்றும் அந்த ஒன்றியம் தெரிவித்தது. (ற)

# மகிந்தவின் பாதுகாப்பு வாகனம் விபத்து

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கான ஜீப்வாகனம்,மோட்டார்சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பிடிகல – தலகத்தே வித்தியாலயத்திற்கு அருகில் வைத்து நேற்றுப்பிற்பகல் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உள்ளிட்ட இருவர் காயமடைந்துள்ளனர்.இவர்களைஅல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதோடு,காயமடைந்த ஆண் மேலதிக சிகிச்சைகளுக்காக கராபிடியவைத்தியசாலைக்குமாற்றப்பட்டுள்ளார். இதேவேளை இந்த விபத்துடன் தொடர்புடைய ஜீப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிடிகல பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் கூறியுள்ளது. (வ)

# ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உறுப்பினர் தகைமையிழக்கும் அமெ.

### வாக்கெடுப்பில் பாகிஸ்தானும் தோல்வி

நியூயோர்க், நவ.2

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றி வந்த அமெரிக்கா, அடுத்த மாதத்துடன் உறுப்பு நாடு என்ற தகைமையை இழக்கவுள்ளது.

இதனால் அமெரிக்கா, அடுத்த வருடம் முதல் ஐ.நா மனித உரிமைகள் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்படும் தீர்மானங்களைச் சமர்ப்பிக்கும் அதிகாரத்தை இழக்கின்றது.

அத்துடன் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு வலுவான ஆதரவு வழங்கி வந்த பாகிஸ்தானும் உறுப்பு நாடுகளுக்கான தேர்தலில் தோல்வி கண்டது.

இரண்டு பதவிக்காலங்கள் தொடர்ச்சியாக, ஐ.நா மனித உரிமைகள் சபையில்உறுப்புரிமைவகித்து வந்த அமெரிக்கா, சபையின் விதிமுறைகளுக்கு அமைய, இந்த ஆண்டு இறுதியுடன் உறுப்புரிமையை இழக்கவுள்ளது.

அமெரிக்கா, பாகிஸ்தான், ஆர்ஜென்ரீனா, பிரேசில், ஐவரிகோஸ்ட், எஸ்டோனியா, எத்தியோப்பியா, காபோன், ஜேர்மனி, அயர்லாந்து, ஜப்பான், கஜகஸ்தான், கென்யா, மொன்டிநீக்ரோ, தென்கொரியா, சியராலியோன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வெனிசுலா ஆகிய 18 நாடுகள் உறுப்புரிமையை இழக்கவுள்ளன.

இவற்றுக்குப் பதிலாக 18 புதிய உறுப்பு நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து, ஐ.நா மனித உரிமைகள் சபையில் புதிய உறுப்பு நாடுகளாக பெல்ஜியம்,புருண்டி,ஐவரிகோஸ்ட், ஈக்குவடோர், எத்தியோப்பியா, ஜோர்ஜியா, ஜேர்மனி, கென்யா, கிர்கிஸ்தான், மொங்கோலியா, பனாமா, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, ஸ்லோவேனியா, சுவிற்சர்லாந்து, டோகோ, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வெனிசுலா ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு புதிய 18 நாடுகளைத் தெரிவு செய்வதற்குக் கடந்த 28ஆம் திகதி, ஐ.நா பொதுச்சபையில், வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது.

இந்த வாக்கெடுப்பில், ஆசிய–பசுபிக் பிராந்தியத்துக்கான 5 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட தேர்தலில், கடந்த முறை உறுப்பு நாடாக இருந்த பாகிஸ்தான் தோல்வியடைந்தது.

ஐ.நா. மனித உரிமைகள், சபையில், இலங்கைக்கு வலுவான ஆதரவைக் கொடுத்து வந்த நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, போர் முடிவுக்கு வந்த பின்னர், ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானங்களை முன்னெடுத்து வந்த அமெரிக்கா, அடுத்த ஆண்டில் சபையில் வாக்களிக்கும், தீர்மானங்களைக் கொண்டு வரும் உரிமையை இழக்கவுள்ளது. (த–வ)

# விசாரணையை எதிர்கொள்வார் முன்னாள் பொலிஸ்மா அதிபர்

### லசந்த படுகொலை தொடர்பில்


லசந்த விக்கிரமதுங்க

கொழும்பு, நவ.2

சண்டே லீடர் ஆசிரியர் லசந்தவிக்கிரமதுங்கபடுகொலைதொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் உட்பட பல பொலிஸ் அதிகாரிகள், குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையை எதிர்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பில் சண்டே லீடர் ஆங்கிலஊடகம்வெளியிட்டுள்ளசெய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ணவையும், கல்கிசைபொலிஸ்நிலையத்தைசேர்ந்த பல பொலிஸ் அதிகாரிகளையும் விசாரிப்பதற்குக் குற்றப்புலனாய்வு பிரிவினர் தயாராகி வருகின்றனர்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதைத்தொடர்ந்துபொலிஸார் எடுத்துச்சென்ற விக்கிரமதுங்கவின் கையேடு உட்பட்ட பல தடயப் பொருள்கள் காணாமற்போயுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தடயப் பொருள்க்ள்உட்படபல விடயங்கள் குறித்து பொலிஸாரின் பதிவேட்டில் குறிப்பிடப்படுவது வழமை. எனவே அந்த பதிவேட்டின் பக்கங்களும் காணாமற்போயுள்ளது என பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் லசந்தவின் படுகொலையுடன் தொடர்புடையவர் என முன்னர் குற்றம்சாட்டப்பட்டிருந்த இராணுவபுலனாய்வுப் பிரிவை சேர்ந்த பியவன்ச என்பவரை மீண்டும் விசாரிப்பதற்காக பொலிஸார் நீதி மன்றத்தின் அனுமதியைப் பெறவுள்ளனர்.

குறித்த பியவன்ச என்ற சந்தேகநபர், பிச்சை ஜேசுதாஸன் என்பவரின் அடையாள அட்டையிலே தமதுசிம்காட்டை வாங்கியிருந்தார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–வ)

# ஜனாதிபதி செயலகத்தில் சீ.எஸ்.என் தலைமையகம்

### மகிந்த ஆட்சியில் நடந்ததாக தகவல்

கொழும்பு, நவ.2

சீ.எஸ்.என் தொலைக்காட்சி மகிந்த ராஜபக்ச குடும்பத்திற்கு சொந்தமானதல்ல என் தெரிவிக்கப்பட்ட போதிலும், தொலைக்காட்சியின் தலைமைக்காரியாலயம் ஜனாதிபதி செயலகத்தில் இயங்கி வந்துள்ளதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

கடந்த அரச ஆட்சிக் காலத்தில் சீ.எஸ்.என் தொலைக்காட்சியின் தலைமைக் காரியாலயம் ஜனாதிபதி செயலகத்தில் இயங்கி வந்துள்ளது. அதி உயர் பாது காப்புடன் ஜனாதிபதி செயலகத்தின் விசேட அறையொன்று சீ.எஸ்.என் தொலைக்காட்சிக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்தஅறையைநாமல்ராஜபக்சவும் அவருக்கு நெருக்கமானவர்களும் பயன்படுத்தி வந்தனர் என தகவல்கள் கிடைத்துள்ளன. அத்துடன் இந்த அறையில் சீ.எஸ்.என். தொலைக்காட்சிக்குச் சொந்தமான பல்வேறு முக்கிய இறுவட்டுக்கள் உள்ளிட்ட பொருள்கள் காணப்பட்டதாக அந்த தகவல் குறிப்பிடுகின்றன.

எவ்வாறெனினும், இந்த நிறுவனத்திற்கும் ராஜபக்ச குடும்பத்திற்கும் தொடர்பு எதுவும் கிடையாது என மறுப்பு வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ராஜபக்சாக்கள் இந்த ஆவணங்களை எடுத்துச் செல்ல மறந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் ஜனாதிபதியினது அலுவலகத்தில் எவ்வாறு பிரிதொருதனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அமைக்கப்பட முடியும் என குற்றப்புலனாய்வுப் பிரிவால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–வ)

# மாணவர் மீதான தாக்குதல் சம்பவம் நல்லாட்சியின் முகத்தைக் காட்டுகிறது

### புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ,2

கொழும்பில் கடந்த 29 ஆம் திகதி உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி மாணவர்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது பொலிஸார் வழிமறித்து தாக்கிய சம்பவம் நல்லாட்சியின் உண்மை முகத்தை படம் பிடித்துக் காட்டியுள்ளது. மைத்திரி – ரணில் ஆட்சியானது நல்லிணக்க நல்லாட்சிநோக்கிப்பயணிக்கிறதா? அல்லது முன்னைய ஆட்சியின் பொலிஸ் அராஜகப் பாதையில் செல்லப் போகிறதா? என்ற கேள்வியை இம் மாணவர்கள் மீதான தாக்குதல் எழுப்பியுள்ளது – என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினசக் கட்சியின் அரசியற் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

யார் பதவிக்கு வந்தாலும் நல்லாட்சி எனப் பெயரிட்டாலும் பொலிஸ் தாக்குதல்களும் அடக்கு முறைகளும் தொடரும் என்பதையே மாணவர் மீதான தாக்குதல் எடுத்துக்காட்டியுள்ளது. எனவே மாணவர்கள் மீதான அராஜகத் தாக்குதல்களை கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.அதேவேளைமாணவர்கள் கோரிக்கைகள்நியாயமானவையும் வழங்கப்பட வேண்டியவையும் என்பதை வற்புறுத்துகிறது.


உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி மாணவர்கள் நீண்ட நாள்களாக தமது கோரிக்கைகளை முன்னைய அரசின் காலத்திலிருந்து முன்வைத்து பல போராட்டங்களையும் நடத்தி வந்துள்ளனர்.ஆனால் அன்றைய ஆட்சியும் அதன் கல்வி அமைச்சரும் மாணவர்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்தும் உதாசீனம் செய்தே வந்துள்ளனர்.ஆனால் நல்லாட்சி எனக்கூறி நிற்கும் இன்றைய ஆட்சியிலும் முன்னைய ஆட்சியின் அமைச்சர்கள் அங்கம் பெற்றுள்ளனர்.

இந்த சூழலிலேயே மாணவர்கள் தமது கோரிக்கைகளை முன்னெடுத்துச் சென்ற போது அவர்கள் மீதான கொடூரத் தாக்குதல்கள் பொலிஸ் தரப்பால் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் ஊர்வலமாக சென்று தமது கோரிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவே முற்பட்டனர். ஆனால் மாணவர்கள் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டுகண்ணீர்ப்புகைக்குண்டுகள் வீசியும் ,நீர்த் தாரைப் பிரயோகம் செய்தும் குண்டாந் தடிகள் கொண்டும் தாக்கப்பட்டுள்ளனர். இதனால் 4க்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்து உள்ளனர். அத்துடன் 39 மாணவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளனர். இத்தகைய பொலிஸ் தாக்குதல்களை எமது கட்சி மக்கள் சார்பாகநின்று வன்மையாககண்டிக்கிறது– என்றுள்ளது. (ற–ரி6)



நாடு முழுவதும் பெய்து வரும் கடும் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதில் நேற்று கிளிநொச்சியின் பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததால் மக்களின் இயல்பு வாழ்கை பாதிப்புக்குள்ளாகி உள்ளது. (ரி3)




**விற்பனைக்கு உண்டு**

மல்ரி சொப்பிற்குத் தேவையான கண்ணாடி FITTING, கண்ணாடி ராக்கைகள், சோக்கேஸ்கள், WOOD FOOD ராக்கைகள், பெரிய DFREEZER கண்ணாடி குளிர்சாதனப்பெட்டி, றோல்ஸ் சூடாக வைத்திருக்கும் Glass சோக்கேஸ் (GLASS OVEN) என்பன விற்பனைக்கு உள்ளன.
(C.19696) (14,15,17)

தொடர்பு: 077 773 3532

Galaxy Star

வெற்றி வாரம் 004 | திகதி 2015-11-01

02 | 20 41 48 53

ரூ.2,205,340/-

2015-11-01 | 1897

வெற்றி இலக்கங்கள்: 23 26 39 53

ரூ.4,781,720

பெறுமதியான "டீ-செட்" வென்ற டிக்கட் தொடரிலக்கங்கள்

| | |
|---|---|
| 04 0001781- 0- 00 - குருநாகல் | 04 0001487- 7- 17 - ஹம்பாந்தோட்டை |
| 04 0006165- 6- 06 - கொழும்பு | 04 0002208- 8- 08 - யாழ்ப்பாணம் |
| 04 0008606- 8- 38 - களுத்துறை | 04 0003313- 2- 12 - வவுனியா |
| 04 0008629- 5- 25 - களுத்துறை | 04 0004633- 2- 02 - மாத்தறை |
| 04 0009706- 6- 16 - கண்டி | 04 0004889- 8- 38 - பதுளை |
| 04 0010023- 8- 08 - கம்பஹா | 04 0005824- 6- 26 - நுவரெலியா |
| 04 0012358- 7- 27 - கொழும்பு | 04 0006528- 1- 21 - அம்பாறை |
| 04 0016509- 5- 35 - கம்பஹா | |


# நிலத்தடி மாளிகையிலிருந்து கொழும்புத் துறைமுகத்துக்கு சுரங்கப்பாதை அமைத்த மகிந்த

கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நிலத்திற்கு அடியில் அமைக்கப்பட்டிருந்த ஆடம்பர பங்களாவிலிருந்து கொழும்பு துறைமுகத்துக்கு செல்வதற்கான சுரங்கப்பாதை அமைக்கும் பணி இடம்பெற்று வந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பணிகள் அரைவாசிவரை முடிந்துள்ளதாக, தன்னை இனம் காட்டவிரும்பாத ஜனாதிபதி இல்லத்தின் பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி மாளிகையில் பணி யாற்றும் ஒருவர் தெரிவிக்கையில், கடந்த பல வருடங்களாக அங்கு நான் பணி யாற்றுகின்றேன், நான் அறிந்த வகையில் மகிந்த ராஜபக்ச இரண்டு தடவையே அங்கு வந்துள்ளார். நாமல் மற்றும் யோசிதவும் அவரது ரக்பி நண்பர்களுமே அதனைப் பயன்படுத்துவார்கள்.

ஜனாதிபதி மாளிகை விடுதலைப்புலிகளின் இலக்குகளாக காணப்பட்ட பல கட்டடங்களுக்கும், கொழும்புத்துறை முகத்திற்கும் அருகில் காணப்பட்டதால் மகிந்த ராஜபக்ச அலரிமாளிகையிலேயே இருக்க விரும்பினார்.

இதன் காரணமாக இந்த நிலத்தடி ஆடம்பர பங்களா ஏன் கொழும்பு கோட்டையில் அமைக்கப்பட்டது என்பது கேள்விக்குரிய விடயம். அத்துடன், பதுங்குழி வளாகத்தில் நிலத்தைத் தோண்டும் வேலைகள் இரகசியமாக, மாலை வேளையில் தாமதமாக ஆரம்பிக்கப்படும் என அந்தப் பணியாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்தின் தலைவர், கட்டுமான ஒப்பந்தத்தின் தகவல்களை வழங்க மறுக்கின்றார். தமது வாடிக்கையாளரான ஜனாதிபதிசெயலகம் ஊடகங்களுக்கு எந்த தகவல்களையும்வழங்கவேண்டாமென கட்டளையிட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த ஜனாதிபதி இல்லத்தின் பணியாளர் கூறு கையில், பதுங்கு குழி மாளிகை கட்டுமானப் பணிகளுக் கான செலவு மதிப்பிடப்பட்டது. இதற்கு சுமார் ஒரு பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டிருந்தது. கட்டுமானப் பணிகள், நிலத்தடிக்கு மேல் இரண்டு மாடிகளும் நிலத் துக்கு கீழ் இரண்டு மாடிகளும் நடைபெற்றன. இதன் சுவர்களின் கொங்கிறீட் தடிமன் 6 அடிகளாகவும் தரையின் கொங்கிறீட் 12 அடிகள் தடிமனாகவும் உள்ளது.

இந்த மாளிகையின் உள்பகுதி முழுவதும் குளிரூட்டப்பட்டுள்ளது. இதனால் மாதாந்தம் இந்த மாளி கைக்கான மின்சாரக்கட்டணம் 3 மில்லியனாகும் என வும் அந்தப் பணியாளர் தெரிவித்தார் என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

## மரண அறிவித்தல்

### திருமதி மாகிரேட் வில்மட்



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாகிரேட் வில்மட் நேற்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு முடியப்பு - அன்னம்மா தம்பதியரின் அன்பு சிரேஷ்ட புதல்வியும், ஜோசப் வில்மட் அவர்களின் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி) அன்பு மனைவியும், றோய் சூரியகுமார் (இத்தாலி), றொபின் சந்திரகுமார் (ஜேர்மனி), திருமதி றதினி எறிக்கா தவநாயகம், றேமன்ட் உதயகுமார் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயும், சுஜாதா (இத்தாலி), லில்லி ஜெயசீலி (ஜேர்மனி), தவநாயகம் (பிரதேச செயல கம்,வேலணை), உதயஜெனா (இத் தாலி) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற குருசுமுத்து, திருமதி அக்னேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேரிமனோன் மணி (அல்லி), சின்னத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிமலன் (இத்தாலி), சாளினி, ஜயந்தன் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், நிவேதி, மிசேல், நிலாந்தன், போவாஸ், பினேகாஷ், ஹரிசன், கமிலஸ், பியோறின், யொகான், எறிக்லாசர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.133/16, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.
தொ.பே. 077 3002075

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகாம்பிகை குமாரசுவாமி



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை குமாரசுவாமி கடந்த (31.10. 2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், குமாரசுவாமியின் அன்பு மனைவியும், உதயகுமார் (பிரான்ஸ்), நித்தியகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் உதயரஞ்சினி, சுரேஸ்குமார் (உதயன் நிறுவனம், தனியார்கல்வி நிலைய ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஸ்ண மூர்த்தியின் அன்புச் சகோதரியும், மாலினி (பிரான்ஸ்), விஜயராணி (பிரான்ஸ்), கேதீஸ்வரன், கலிஸ்ரா (சாவகச்சேரி வைத்தியசாலை), ரஞ்சினிதேவி ஆகியோரின் பாச மிகு மாமியும், மாறன் (பிரான்ஸ்),மதுமிதா (பிரான்ஸ்), மதுமதி (பிரான்ஸ்), ஆதவன் (பிரான்ஸ்), ஆர்தீகன் (பிரான்ஸ்) , இராகுலன் (டோகா), மதீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் காறுப்பள்ளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு, கைதடி. 077 6013557 — தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பத்தினி சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை,
யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்)



மட்டுவில்தெற்கு, சாவகச்சேரியை நிரந்தர வதிவிடமாகவும் , இல. 63, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்தினி சின்னத்தம்பி நேற்று (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், மீனாட்சியின் அன்புச் சகோதரியும், தங்கவேல் (ஓய்வுபெற்ற விசாரணை உத்தியோகத்தர்,இ.போ.ச), யோகே ஸ்வரி (காப்புறுதி ஆலோசகர், இலங்கைக் காப்புறுதி) ஆகியோரின் அன்புத் தாயும், ஸ்ரீரஞ்சினி, வாமதேவன் (கிராம உத்தியோகத்தர், சந்திபுரம், மட்டுவில் நுணாவில் ) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெரினா, துஷ்யந் தன் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்), திருவரன் (பிரான்ஸ்), வினோத் (ஆசிரியர், வ/ஒலுமடு அ.த.க. பாடசாலை, நெடுங்கேணி), சிந்து, தர்சினாத் (ஆசிரியர், புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார்), துளசினாத் (கொமர்ஷல் வங்கி, சுன்னாகம்), இளங் கோவன் (ஹற்றன் நஷனல் வங்கி, வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த் தியும், அக்ஷயன், அர்ஜூன், ஷப்தகி ஆகியோரின் பூட்டியும், சிவசுப்பிர மணியத்தின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2015) திங்கட்கிழமை சுண்டுக்குளி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரி யைக்காக பி.ப.02.00 மணிக்கு கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. தங்கவேல் (மகன்)
0777 242471
சு. வாமதேவன் G.S. (மருமகன்)
077 4737600

63,கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

# இமையாணன் மாணவர் இருவர் தேசிய போட்டியில் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 2

இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவர்கள் இருவர் ஆங்கில தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றுள்ளனர் என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான ஆங்கில தினப் போட்டியில் வடக்கு மாகாணத்தில் 5 இடங் களைப் பெற்று 3 மாணவர்கள் தேசிய போட்டியில் பங்கு பற்றினர். அவர்களில் 2 பேர் வெற்றியைப் பெற்றுள்ளனர். தரம் 9 இல் பயிலும் தவக்குமார் மதுமிதா முதலாம் இடத்தை யும், 4 ஆம் தரத் தில் பயிலும் பிரபாகரன் பிரவீனா 3 ஆம் இடத்தையும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். ஆங்கில பாட ஆசிரியர் செ.அன் பழகன் அவர் களை வழிப் படுத்தியிருந்தார் என்று அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

## பொருத்தமான

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த அழைப்பை உலகத் தமிழர் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொண்டுள்ளதாக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தனது ருவிட்டர் தளத்தில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவேலிடம் உதயன் மின்னஞ்சல் மூலமாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்தப் பதிலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த வருடம் மார்ச் மாதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தூதுக்குழுவினர் பிரிட்டனுக்கு வந்திருந்தபோது உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த மேலும் மூன்று அங்கத்தவர்களுடன் நாம் அவருடன் காலை உணவு விருந்துபசாரத்தில் பங்கேற்றிருந்தோம். இதில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சர் சுவாமிநாதனும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உலகத் தமிழர் பேரவை பணியாற்றியிருந்தது என்ற அடிப்படையில் புதிய இலக்குகளை நோக்கிய பயணத்தில் நாம் புதிய அரசுக்கு உதவுவதற்கு விரும்பினோம்.

இனப்பிரச்சினை மற்றும் போர் தொடர்பான முற்றுமுழுதான உண்மைகளை அறிந்து கொள்ளும் பட்சத் திலும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை இதயசுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் அடைவதற்கு முயற்சிக்கும் பட்சத் திலுமே நல்லிணக்கத்தைக் காண்பது சாத்தியமாகும் என்பதை இதன்போது ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் நான் வலியுறுத்தியிருந்தேன்.

உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான எமது தேடலின் விளைவே நல்லிணக்கமாகும். இந்தத் தேடலை அரசியல்வாதிகளால் மாத்திரம் முன்னெடுக்கமுடியாது.

இந்த விடயத்தில் மதங்களும் அதன் தலைவர்களும் முக்கியமானதும் பொறுப்பு வாய்ந்ததுமான பணியை ஆற்றவேண்டியிருக்கின்றது. 1956ஆம் ஆண்டு முதற்கொண்டு பாதிக்கப்பட்டவர் என்ற வகையிலும், சாட்சி என்ற வகையிலும் எனக்கு இந்த இனப்பிரச்சினையுடன் நீண்டகால அனுபவம் இருக்கின்றது. நான் மீண்டும் தாயகம் திரும்புமிடத்து இந்த அனுபவத்தினூடாக உதவமுடியுமாக இருக்கும்.

ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் ஏனையவர்களும் இந்தச் சந்திப்பின்போது இதனைப் புரிந்துகொண்டதுடன், நான் இலங்கைக்குத் திரும்பிவந்து உதவமுடியும் என விரும்பினார்கள்.

என்னைப் பற்றியும் எனது நடவடிக்கைகளைப் பற்றியும் முன்னைய மகிந்த அரசானது பரப்பிய முற்றுமுழுதான பொய்களும் அவதூறுச் செய்திகளும் எந்தவகையில் களையப்படப் போகின்றன என்பதையும் எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் இனிமேல்தான் பார்க்க வேண்டியிருக்கின்றது. அந்தவகையில் உடனடியாகவன்றி, உண்மையான நல்லிணக்கத்தை அடைவதற்காக மக்களுக்கும் அவர்களது தலைவர்களுக்கும் உதவக்கூடிய பொருத்தமான நேரம் எனக்கு அமையும்போது சில காலப்பகுதியின் பின்னர் நான் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-சி)

## 6 இந்திய மீனவர்கள்

குறித்த மீனவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். மேலும் வயது குறைந்த ஜீவன் பிரைசர் (வயது-15) என்ற சிறுவனை மன்னார் சிறுவர் இல்லத்தில் அனுமதிக்குமாறும் மன்னார் பதில் நீதிவான் பணித்தார். (த-56)

## பயங்கரவாதச்

குற்றச்செயல்கள் தொடர்பில் அது நடைமுறையிலிருக்கும்.

எனினும் சட்டம் நீக்கப்பட்டால் அதன் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தவோ அல்லது கைது செய்யவோ முடியாது.

ஆயினும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் எமது அறிவுக்கு எட்டிய வகையில் எந்த கலந்துரையாடல்களும் நடத்தப்படவில்லை.-என்றார்.

இதேவேளை, ஐ.நா தீர்மானத்துக்கு அமைவாக, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு தமிழர்தரப்பு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## பிரபாகரன்

தலைவரான அன்ரன் பாலசிங்கம், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு என்ற ஒஸ்லோ பிரகடனத்தில் கையொப்பமிட்டார்.

கிளிநொச்சியில் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் இறுதியில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஒஸ்லோ தீர்மானம் தொடர்பில் கடும் விவாதம் நடைபெற்றது. எனினும் நியூயோர்க்கில் 2001 ஆம் ஆண்டு செப்ரம்பர் 11 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலையடுத்து சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பைக் காப்பாற்றவே ஒஸ்லோ பிரகடனத்தில் கையொப்பம் இட்டோம்.

மேலும் பிரபாகரன் ஒரு நல்ல மனிதராக இருந்தார். ஆனால் உலகமயமாக்கல் பற்றி அறிந்திருக்கவில்லை.

கிளிநொச்சியில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஒஸ்லோ தீர்மானத்தைக் கிழித்தெறிந்த பிரபாகரன், சுதந்திரப் போராட்டத்தை விற்றுவிட்டதாகக் குற்றம் சுமத்தினார்.

எனினும் ஒஸ்லோ தீர்மானத்தில், சமஷ்டி ஆட்சி குறித்து ஆராயுமாறு கோரப்பட்டுள்ளதே தவிர ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்படவில்லை என நாம் விளக்கியபோதிலும் பிரபாகரன் அதனைப் புரிந்துகொள்ளவில்லை.

எனவே இந்தத் தீர்மானத்தில் திருப்தியற்று இருந்தால் விடுதலைப் புலிகள் எந்த நேரத்திலும் பேச்சிலிருந்து விலகலாம் எனக் கூறினேன். எனினும் எனது வார்த்தைகள் செவிடன் காதில் சொன்னதாகப் போய்விட்டன.

உண்மையில் மாத்தையா (பிரபாகரனின் துணை), பிரபாகரனை கொலை செய்ய முயற்சித்தார். எனினும் நாம் அவரைப் பாதுகாக்க முயற்சித்து வந்தோம். ஆனால் பிரபாகரன், எம்மைத் துரோகி எனக் கூறியது கடும் மன வருத்தத்தில் ஆழ்த்தியது.

இதனால் எனது நிலைமையை அறிந்து கிளிநொச்சியிலிருந்து, மட்டக்களப்புக்குப் புறப்பட ஐரோப்பிய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஹெலி வசதி செய்து தரும்படி கேட்டேன். அவர்களின் உதவியுடன் மட்டக்களப்புக்குத் திரும்பிவிட்டேன்-என்றார். (த-வ)

## சர்வதேச

தொடர்பில் பல பிரச்சினைகள் மேலோங்கி நிற்கின்றன, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சிறுவர்களின் கல்வியை இடைநிறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் என பல வடிவங் களில் சிறுவர்களின் வாழ்க்கை முறைக ளும் வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றன. இப்பிள்ளைகளை இனங்கண்டு அவர்க ளுக்குரிய உளவள பயிற்சிகளை வழங்கி மீண்டும் அவர்களை சமுதாய நீரோட்டத்தில் இணைத்துக் கொண்டு பொறுப்புள்ள பிள்ளைகளாக்குவதற்கு உரிய வளப்பற்றாக் குறைகள் எமது பெரிய பிரச்சினைகளாகவுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான விடயங்களை நாம் மிகவும் விழிப்புடனும் அவதானமாகவும் கையாள வேண்டியுள்ளது. இவ்வாறு பாதிப்புக்குள்ளான பிள்ளைகளுக்கு முறையாக உளவள உதவிகளை வழங்கி அவர்களை மீண்டும் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஏனைய மாணவர்களுடன் இணைந்து மேற்கொள்ளக்கூடியதாக ஆக்குதல் எமது தார்மீகக் கடமையும் பொறுப்புமாகும். எங்களுடன் இணைந்து செய்தி ஊடகங்களும் இவ்விடயங்களைக் கையாளுதல் சாலச் சிறந்தது.

எமது சமூகத்தைத் திட்டமிட்ட முறையில் சீரழிப்பதற்கென்று பலர் கங்கணம் கட்டி நிற்பதை எம்மால் உணர முடிகின்றது. 2009 காலப்பகுதிக்கு முன்னர் எதுவித தீய பழக்கங்களுமின்றி இளைஞர், யுவதிகள் வாழ்ந்து வந்திருந்த எமது பகுதிகளில் இப்போது எவ்வாறு தினமும் கஞ்சாப் பொதிகளும் இன்னும் பல போதைப் பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன? என்பது விந்தையாகவே உள்ளது. இவை பற்றியும் ஆராயப்படவேண்டியுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் பெற்றோர்களுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள். உங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் அதீத அக்கறை காட்டுங்கள். அவர்களின் நடவடிக்கைகளில் மாற்றங்கள் தென்படுகின்றபோது விரைந்து நடவடிக்கைகளில் இறங்குங்கள். அப்போதுதான் பிள்ளைகள் காப்பாற்றப்படலாமென தெரிவித்து இதுவரை போர்ப் பீதியில் எமது பிள்ளைகளைக் காப்பாற்றப் பாடுபட்டது போல் கலாசாரச் சீரழிவுகளில் இருந்தும் அவர்களைக் காப்பாற்ற அனைவரும் இணைந்து பாடுபடவேண்டும்.

ஆலோசகர்களைப் பெறுவதில் உள்ள சிக்கலான நிலை தொடர்பாக வெளிநாட்டுத் தூதுவர்கள் பலருடன் கலந்தாலோசித்து வருகின்றோம். இந்நிலையில் வேள்ட் கென்சேன் எனும் அமைப்பு உள்ளிட்ட அமைப்புக்கள் எமக்கு உதவ முன்வருவது சற்று மன ஆறுதலைத் தருகின்றது. அந்த அமைப்பினர் தமது சேவைகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களையும் உள்ளடக்கி இருப்பது மகிழ்வைத் தருகின்றது-என்றார். (த-4)

## புலம்பெயர்

இது புலம்பெயர் அமைப் புகள், தனிநபர்கள் மீதான தடையை நீக்குவதற்கான முன்னோடி நடவடிக்கை என்று கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் இடம்பெற்றிருந்த 16 அமைப்புகள், 400 தனிநபர்களின் விவரங்களை வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து, பாதுகாப்பு அமைச்சு மீளாய்வு செய்து வரு கின்றது.

இந்தப் பட்டியல் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு விரிவாக ஆராய்கிறது. வெளிவிவகார அமைச்சு இந்தத் தடையை நீக்குவது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்க முன்னர் இந்த மீளாய்வு அறிக்கை இம்மாதம் சமர்ப்பிக்கப்படும்.

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகளுடன் தொடர்புகளை வைத்துள்ள தனது வலையமைப்புகளின் மூலம், அவர்களின் வலையமைப்பு, நிகழ்வுகள், சம்பவங்களில் தொடர்புடையவர்கள் பற்றிய தகவல்களை பாதுகாப்பு அமைச்சு சேகரித்து வருகின்றது.

மேலும், புலம்பெயர் தமிழர்களுடனான தொடர்புகள், மற்றும் அவர்களிடம் இருந்து தகவல்களை பெறும் விவகாரங்களை வெளிவிவகார அமைச்சே கையாளவுள்ளது-என்றார். (த-வ-5)

## வடபகுதியை

இருப்பதாக மகிந்த என்னிடம் கூறினார்.

நீண்ட காலத்துக்குக் கையளிப்பதையோ அல்லது சமாதான முயற்சிகள் நீடிப்பதையோ விரும்பவில்லை என்றும், அது தெற்கில் தனது ஆதரவைச் சீர்குலைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

போரின்போது இரண்டு தரப்பினராலும் போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் விடுதலைப் புலிகளின் தலைமையை இந்தக் குற்றங்களுக்காகத் தண்டிக்க முடியாது. அவர்கள் அனைவரும் இறந்து விட்டனர்.

குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கான பொறிமுறை ஒன்று இலங்கையில்உருவாக்கப்படவேண்டும். அது தான் சிறந்தது.

இதனைச் செய்ய முடியாதுபோனால், சர்வதேச மட்டத்தில் செய்ய வேண்டும். போர்க்குற்றங்களுக்கு. இரண்டு தரப்புத் தலைமைகளுமே பொறுப்பேற்கவேண்டும்.

விடுதலைப் புலிகளால் எவராவது கொல்லப்பட்டிருந்தால், அது பிரபாகரனின் உத்தரவின் பேரில் தான் நடந்தது. வேறு எவரினாலும் கொல்லப்பட்டிருந்தால் அதற்கு அரச தலைமையே பொறுப்பு.

சமாதான முயற்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும், பூசல்களினாலேயே முறிந்து போனது. ஒரு தரப்பு தமிழர்களுக்குக் கணிசமான வாய்ப்பைக் கொடுக்க இணங்கும்போது மற்றத் தரப்பு அதனை எதிர்த்தது.

விடுதலைப் புலிகளுடன் போரிட்டதை விட, அதிகமாக இவர்கள் ஒருவருக்கு ஒருவர் மோதிக் கொண்டனர். அது ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகளை இலங்கை அரசும், பிரபாகரனும் தவறவிட்டனர். 2002ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்கவின் ஆசீர்வாதத்துடன், விடுதலைப் புலிகளுடன் பேச ரணில் விக்கிரமசிங்க அரசு தயாராக இருந்தது. ஆனால் பிரபாகரனின் தவறினால் அந்த வாய்ப்பு தவறிப் போனது.

சர்வதேச சமூகத்தின் ஈடுபாடும் குறைவாகவே இருந்தது. அப்போது ஈராக், ஆப்கானிஸ்தான் பிரச்சினைகள் தீவிரமாக இருந்ததால், அவர்களால் இலங்கை குறித்து அதிக கவனம் செலுத்த முடியவில்லை.

பிரபாகரனால் கூட்டாட்சியை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் அதனை ஒத்திவைத்து விட்டார். இறுதியில் அதனை அடைய முடியவில்லை.

தனிமைப்படுத்தப்பட்ட நிலையில், பொருத்தமற்ற தகவல்களின் அடிப்படையில், எல்லா முடிவுகளையும் எடுத்தமையே விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு, காரணம்-என்றார். (த-வ-5)

## பொலிஸார்

செய்யப்படவில்லை என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில நாள்களுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ள போதும் தற்போதுதான் தகவல் வெளியே கசிந்துள்ளது.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் குறைந்தது 7 வருடங்களாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுகிறார். அவர் முன்னைய ஆட்சிக் காலத்தில் இருந்தே பொலிஸ் உயரதிகாரிகளுக்கு நெருக்கமாக இருந்து வருகிறார் என்றும் பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. அவர்கள் இரண்டு பேரும் சொகுசுக் கார்கள் கொள்வனவு செய்துள்ளனர் என்றும் அதற்குரிய பணத்தைச் செலுத்துவதற்கு அவர்கள் அவ்வாறு பணம் சேர்த்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

உடுவிலில் உள்ள கடைகள் சிலவற்றில் அந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணம் பெற்றுள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நிலையில் அதில் ஒரு கடையிலேயே பொலிஸார் பணம் பெறுவது சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது என்று கூறப்பட்டது.

லஞ்சம் பெறுவது குற்றம் என்றும் அத்தகைய குற்றங்களில் பொலிஸார் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடக சந்திப்பில் பொலிஸ் உயரதிகாரிகளால் கூறப்படுகிறது. லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் முன்னர் யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிங்களப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

பொலிஸ் சீருடையில் சென்றே லஞ்சம் பெறப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் பொலிஸார் தானா என்பது தெரியாததால் அது பற்றிய தகவல் சுன்னாகம் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ நேரம் பொதுமக்களும் அங்கு நின்றுள்ளனர். தகவல் தொடர்பில் பொலிஸார் விசாரணை செய்தபோதே அந்த இரண்டு பேரும் பொலிஸ் உத்தியோர்கத்தர்கள் தான் என்பது தெரியவந்து ள்ளது.

அந்த இருவர் பற்றியும் ஏனைய பொலிஸாரிடம்கூட நல்ல அபிப்பிராயம் இல்லை என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின் றன. இந்நிலையில் குறித்த பொலிஸார் லஞ்சம் பெற்றமை தொடர்பிலான குற்றச்சாட்டுத் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, அது பெரிய விடயமல்ல. எனினும் அது பற்றி முறைப்பாடு கிடைக்கவில்லை. முறைப்பாடு செய்யப்பட்டால் விசாரிக்க முடியும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகரவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த சம்பவம் தொடர்பில் தமக்கு அறிவிக்கப்படவில்லை. எனினும் அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவாகவில்லை. முறைப்பாடு செய்தால் நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் தெரிவித்தார். (த-4-ரி2)

# சந்தேகநபர்களைத் தாக்குவதற்கு பொலிஸாருக்கு அனுமதியில்லை

## பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்து

கொழும்பு, நவ.2

சந்தேக நபர்களைத் தாக்குவதற்குப் பொலிஸாருக்கு அனுமதியில்லை எனப் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஒரு குற்றச் செயல் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படும் நபர் ஒருவரைத் தாக்கிச் சித்திரவதைக்கு உட்படுத்தித் தகவல்களைப் பெற்றுக்கொள்ள, எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் சட்டத்தில் இடமில்லை. சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள அதிகாரத்தையும் விஞ்ஞான ரீதியான காரணிகளின் அடிப்படையிலான சாட்சியங்களையும் பயன்படுத்தி விசாரணை நடத்தப்பட முடியும்.

சந்தேக நபர் ஒருவர் தாக்கப்பட்டிருந்தால் – சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் அது குறித்துப் பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபர் அல்லது மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய முடியும்.

சட்ட மீறல்களில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் – அதிகாரிகளுக்கு எதிராகப் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும். சந்தேக நபர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என ருவான் குணசேகர கொழும்பு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சந்தேக நபர்களைத் தாக்கக்கூடாது எனச் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்மா அதிபர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (கு)

# போர்ட்சிற்றி திட்டத்தில் இந்தியாவுக்கு அக்கறை

புதுடில்லி, நவ.2

கொழும்புத் துறைமுக விரிவாக்கத் திட்டத்தில் (போர்ட்சிற்றி) இந்தியாவின் அரசுத்துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த துறைமுக நிறுவனங்கள் ஈடுபடுவதை ஊக்குவிப்பதில் இந்திய அரசு அக்கறை காண்பிப்பதாகப் புதுடில்லி அரசின் வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்புத் துறைமுக விரிவாக்கத் திட்டம் தொடர்பில் இலங்கை அரசு இந்தியாவிடம் அணுகியுள்ளது. அத்துடன், தெற்காசியாவில் மிகவும் பரபரப்பான துறைமுகமான கொழும்புத் துறைமுகத்தின், கிழக்கு முனையத்தை விரிவாக்கும் திட்டத்துக்கு, தம்முடன் இணைந்து செயற்படத்தக்க பொருத்தமானதொரு மூலோபாய முதலீட்டு நிறுவனத்தை, அடையாளம் காண உதவும் படி, இலங்கையின் மிகப் பெரிய தனியார் நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் கேட்டுள்ளது.

இது தொடர்பாகப் புதுடில்லியில் உள்ள இந்தியாவின் கப்பல்துறை அமைச்சுக்கு, இந்தியத் தூதரகம் கடிதம் அனுப்பியுள்ளது.

இந்தியாவின் சரக்குகளைப் பரிமாற்றும் முக்கியமான மையமாக கொழும்புத் துறைமுகம் இருப்பதால், இந்திய நிறுவனம் ஒன்று இதில் ஈடுபடுவது நன்மையளிப்பதாக இருக்கும் என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அரசு, கொழும்புத் துறைமுகத்தில் தெற்கு, கிழக்கு, மேற்கு முனையங்கள் என்று மூன்று கொள்கலன் முனையங்களை அமைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதில் கிழக்குக் கொள்கலன் முனையத் திட்டம், இலங்கை துறைமுக அதிகாரசபையால் நிர்வகிக்கப்படும் வகையில், 330 மில்லியன் டொலர் செலவில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

1200 மீற்றர் நீளமுடைய, இந்தக் கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தின், 400 மீற்றர் வரையான பகுதி, கட்டுமானப் பணிகள் முடிந்து, கடந்த ஏப்ரல் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி, 81.7 வீதமும், இலங்கை துறைமுக அதிகாரசபை 18.3 வீதமும் நிதியை ஒதுக்கியுள்ளன.

இந்தக் கொள்கலன் முனையத்துக்குக் கப்பல்களை ஈர்க்கத்தக்கதாக, அபிவிருத்தி செய்து செயற்படுத்தும் ஒரு செயற்பாட்டாளரை இலங்கை துறைமுக அதிகாரசபை ஆர்வத்துடன் எதிர்பார்ப்பதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்புத்துறைமுகத்தின் தெற்கு கொள்கலன் முனையம், ஏற்கனவே செயற்படத் தொடங்கி விட்டது. சீன மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் இன்ரநசனல் நிறுவனம் 85 வீதமும், இலங்கை துறைமுக அதிகாரசபை 15 வீதமும், இந்த முனையத்தில் முதலிட்டுள்ளன.

இந்த முனையத்தைக் கட்டி, செயற்படுத்தி 35 ஆண்டுகளில் கைமாற்றும் உடன்பாட்டை சீன நிறுவனம், இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் செய்து கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-வ)

# ஐ.நா. விசாரணையை எதிர்கொள்ளத் தயார்

## சவால் விடுகிறார் கருணா

கொழும்பு, நவ.2

இலங்கை தொடர்பான ஐ.நாவின் போர்க்குற்றவிசாரணை அறிக்கையில், காணாமற்போனோரைக் கருணா குழுவினர்தான் கடத்தினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, கருணா கடத்தினார் என்று அதில் தெரிவிக்கப்படவில்லை. எனினும், ஐ.நாவின் விசாரணையை எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன்."

இவ்வாறு கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் தெரிவித்தார்.

ஐ.நாவின் போர்க்குற்றவிசாரணை அறிக்கையில் காணாமற்போனவர்கள் கடத்தப்பட்டதில் கருணா குழு ஈடுபட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?" என்று அவரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் அந்தப் பதிலில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து விலகி நான் இந்தியா மற்றும் லண்டனில் தங்கியிருந்தேன். இந்தக் காலகட்டத்தில் என்னுடைய பெயரைப் பயன்படுத்தி சிலர் ஆள்கடத்தல் மற்றும் கொலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவை தொடர்பில் இன்று பலர் கைதுசெய்யப்படுகின்றனர். இதிலிருந்து மக்கள் ஒன்றை மட்டும் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது, எவர் ஆள் கடத்தல், கொலைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை.

நான் இலண்டனில் கைதுசெய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகத்தான் செயற்பட்டேன். என் மீதான இவ்வாறான குற்றச்சாட்டுகளில் எது உண்மை என்பதை மக்கள் நன்குபுரிந்துகொள்ள வேண்டும். எனினும், நான் ஐ.நாவின் விசாரணையை எதிர்கொள்ளவும் தயாராகவுள்ளேன்.

தமிழ் மக்களுக்கு இன்றைய காலகட்டத்தில் மாற்றுப் பலமான தமிழ்க் கட்சிஒன்று தேவை. அதனால்தான், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைவதற்கு எனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளேன்.

விடுதலைப் புலிகளுடன் இருந்தவர்கள்தான் வெளிநாடுகளில் செய்தி இணையத் தளங்களை இயக்கி தமக்குப் பிடித்த அரசியல் தலைவர்களைப்பற்றி தமிழ்ப்பற்று எழுத்தாளர்கள்போல் எழுதுகின்றனர். அப்படியாயின் அவர்களையும் துரோகி என்றுதான் அழைக்க வேண்டும்–என்றார். (கு-சி)

# இலங்கையின் பொறுப்புக்கூறலை நோக்கிய இன்னொரு முன்னகர்வு

## திறந்த அரசுகளின் கூட்டமைப்பில் இணைந்தமை குறித்து அமெரிக்கா

கொழும்பு, நவ.2

திறந்த அரசுகளின் கூட்டமைப்பில், இலங்கை இணைந்து கொண்டுள்ளமை, இன்னும் கூடுதலான பொறுப்புக் கூறலை நோக்கிய அதன் இன்னொரு அடி என ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவைக் கடந்த மாதம் 29ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

மெக்சிகோவில் நடைபெற்ற திறந்த அரசுகளின் கூட்டமைப்பின் பூகோள மாநாட்டின் பக்க நிகழ்வாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த மாநாட்டில், இலங்கையும் திறந்த அரசுகளின் கூட்டமைப்பின் உறுப்பு நாடாக இணைந்து கொள்வதாக, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச அறிவித்திருந்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பின் போது, பொறுப்புக்கூறல் தொடர்பான இலங்கையின் நகர்வுகள் தொடர்பாக சமந்தா பவரும், விஜேதாச ராஜபக்சவும் கலந்துரையாடியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பேச்சுக்களில் இலங்கைப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வாவும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கியும் கலந்து கொண்டனர். (ற-வ)



இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் பூர்த்தியைக் கொண்டாடும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாய்லாந்து சென்றுள்ளார். ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் செல்வதற்கு முன்னர் புத்த பெருமானின் புனித சின்னங்கள் பூசிக்கப்பட்டு, விசேட வழிபாடுகள் இடம்பெற்று அவையும் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. தாய்லாந்தில் இடம்பெறவுள்ள வரலாற்று சின்னங்கள் அடங்கிய கண்காட்சியில் குறித்த சின்னங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ற)

# சுயாதீன தொலைக்காட்சி நட்டஈடு தரவேண்டுமாம்

## சொல்கிறார் மகிந்த

கொழும்பு, நவ.2

சுயாதீன தொலைக்காட்சியினால் தனக்கு நட்டஈடு செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பெரியளவிலான மோசடிமற்றும் ஊழல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

முறையற்ற விதத்தில் சுயாதீன தொலைக்காட்சி நிர்வாகம் கொடுப்பனவு முறையைத் தயாரித்துள்ளது. எமது நத்தார் வாழ்த்துச் செய்திக்கும் அறவீடு வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஒருவரின் நத்தார் செய்தி அனைத்து ஊடகங்களிலும் ஒளிபரப்பப்படுகின்ற நிலையில், அதற்கான கொடுப்பனவைச் செலுத்த வேண்டுமா என்பது எமது கேள்வியாகவுள்ளது.

அதனால் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகளின் பிரகாரம் சுயாதீன தொலைக் காட்சியே எமக்கு நட்டஈட்டை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது – என்றார்.

இதேவேளை, கொழும்பு வோர்ட் பிளேஸ் பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைத் தான் வன்மையாக கண்டிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டாம் என தான் ஜனாதிபதியாக இருந்த காலக்கட்டத்தில் உத்தரவிட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ள அவர், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட பல்கலைக் கழக மாணவர்களுக்குத் தான் பால் கொடுத்ததாகவும் கூறினார்.

எதிர்வரும் 19ஆம் திகதி தனக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டார். (கு-வ)

# இலவசக் கல்வி பாதுகாக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்



கொழும்பு, நவ.2

கல்வித்துறையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சகல பிள்ளைகளுக்குமான இலவசக் கல்வி உரிமை பாதுகாக்கப்படும் என்றும், புதிய அரசின்நோக்கங்களுள் அதுவும் ஒன்று என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நுகேகொடை சமுத்திரா தேவி மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர் மற்றும் இயற்கை இடர்களுக்கு முகம்கொடுத்த பிரதேசங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசு விசேட கவனம் செலுத்தி வருகிறது.

நாட்டில் உள்ள சகல பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வியின் சிறந்த பெறுபேறுகளை வழங்குவது எல்லோரினதும் பொறுப்பு. அரசு தேவையான வசதிகளை பிள்ளைகளுக்கு வழங்கிய நிலையில், அவர்களது கல்விக்கான ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டியது பெற்றோர்களுடைய பொறுப்பாகும்.

ஒன்பது மாகாணங்களிலும் வாழ்கின்ற மக்களின் எழுத்தறிவை அதிகரிப்பதும் அரசின் நோக்கம். காலக் கல்வித்திட்டங்களின் ஊடாக நாட்டின் சகல மக்களினதும் எழுத்தறிவு வீதத்தை 100 வீதத்துக்கு அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம் –என்றார்.

## மாகாண மட்ட தடைதாண்டலில் தங்கத்தை கைப்பற்றியது முல்லை

வவுனியா, நவ. 2
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில்நடைபெற்றுவரும்மாவட்டங்களுக்கு இடையிலான மாகாண மட்ட தடகளத் தொடரில் ஆண்களுக்கான திறந்தபிரிவு 400 மீற்றர் தடைதாண்டலில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம்செய்த எஸ்.விதுஸ்ரன் இலக்கை 57.7 நிமிடங்களில் அடைந்து தங்கப்பதக்கத்தையும், யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜோய்ஆகாஸ் 59.7 நிமிடங்களில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.ரினோசன் 59.9 நிமிடங்களில் இலக்கை அடைந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

## வடமாகாண ரீதியான தட்டெறிதல் யாழ். மாவட்டத்துக்குத் தங்கம்

வவுனியா, நவ. 2
மாவட்ட செயலகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியாக நடைபெற்றுவரும் தடகளத் தொடரின் ஒரு பிரிவான ஆண்களுக்கான (வயதெல்லையற்ற) தட்டெறிதலில் யாழ். மாவட்டத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.
வவுனியாதேசிய கல்வியியற்கல்லூரிமைதானத்தில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ. கிருஸ்ணமூர்த்தி 32.98 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப்பதக்கத்தையும் மற்றொரு யாழ். வீரனான ஆர்.நிமல் 31.64 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் வவுனியா மாவட்டத்தைப் பிரதி நிதித்துவம் செய்த டபிள்யு.ரவிந்திரகுமார் 28.25 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப்பதக்கத்தையம் கைப்பற்றினர். (ம-422)

## சம்பியனானது யாழ். மாவட்டம் வடமாகாண தடகளத் தொடரில்




வவுனியா, நவ. 2
நடப்பு வருடத்தின் மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான வடமாகாணத் தடகளத் தொடரில் யாழ். மாவட்ட செயலகம் சம்பியனாகியுள்ளது.
வவுனியா கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையும், நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்ற இந்த தடகளத் தொடரில் ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் 270 புள்ளிகளுடன் யாழ். மாவட்ட செயலகம் சம்பியனாகியுள்ளது. இரண்டாவது இடத்தில் 102.5 புள்ளிகளுடன் வவுனியா மாவட்ட செயலகம் உள்ளது. 78.5 புள்ளிகளுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகம் மூன்றாம் இடத்திலும், 68 புள்ளிகளுடன் மன்னார் மாவட்ட செயலகம் நான்காவது இடத்திலும் 42 புள்ளிகளுடன் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் இறுதி இடத்திலும் உள்ளன.
யாழ். மாவட்டம் 35 தங்கப் பதக்கங்களையும் 19 வெள்ளிப் பதக்கங்களையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றிருந்தது. வவுனியா மாவட்டச் செயலகம் 18 தங்கங்களையும் 14 வெள்ளிகளையும் 13 வெண்கலங்களையும் கிளிநொச்சி மாவட்ட செயலகம் 7 தங்கங்களையும் 17 வெள்ளிகளையும் 11 வெண்கலங்களையும் மன்னார் மாவட்ட செயலகம் 11 தங்கங்களையும் 14 வெள்ளிகளையும் 9 வெண்கலங்களையும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் 5 தங்கங்களையும் 12 வெள்ளிகளையும் 7 வெண்கலங்களையும் பெற்றுள்ளன.
சிறந்த சுவட்டு வீரராக முல்லை மாவட்டத்தின் எஸ்.விதுசனும் சிறந்த சுவட்டு வீராங்கனையாக-யாழ்.மாவட்டத்தின் கே.கமலினியும், கள நிகழ்ச்சிகளின் சிறந்த வீரராக யாழ். மாவட்டத்தின் வி.யஸ்மினனும் கள நிகழ்ச்சிகளின் சிறந்த வீராங்கனையாக முல்லை மாவட்டத்தின் வி.ஜெனிதாவும் தெரிவானார்கள். (ம-422)

# குண்டு எறிதலில் வவுனியாவுக்குத் தங்கம்



வவுனியா, நவ. 2
மாவட்ட செயலகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியாக நடைபெற்றுவரும் தடகளத் தொடரில் வயதெல்லையற்ற பெண்கள் பிரிவில் குண்டெறிதலில் வவுனியா மாவட்டத்துக்கு தங்கப் பதக்கமும் வெள்ளிப் பதக்கமும் கிடைத்துள்ளன.
வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.தர்சிகா 9.31 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றிய அதே நேரம் அதே மாவட்டத்தில் என். திசாந்தினி 8.32 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். முல்லை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.காா்த்திகா 8.17 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)



மாவட்ட செயலகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியாக நடைபெற்றுவரும் தடகளத் தொடரில் வயதெல்லையற்ற பெண்கள் பிரிவில் ஈட்டியெறிதலில் ஒரு பதிவு. (ம-422)

## தங்கத்தைக் கைப்பற்றியது மன்னார், மாவட்டங்களுக்கு இடையிலான முப்பாய்ச்சலில்

வவுனியா, நவ. 2
மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான மாகாண மட்ட தடகளத் தொடரில் ஆண்களுக்கான திறந்த பிரிவு முப்பாய்ச்சலில் மன்னார் மாவட்டத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.
மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான மாகாண மட்ட தடகளத் தொடர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.வேநிலன் 13.18 மீற்றர் தூரத்துக்கு பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
மற்றொரு மன்னார் வீரனான கே.சயந்தன் 13.16 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கமல்ராஜ் 13.06 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)



மாவட்ட செயலகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியாக நடைபெற்றுவரும் தடகளத் தொடரில் ஆண்களுக்கான (திறந்த அல்லது அனைவருக்குமான பிரிவு) 110 மீற்றர் தடைதாண்டல் ஒரு பதிவு. (ம-422)

# தகர்க்கப்பட்டவையும் படைக்கப்பட்டவையும்




வவுனியா, நவ. 2
மாவட்டச் செயலகங்களுக்கு இடையில் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவில் மூன்று சாதனைகளும், பெண்கள் பிரிவில் மூன்று சாதனைகளும் என ஒட்டுமொத்தமாக 6 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. 6 புதிய சாதனைகளில் எந்தவொரு சாதனையும் யாழ். மாவட்ட வீரவீராங்கனைகளால் படைக்கப்படவில்லை.

ஆண்கள் பிரிவில் 400 மீற்றர் தடைதாண்டலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சார்பாக களமிறங்கிய எஸ்.விதுர்சன் 57.7 செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனையுடன் தங்கத்தை சொந்தமாக்கினார். நகருக்கு குறுக்கான ஓட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த அன்ரனி டெல்மன் 38 நிமிடங்களிலும் 36 செக்கன்களிலும் 2 மில்லி செக்கன்களிலும் இலக்கை அடைந்து புதிய சாதனையை நிலை நாட்டினார். 110மீற்றர் தடைதாண்டலில் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த லிசோன் லம்பேர்ட் 16.3 நிமிடங்களில் ஊதித்தள்ளி சாதனை படைத்தார்.

பெண்கள் பிரிவில் முப்பாய்ச்சலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சார்பாக களமிறங்கிய ஜெனித்தா 10.79 நிமிடங்களில் இலக்கை அடைந்தும், வேகநடையில் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.கணேஸ்வரி 2 மணித்தியாலம் 10 நிமிடங்கள் 31 செக்கன்களில் இலக்கை அடைந்தும், நகருக்கு குறுக்கான ஓட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த ரி.டென்சிகா 32 நிமிடங்கள் 15 செக்கன்கள் 5 மில்லிசெக்கன்களில் இலக்கை அடைந்தும் புதிய சாதனைகளை நிலை நாட்டினர். (ம-422)



வடமாகாண ரீதியாக மாவட்டச் செயலகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான (திறந்த பிரிவு) சம்மட்டி எறிதலின் ஓர் பதிவு. (ம-23)

## பெண்களுக்கான நீளம் பாய்தல் முல்லை மாவட்டத்துக்கு தங்கம்

வவுனியா, நவ. 2
மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான வடமாகாணத் தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு (அனைவருக்குமான) நீளம் பாய்தலில் முல்லை மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய வி.ஜெனித்தா 4.98 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.ஆரணி 4.85 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த ஏ.வி. யஸ்மிதா 4.7 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## 100 மீற்றர் ஓட்டம் மன்னாருக்கு தங்கம்

வவுனியா, நவ. 2
மாவட்டச் செயலகங்களுக்கு இடையில்வடமாகாணரீதியாகநடைபெற்று வரும் தடகளத் தொடரின் ஓர் பிரிவான திறந்த பிரிவின் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எ.ஜெறோம் தங்கப்பதக்கத்தை கைப்பற்றிய அதேநேரம் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அபிமன் வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் சார்பாக களமிறங்கிய வி.யோகன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## தங்கம் கிளிநொச்சியிடம்

வவுனியா, நவ. 2
வவுனியா கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரின் உயரம் பாய்தலில்கிளிநொச்சிமாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பாக களமிறங்கிய பி.பவித்திரா 1.46 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த சி.கெரினா 1.43 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சியின் மற்றொரு வீராங்கனையான வி.சுகிர்தா 1.38 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



மாவட்ட செயலகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியாக நடைபெற்றுவரும் தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான (திறந்த பிரிவு) 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தின் ஓர் பதிவு. (ம-422)

# ஈட்டியெறிதலில் பதக்கங்களை சுவீகரித்தது யாழ். மாவட்டம்



வவுனியா, நவ. 2
வடமாகாண ரீதியாக நடைபெற்று வரும் மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரின் ஓர் அங்கமான ஆண் களுக்கான திறந்த பிரிவு (வயதெல்லையற்ற) ஈட்டியெறிதலில் யாழ். மாவட்டத்துக்கு மூன்று பதக்கங்களும் கிடைத்துள்ளன.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரில் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த டபிள்யு. லிவிங்டன் 56.65 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப்பதக்கத்தையும் எம். சஞ்சீவன் 50.54 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் ஜெ.பிரகாஸ் 50.48மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கத்தைக் கைப்பற்றியது யாழ்.

வவுனியா, நவ. 2
மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான வடமாகாண தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு (அனைவருக்குமான) 200மீற்றர் ஓட்டத்தில் யாழ். மாவட்டத்துக்கு தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எம்.கமலினி 27.6 செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றிய அதேநேரம் மன்னார் மாவட்டத்தின் சார்பாக களமிறங்கிய என்.அஞ்சலா 28.3 செக்கன்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பாக களமிறங்கிய கியூ.குயின்சினி 29.2 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் தங்கத்தை கைப்பற்றியது யாழ்.



வவுனியா, நவ. 2
வடமாகாண மாவட்டச் செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளது யாழ். மாவட்டம்.

யாழ். மாவட்டத்தின் சார்பாக களமிறங்கிய கே.நவனீதன் 36 நிமிடங்கள் 10 செக்கன்கள் 6 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து தங்கத்தைக் கைப்பற்றினார். வெள்ளிப்பதக்கத்தினை முல்லைத்தீவை பிரதிநிதித்துவம் செய்த எல்.திவாகரன் 37 நிமிடங்கள் 34 செக்கன்கள் 2 மில்லி செக்கன்களிலும் வெண்கலப்பதக்கத்தைக் கிளிநொச்சியைப் பிரதிநிதித்துவம் செய்த இ.அனுயன் 38 நிமிடங்கள் 39 செக்கன்கள் 9 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்தும் கைப்பற்றினர். ஐயாயிரம் மீற்றர் ஓட்டத்திலும் கே. நவனீதன் தங்கப்பதக்கத்தையும் எல்.திவாகரன் வெள்ளிப்பதக்கத்தினையும் இ.அனுயன் வெண் கலப் பதக்கத்தையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

# தொடரை சமன் செய்யும் முனைப்பில் இங்கிலாந்து தீவிரம்




இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்றைய தினத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 234 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததுடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து நாள் முடிவில் இலக்குகள் இழப்பில்லாமல் 4 ஓட்டங்களை எடுத்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக கபீஸ் மற்றும் அசார் அலி. ஓட்டங்கள் எதனையும் பெறாது ஆட்டமிழந்தார் அசார். மலிக் நிதானித்து நிற்க மறுமுனையில் 27 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் கபீஸ். 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் ஆரம்ப வீரர்கள் இருவருமே களத்தில் இல்லை. மலிக்குடன் இணைந்தார் யனிஸ்கான். இருவருமே அரைச்சதம் கடக்கவில்லை. ஆனால் சொல்லிக் கொள்ளும் படியான கௌரவ ஓட்டங்களை எடுத்து மத்தியவரிசையில் சுமையை இலகுவாக்கினர். 38 ஓட்டங்களுடன் மலிக்கின் இன்னிங்ஸும், 31 ஓட்டங்களுடன் யுனிஸ்கானின் இன்னிங்ஸும் முடிவுக்கு வந்தது. களத்தில் பாகிஸ்தானின் தடுப்புச் சுவரான மிஸ்பா. நீண்ட இடைவேளையின் பின்னர் ஓர் அரைச்சதம் மிஸ்பாவின் பெயரில் பதிவானது. பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இன்னும் சில வருடங்கள் அணியில் நீடிக்க வெண்டும் என்று மிஸ்பாவிடம் கேட்டது சரிதான். ஆனால் பின்வரிசையில் எவருமே பத்து ஓட்டங்களை முழுமை செய்யாத நிலையில் திடீரென சரிவுகண்டு 234 ஓட்டங்களில் சுருண்டது பாகிஸ்தான். மிஸ்பா 71 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அண்டர்சன் 4 இலக்குகளையும் புரோட், சமித் பட்டேல், மொயீன் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து நாள் முடிவில் இலக்குகள் இழப்பின்றி 4 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மொயீன் 4 ஓட்டங்களுடனும் குக் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் களத்தில் உள்ளனர். (ம)

நியூ லலிதாஸ் ஜுவலறியின்
மாதாந்த சீட்டிழுப்பில்
குலுக்கல் முறையில்
தெரிவு செய்யப்பட்ட
வாடிக்கையாளர்களின் விவரம்
• சிவசரணம் சிவநந்தினி
பாரதி வீதி, பத்தமேனி அச்சுவேலி.
• சுப்பிரமணியம் சுரேஸ்
நாவற்குழி மேற்கு, கைதடி.
• ஈ.மயூரி
ஆலடி, கந்தரோடை, சுன்னாகம்.
மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்கள் விற்பனைச் சிட்டையுடன் வருகை தந்து பரிசினைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
நியூ லலிதாஸ் ஜுவலறி
இல.30,32 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 5511



## அனுஸ்காவுக்குப் பதில் பிரியங்கா

இந்திய அணியின் தோல்விகளுக்கு வீரர்களின் மனைவியரை குறைகூறுவது இந்திய ரசிகர்களுக்கு கைவந்த கலை. அந்த வரிசையில் தற்பொழுது இணைந்துள்ளார் ரெய்னாவின் மனைவி பிரியங்கா.

கடந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் ஆஸ்திரேலியாவுடன் இந்திய அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை இழந்ததுக்கு டோனியின் மனைவி சாக்சிதான் காரணம் ஏனெனில் சாக்சியால் டோனியின் கவனம் சிதறுகிறது என்றார்கள். உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதியில் அடைந்த தோல்விக்கு இந்திய அணியின் உபதலைவரான கோக்லியின் காதலி அனுஸ்கா சர்மா தான் காரணம். ஏனெனில் அவர் மைதானத்துக்கு வந்தமையால்தான் கோக்லி விரைவில் ஆட்டமிழந்தார் என்று வலைத்தளங்களில் வறுத்தெடுத்தார்கள். தற்பொழுது தென்னாபிரிக்காவுக்கு எதிரான தோல்விக்கு ரெய்னாவின் மனைவி பிரியங்காதானாம் காரணமாம். ஏனெனில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் ரெய்னா பெரிதாக விளையாடவில்லையாம். பிரியங்காவால் அவரது கவனம் சிதறிவிட்டதாம் என சமூக வலைத்தளங்களில் பரவலான கருத்துக்கள் படிப்படியாக வர ஆரம்பித்திருக்கின்றன. மொத்தத்தில் அனுஸ்கா தப்பினார் பிரியங்கா மாட்டிக் கொண்டார். (ம)

இந்தியன் செலக்‌ஷனின்
MEGA SALE !
இந்தியன் பஜார்



இம் முறை தீபாவளிப் பண்டிகையை இந்தியன் செலக்‌ஷனுடன் கொண்டாடுங்கள்.
பட்டுப்புடைவைகள் மற்றும் சல்வார், சல்வார் துணிகள், ஆண், பெண் மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத்தெரிவுகள் மாபெரும் விலைத் தள்ளுபடியில்!!!



இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம்: 01.11.2015 - 10.11.2015 வரை
நேரம்: காலை 9.00 - இரவு 11.00 வரை
2 டொப் சல்வார், துணி - 1000/=
3 டொப் சல்வார் துணி - 1500/=
(65722) (14,15,16)

# வீராங்கனைகளுள் முதல் வீராங்கனையாக மாறினார் போலந்தின் ரட்வன்ஸ்கா



முதற்தர வீராங்கனைகளுக்குமான ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளார் போலந்தின் ரட்வன்ஸ்கா.

தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்குமாக வருட இறுதிப்பகுதியில் ரென்னிஸ் தொடர் ஒன்று நடத்தப்படுவதுண்டு. அந்த வகையில் நடப்பு வருடத்தின் தொர்டர், சிங்கப்பூரில் சமீப நாள்களாக நடைபெற்று வந்தது. பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதியாட்டத்தில் ரட்வன்ஸ்காவை எதிர்த்து செக்குடியரசின் பெட்ரா கிவித்தோவா மோதினார்.

முதல் செற்றை ரட்வன்ஸ்கா 6-2 என எளிதில் கைப்பற்ற இரண்டாவது செற்றை கிவித்தோவா 6-4 எனக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். இதனால் வெற்றியை நிர்ணயிக்கும் 3ஆவது செட் மிகவும் பரபரப்பாக சென்றது. ஒரு கட்டத்தில் இருவரும் 3-3 என சமநிலையில் இருந்தனர். அதன்பின் ரட்வன்ஸ்காவின் கையே ஓங்கியது. முடிவில் 6-3 என்று இறுதி செற்றையும் கைப்பற்றி முன்னணி வீராங்கனைகளுள் முதல் வீராங்கனையாக மாறினார். (ம)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
இன்றுடன் பதிவுகள் நிறைவடைகின்றன
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
வல்வெட்டித்துறை 0776697960

## ஆனந்த் அதிர்ச்சித் தோல்வி



ஸ்பெயினில் நடைபெற்றுவரும் செஸ் தொடரின் நான்காவது சுற்றில் நடப்பு சம்பியனான இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

நான்காவது சுற்றில் ஆனந்த் நெதர்லாந்தின் அனிஸ் கிரியை எதிர்கொண்டார். இதுவரை ஆனந்தை வீழ்த்தாத கிரி இந்த ஆட்டத்தில் அவரை வீழ்த்தி அதிர்ச்சியளித்தார். 27 ஆவது காய் நகர்த்தலுக்குப் பின்னர் ஆனந்த் தனது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாய் ஆயிற்று. முன்னதாக முடிவடைந்த முதல் மூன்று சுற்றுக்களிலும் கூட ஆனந்த் ஓர் வெற்றியையும் பதிவுசெய்யாமல் அத்தனையையும் சமன் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 2.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.